கல்கி

KALKI
8.3.87
ரூ. 1.50



பர்னுலா, ரெபைரோ:


பதவியில் நிலைப்பார்களா? பயங்கரவாதிகளை வெல்வார்களா?


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸூப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸூப்பர் ரின்– அதி வெண்மை.
இதோ டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
RIN 115 2416 TM

பஞ்சாப்:

பாமர மக்களின் பலி பீடம்!

* பொற்கோவிலின் ஒரு தோற்றம்



பசுமைப்புரட்சிக்கு வித்திட்ட மாநிலம் பஞ்சாப். ஆனால் இன்று, 'கொலைக் களம்' என்ற சொல்லின் விளக்கத்தைத் தருகிற மாதிரி, பஞ்சாப் உலக நாடுகளின் கவனத்தைப் பெற்றுவிட்டது.

'பஞ்சாபில் படுகொலை' 'பஞ்சாபில் பாங்குக் கொள்ளை' 'பஞ்சாப் அரசியல் பிரமுகர் சுடப்பட்டுச் சாவு' ஆகிய தலைப்புகளைப் பத்திரிகைகளுக்கு வழங்கும் மிக முக்கியமான மாநிலமாகப் பஞ்சாப் திகழ்கிறது. இது வேதனையை மட்டுமல்ல; காலத்தின் சோதனையையும் வெளிப்படுத்துகிறது. இதற்கெல்லாம் காரணத்தை அறிய முயல்கிற போது, நதிமூலம் அறிவதற்கான முயற்சி என்றும், சதிமூலம் புரிபடாத குழப்பம் என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

இப்போதெல்லாம் சண்டிகர் — தில்லி; தில்லி — சண்டிகர் விமானங்கள் வாரத்திற்கு ஒருமுறையாவது பஞ்சாப் கவர்னர் சித்தார்த்த சங்கர்ரேயையோ, பஞ்சாப் முதல்வர் பர்னாலாவையோ, பஞ்சாப் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஜெ. எப். ரெபைரோவையோ, இந்திய அரசின் உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கையோ அல்லது பாதுகாப்பு, உள்துறை உயர் அதிகாரிகளையோ ஏற்றிச் செல்வதும், இறக்கி விடுவதுமான பணியில் ஈடுபட்டிருக்கின்றன.

பிரதம மந்திரி அமைச்சகமும், உள்துறை அமைச்சகமும் தலையைப் பிய்த்துக் கொள்கிற மாதிரி, பஞ்சாப் பிரச்னை பற்றிய 'பைல்'களைக் கட்டுக் கட்டாக அடுக்கி வைத்துக் கொண்டு நிம்மதியில்லாமல் இருக்கிற நிலை.

எதிர்க் கட்சியினரோ, 'பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டு', 'அப்பாவி மக்களுக்குப் பாதுகாப்பு கொடு' என்று கோஷம் போட்டு பந்த் நடத்துகிறார்களேயொழிய, எப்படி இந்த பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்பதற்கு ஏற்கத்தக்க உருப்படியான யோசனை



* பாதிக்கப்படுகிறவர்கள் அப்பாவி மக்களே!

தருவதில்லை; தர முடியவுமில்லை. இந்தச் சூழலில் ஒருவர் கதையை மற்றொருவர் கேட்டுவிட்டுப் பரிதாபப்படுகிற மாதிரி ஒரு நாடகக் காட்சி ஏற்படுத்தப்பட்டு அதில் பிரதமரும், பர்னாலாவும் திறம்பட நடிப்பதாகவே எதிர்க்கட்சிகள் உட்பட அனைவரும் உணருகின்றனர்.

ஒருபுறம் பிரச்னைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு அரசியல்வாதிகளின் வெற்றுப் பேச்சு. மறுபுறம் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாதபடி தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள். இந்த இரண்டு வகையான சூழ்நிலையில் பாதிக்கப்படுகிறவர்கள் 'புல்லட் ப்ரூப்' அணிகிறவர்களும், 'செக்யூரிட்டி' சூழப் பெற்றவர்களும் அல்லர். அப்பாவி மக்களே! அதுவும் ஏழை மக்கள். பஞ்சாப் பிரச்னை என்றால் என்ன? என்று கூட அறிந்து கொள்ளத் தெரியாத, விரும்பாத அப்பாவி மக்களில் பலர், குண்டுக்கு இரையாகிற கொடுமை பஞ்சாபில் நடக்கிறது.

ஜூன் மாதம் வரை ஜனாதிபதியாக இருக்கப் போகிற கியானி ஜெயில்சிங், பஞ்சாபின் முதல்வராக இருந்தபோதுதான் பஞ்சாப் மாநிலம் முழுவதிலும் குருத்வாராக்களை அதிக அளவில் ஏற்படுத்தினார். ஆன்மிக உணர்வை மக்களிடம் ஏற்படுத்திவிட்டோம் என்று எண்ணினார். ஆனால், அவையே பின்னாளில், 'ஆயுதக் கிடங்கு'களாக மாறிப் போயின! கிடங்குகளாக மாற்றிக் கொள்ள அனுமதித்த முதல்வர் பிரதாப் சிங் கெய்ரான், தில்லியிலிருந்து சண்டிகர் போகிற வழியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பஞ்சாப் மக்களின் தலைவர்களாகத் தீவிரவாதிகள் தோன்றினர். அதில் 'பிந்தரன்வாலா' மத குருவாகவே மாற்றப்பட்டுத் தொழப்பட்டார். தனி நாடு விரும்பிய மக்களைத் தட்டிக் கொடுத்த 'பிந்தரன்வாலா'வை அழிக்க இந்திய அரசு, 'ப்ளூஸ்டார் ஆபரேஷன்' என்ற நீல நட்சத்திர நடவடிக்கையை எடுத்தது. விளைவு: பிந்தரன்வாலே சுட்டுக் கொல்லப்பட்டார். தீவிரவாதிகள் கொதித்தெழ, இந்திரா காந்தி திட்டமிட்ட முறையில் சுடப்பட்டார்.

பின்னர் வந்த ராஜீவ் பிரச்னைக்கு அமைதியான முறையில் தீர்வு காண முடியும் என்று நம்பினார். பிரிவினை கோரிய தீவிரவாதிகளிடமிருந்து மிதவாதிகளைப் பிரித்து லோங்கோவாலுடன் ஒப்பந்தம் செய்தார். தேர்தலை நடத்தி ஜனநாயகத்தைப் பஞ்சாபில் மீண்டும் மலரச் செய்தார். இவை தீவிரவாதிகளைத் திருப்திப்படுத்தவில்லை என்பதோடு ஆத்திரத்தை அதிகரித்தன. ராஜீவைக் கொல்லவும் பல முயற்சிகளைத் தீவிரவாதிகள் ரகசியமாக மேற்கொள்கின்றனர். தீவிரவாதிகளின் தேவைகள்தாம் என்ன? அவர்களுக்கு லோங்கோவால் ஒப்பந்தம் திருப்தி தரவில்லை. காலிஸ்தான் என்ற சுதந்திர தனி நாடுதான் அவர்கள் நோக்கம், லட்சியம் எல்லாம். காலிஸ்தான் என்ற பலிபீடத்தில் அப்பாவி மக்கள் நாள்தோறும் செத்து மடிகிறார்கள். சில காலம் முன்புவரை ஹிந்துக்களைக் கொன்ற சீக்கியத் தீவிரவாதிகள் இப்போது சீக்கியரையே கொல்கின்றனர்— தீவிரவாதிகள் பற்றி போலீஸுக்குத் தகவல் கொடுத்தால் இதுதான் கதி என்று உணர்த்துவதற்காக!

பர்னாலாவின் போக்கோ நமக்குப் புதிராக இருக்கிறது. பஞ்சாபில் பயங்கரவாதிகள் சலசலப்புக் காட்டுவதற்கு பாகிஸ்தான் ஆதரவுதான் காரணம் என்பதை பர்னாலா ஒப்புக் கொள்கிறார். ஆனால், அதே நேரத்தில் பாகிஸ்தான் எல்லையில் நமது இராணுவத்தை நிறுத்தி, பாதுகாப்பு வளையம் எனப்படும் 'செக்யூரிட்டி பெல்ட்' அமைக்கும் யோசனையைத் தேவையில்லை என்று நிராகரிக்கிறார். ராணுவத்தினரால் எல்லைப்புற பஞ்சாப் மக்கள் பீதி கொள்வார்கள் என்றோ துன்பமடையலாம் என்றோ பர்னாலா எண்ணுவாராயின் அது தவறான கணிப்பு. நமது ராணுவம் ஒழுக்கக் கட்டுப்பாடு உடையது என்பது ஒருபுறமிருக்க, சீக்கிய தீவிர

வாதிகளால் ஏற்படுகிற துன்பத்தைவிட ராணுவத்தை எல்லையில் நிறுத்துவதால் பெரிய துன்பம் ஏதும் யாருக்கும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

மற்றொன்று: சிரோமணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டித் தேர்தலில், பர்னுலாவின் பழைய நண்பரும் புதிய பகைவருமான ஜி.எஸ். தோரா வெற்றி பெற்றார். பர்னுலாவின் ஆதரவு வேட்பாளருக்குத் தோல்வி கிட்டியது. விளைவு — சில நாட்களில் தோரா சிறையிலடைக்கப்பட்டார். இதே தோரா தம்முடைய வேட்பாளர் என்ற ஞானஸ்நானம் பெற்றிருந்தால் அரசியல் பழிவாங்கலை பர்னுலா செய்திருக்க மாட்டார் அல்லவா! தோரா நமது வேட்பாளராகத் தேர்தலில் நிற்கட்டுமே!' என்று சில காலம் முன்பு நினைத்தவர்தானே பர்னுலா?

'பயங்கரவாதிகளை முழுவதுமாகக் களைந்துவிட்டோம்', என்று முன்பு சொன்ன பர்னுலா, இன்று என்ன சொல்கிறார். '....களைவோம்' என்கிறார். ஆக, பயங்கரவாதத்தை அறவே அகற்ற முடியாது என்பதை பர்னுலா ஒப்புக் கொள்கிறவராகிறார்.

பதவி ஏற்ற புதிதில் தீவிரவாதிகளின் தோட்டாக்களுக்குச் சவால் விட்டார் பஞ்சாப் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ரெபைரோ. இன்று அவரும்கூட, 'தீவிரவாதத்தை வளர்த்துவிட்டோம். அது நன்றாக வளர்ந்து வேரோடிவிட்டது. அதனை இனி அகற்றுதல் முடியாது. அதனோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்!' என்கிறார்! அப்படியானால் பயங்கரவாதத்துக்கும் படுகொலைகளுக்கும் முடிவே கிடையாதா?

தில்லியில் வாழ்கிற பஞ்சாப் அகதிகள் முகாமுக்குச் செல்கிறபோது, அவர்களில் ஒரு சிலர் தீவிரவாதிகளின் ஒற்றர்களாகச் செயல்படுபவர்களைப் போன்ற தோரணையுடன் காட்சியளிக்கிறார்கள். வயதான சிலர், நாட்டு ஒற்றுமையை வழக்கம்போல் வலியுறுத்துகிறார்கள். தங்களைக்காக்கவேண்டிய மாபெரும் பொறுப்பு இந்திய அரசுக்கே என்பாரும் உண்டு. பஞ்சாபில் தீவிரவாதத்தின் விளைவாக நடைபெறும் எந்த ஒரு செயலையும் தீரச் செயலாக எண்ணி மகிழ்கிற ஒரு சில தில்லிவாழ் அகதிகள், பஞ்சாபில் வாழவும் பயப்படுகிறார்கள்; அதே சமயம், அடைக்கலமான இடத்தையும் குறை கூறுகிறார்கள். இத்தகைய மனநிலை உடையவர்களை இந்திய அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது?


இந்நிலையில் வெளிநாடுகளில் குடியேறிப் பணக்காரர்கள் ஆகிவிட்ட சீக்கியர்கள், தீவிரவாதிகளின் அங்கீகாரம் பெற்ற தலைவர்களாக உயர்ந்து பண உதவி செய்கிறார்கள். பாங்குகளில் கொள்ளையடிக்கப்படும் பணமும் உதவுகிறது.

தீவிரவாதிகளின் வன்முறைச் செயல்களால் அவதிப்படுகிற பஞ்சாப், இப்போது மதவாதிகளின் குழப்பத்தாலும் சீர்குலைந்து வருகிறது. அரசியல்தான் — எல்லாவிதமான தீய விளைவுகளையும் ஏற்படுத்தும் என்கிற நிலையை, மதம் மாற்றிவிட்டது!

சீக்கிய மதம் பற்றி உங்களுக்குத் தெரியுமே! இதில் மதகுருமார்களின் ஆணையே வேத வாக்காக எடுத்துக் கொள்கிற பழக்கம் எளிய சீக்கிய மக்களுக்கு உண்டு. மதகுருமார்கள் தவறு செய்ய மாட்டார்கள்; தங்களுக்கு நல்லதையே செய்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் உருவான பழக்கம் இது. இதனால் மதகுருமார்கள் நினைத்தால் எதையும் நடத்திக் காட்டலாம். என்ற விரும்பத்தகாத நிலை உருவாகிவிட்டது. உதாரணமாக மதகுருவாக நடந்து கொண்ட பிந்தரன்வாலேயை எண்ணிப் பாருங்கள். மதம் என்கிற கவசத்தை அணிந்து கொண்டு பயங்கரவாதத்தை வளர்த்து ஆளாக்குகிற பணியை, மதச்சடங்காகவே அவர் ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். அவரைப் பின்பற்றி வேறு சிலரும் பாமர மக்கள் தங்களிடம் வைக்கின்ற நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்து நாட்டைத் துண்டாடவும் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கவும் திட்டமிடுகின்றனர். இதையொட்டித்தான் அடுத்த 48 மணி நேரத்திற்குள் 48 அகாலிதள எம்.எல்.ஏ.க்களும் ராஜினாமா செய்ய வேண்டும் என்று சீக்கிய மத தலைமைப் பீடமான 'அகால் தக்த்' அறிவித்தது. இதற்கு அந்தத் தலைமைப் பீடம் என்ன காரணம் சொல்கிறது?

பஞ்சாபில் சீக்கிய ஒற்றுமை பலப்படுத்

* ராணுவப் பாதுகாப்பு.





ரெபைரோ பொற்கோவிலைப் பார்வையிடுகிறார்.

தப்பட வேண்டும் என்ற இவர் ஞானோதயம் தலைமை மதகுருமார்களுக்கு ஏற்பட்டுள்ளதாம். எனவே அகாலிதளம் என்ற பெயரில் சிதறிக் கிடக்கும் எல்லாக் கட்சிகளையும் ஒன்ருக இணைத்து 'ஐக்கிய அகாலிதள்' என்ற புதிய கட்சியைத் துவக்கப் போகிருர்களாம்! எனவே தலைமை மதகுருமார்கள் இவர் ஒன்றிணைந்து புதிய ஐக்கிய அகாலிதள் கட்சியுடன் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு, அனைத்து அகாலித்ளக் கட்சிகளுக்கும் எச்சரிக்கை விடுத்தனர்! ஒருசில தலைவர்கள் தவிர, மற்றவர்களுக்கு இந்த எச்சரிக்கை எரிச்சலைத் தந்தது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள ஆளும் அகாலிதள (லோங்கோவால்) கட்சியைக் கலைப்பதும், மதகுருமார்களிடம் மண்டியிட்டுக் கிடப்பதும் ஜனநாயக முறைக்கு ஒவ்வாதது என்ற எண்ணம் பஞ்சாப் முதல்வர் பர்னலாவுக்கு ஏற்பட்டது. 'மதம் வேறு; அரசியல் வேறு!' மதத்தைப் பொறுத்தவரை, மனத் தூய்மையுடன் கட்டளைகளை ஏற்கலாம்; ஆனல் அரசியல் நோக்கில் இடப்படுகிற மதக் கட்டளைகளை மதிக்க முடியாத பர்னலா இந்த எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தவில்லை. இதற்கு இன்னெரு காரணமும் இருந்தது. எல்லா அகாலிதளக் கட்சிகளையும் கலைத்துவிட்டு ஐக்கிய அகாலிதளம் என்ற புதிய கட்சியிடம் அனைவரும் ஐக்கியமாகி விட வேண்டும் என்று கூறும் மதத் தலைவர்கள் தாங்களே பயங்கரவாதிகளிடம் ஐக்கியமாகிவிட்டிருப்பதாகவும் புதிய ஐக்கிய அகாலிதளக் கட்சி பயங்கரவாதிகளின் பிடியில் சிக்கியிருப்பதாகவும் கருத நிறையவே இடம் இருக்கிறது. சொல்லப் போனல் கொலை கொள்ளை போன்ற காரியங்களால் கலிஸ்தான் என்ற தனி சுதந்திர நாட்டினை அடைய எண்ணி ஏமாற்றமடைந்துள்ள பயங்கரவாதிகள் இப்போது மதத்தையே தங்கள் அடுத்த ஆயுதமாகப் பிரயோகிக்கின்றனர் எனலாம். இதனை நன்ருக



ரெபைரோகூட, 'தீவிரவாதத்தை வளர்த்து விட்டோம். அது நன்ருக வளர்ந்து வேரோடிவிட்டது. அதனை இனி அகற்றுதல் முடியாது. அதனேடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்கிருர்!

உணர்ந்த பர்னலா, சீக்கிய மத தலைமைப் பீடத்தின் உத்தரவுகளை ஏற்காததோடு எதிர் நடவடிக்கை எடுத்து பலப்பரீட்சையில் இறங்கவும் துணிந்தார். மதத் தலைவர்களை எதிர்ப்பதாகவும் அகாலி ஒற்றுமைக்கு இடையூறு செய்வதாகவும் சாமானிய மக்கள் தம்மைக் கருதக் கூடும் என்ற நிலையிலும் பர்னலா இப்படி தைரியமாகச் செயலாற்றியது சரித்திரத்தில் பொன்னெழுத்தில் எழுதப்பட வேண்டிய சம்பவமாகும்.

பிப்ரவரி மாதம் 11ம் தேதி பிற்பகல் இரண்டு மணிக்குள் ஐந்து தலைமை மதகுருமார்களிடம் விளக்கம் தர பர்னலா சென்றிருக்க வேண்டும். ஆனல் அவர் செல்லவில்லை.

'சீக்கிய மதத்திற்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்' என்ற பொருளைத் தரும் பஞ்சாபி வார்த்தையான 'தங்க்கையா' இப்போது இந்தியா முழுவதும் அனைவரும் அறிந்த சொல்லாகிவிட்டது. 'தங்க்கையா' என்று பர்னலா அறிவிக்கப்பட்டுவிட்டார். அவர் மீது, ஏராளமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. 1. மதகுருமார்களின் கட்டளைகளைப் புறக்கணித்தது; 2. மதகுருமார்கள் விரும்பிய ஒற்றுமை உணர்வை மதிக்காதது; 3. தலைமை குருமார்களுக்கு மரியாதை காட்டும்விதமாக அவர்களை நேரில் வந்து சந்திக்காதது; 4. சீக்கிய சமுதாயத்தில் சுயநலம், வேறுபாடுகள் ஆகியவற்றை வளர்த்தது..... என்றிப்படி தலைமை மத பீடம் பர்னலா மீது பல குற்றச்சாட்டுக்களை அள்ளித் தெளித்தது.

'ஹுக்கும் நாமா' எனப்படும் மதகுருவின் பெயரால் வெளியிடப்பட்ட ஆணையால் பர்னலா அயர்ந்துவிடவில்லை. தமக்குப் பதில் தமது பிரதிநிதியைச் சீக்கிய மதத் தலைமைப் பீடத்தினிடம் அனுப்பி பிரச்னைகளை முறியடித்துவிட எண்ணினர்.

மதகுருமார்கள், சும்மா இருப்பார்களா? பர்னலாவை இழுக்க முடியாவிட்டாலும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்கள், அமைச்சர்கள் ஆகியோரை இழுத்துவிடலாம் என்று திட்டமிட்டு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அவர்கள் புதிய அகாலிதளத்தில் இணைந்துவிட வேண்டும் என்று ஓயாத எச்சரிக்கை செய்தனர். பஞ்சாபின் அமைச்சர் ஹர்பஜன் சிங் சந்து சீக்கிய மதத் தலைமைக் குருமார்களுக்கு ஆதரவாக நடந்தார் என்று



பரிட்சை நெருங்கிடும் காலம்?

கவனமாக படித்திடும் நேரம்

முழுதும் தயாராயிருந்திட வேண்டிய காலம்

காம்ப்ளான்® பருக வேண்டிய நேரம்.

காம்ப்ளான்® ஒன்றில்தான் அவனுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் 23 மூலாதார சத்துணவுகள் உள்ளன.

குழந்தைகள், முக்கியமாக பரிட்சைக்கு படிக்கும் காலத்தில், திடமாக இருந்திடுவது அவசியம். அதனால்தான் பரிட்சை நடக்கும் நேரம் காம்ப்ளான் நேரம் என்று அன்னையர் அறிவர்.

உடல் வளர்ச்சியில் பங்கு பெறுவதே புரதம் என்ற சத்துதான். காம்ப்ளானில் குழந்தைகளுக்குத் தேவையான புரதம் (20%) இருப்பது மட்டுமல்ல, அப்புரதம் மிகச்சிறந்த புரதமுமாகும் (பால் புரதம்). அத்துடன், அது குழந்தைகளுக்கு தேவையான அதி ஊட்டமளிக்கும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், தாதுக்கள் ஆகிய 22 கூடுதல் மூலாதார சத்துணவுகள் கொண்டதாகும்.

துவங்குங்கள் காம்ப்ளான் உங்கள் குழந்தைகளுக்கு—அன்றுடம் இருவேளை. நினைவில் இருக்கட்டும் டாக்டர்களின் சிபாரிசுபெற்ற திட்டமிட்ட உணவு காம்ப்ளான்.

காம்ப்ளான் கிடைக்கிறது, இனிய சுவை களாம் சாக்கலேட், ஏலக்காய்—குங்குமப்பூ, ஸ்ட்ராபெர்ரியும், சாதா ரகத்திலும். குழந்தைகள் மிகவும் விரும்பிடும் சுவைகள்.



பால் சேர்க்கத் தேவையில்லை



884,GLC,11 Tam.

காம்ப்ளான்® — திட்டமிட்ட பரிபூர்ண உணவு

அமைச்சரவையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டார். சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கும் முயற்சிகள் தொடர்கின்றன.

தாராசிங் கோஷ்டியைச் சேர்ந்த அகாலி தள் கட்சித் தலைவர் ரச்பால் சிங்கும் பர்னுலாலாவைப் போலவே 'தங்கையா' ஆனுர். அவரும் சீக்கிய மதத் தலைவர்களின் போக்கினைக் கண்டித்து வருகிருர்.

சீக்கிய மத குருமார்கள், நாட்டின் ஒற்றுமைக்குச் சிறிதளவும் பாடுபடாமல், பயங்கரவாதத்துக்குத் துணை போகிறவர்கள் என்ற கருத்தை, விவரம் அறிந்த சீக்கியர்களே ஏற்றுக் கொள்கிருர்கள்.

தற்போது எரிகிற பிரச்னையாக உருவாகியிருக்கும் பஞ்சாப் நிலைமையை, மத்திய அரசு பார்வையாளராகத்தான் நோக்கி வருகிறது. பர்னுலாவின் ஆட்சிக்கு ஆபத்து விளையுமேயானுல், தங்களின், இ.காங்கிரஸ் உறுப்பினர்களின் ஆதரவைத் தர மத்திய அரசு தயாராய் இருக்கிறது. வன்முறைக் கும்பலோ பர்னுலா, மதத் தலைவர்கள் போராட்டத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருவதால் தாற்காலிகமாக வேனும் கொலை, கொள்ளையைச் சிறிதளவு மறந்திருந்தது.

'பயங்கரவாதிகளை முழுவதுமாகக் களைந்து விட்டோம்' என்று முன்பு சொன்ன பர்னுலா, இன்று, 'களைவோம்' என்கிருர். ஆக, பயங்கரவாதத்தை அறவே அகற்ற முடியாது என்பதை அவர் ஒப்புக் கொள்கிருர்.

பிப்ரவரி மாதம் 20 ம் தேதி லோங்கோவால் கிராமத்தில் பர்னுலா நடத்திய மாநாட்டுக்கு அரசியல் தலைவர்களும் சீக்கிய மக்களும் லட்சக் கணக்கில் தூண்டுதலின்றித் திரண்டு வந்து தங்கள் ஏகோபித்த ஆதரவை பர்னுலாவுக்கு மகத்தான முறையில் தெரிவித்தனர். இதுவே பஞ்சாபின் பாமர மக்கள் நாம் நினைப்பதுபோல் அத்தனை அப்பாவிகள் அல்ல என்றும் அவர்கள் விஷய ஞான முன்னவர்கள் என்றும் உணர்த்தியுள்ளது. அகாலிதளத்தின் பல்வேறு பிரிவுகள் ஒருங்கிணைந்தாலும் ஒவ்வொரு குட்டித் தலைவருக்கும் பர்னுலா இன்று அமர்ந்துள்ள பதவி நாற்காலி மீது ஒரு கண் என்னும்போது அந்த ஐக்கிய அகாலிதளம் எத்தனை காலம் ஐக்கியப்பட்டு இருக்கும் என்று பஞ்சாப் மக்கள், குறிப்பாகச் சீக்கியர்கள் சிந்திக்கத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள். மேலும் பஞ்சாபுக்கு வெளியே இந்தியாவெங்கும் பரவியுள்ள லட்சக்கணக்கான சீக்கியர்களின் கதி என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது இவர்கள் பிரிவினைவாதிகளுக்கு— பயங்கரவாதிகளுக்கு ஆதரவு தரக் கூடாது என்பதை நன்கு புரிந்து கொண்டிருக்கிருர்கள்.

இதற்கிடையில் இந்திய நாட்டின் எதிர்க் கட்சிகள், மத்திய அரசுடன் இணைந்து பஞ்சாப் பிரச்னையைத் தீர்க்க ஒத்துழைக்க முன்வந்துள்ளன. இது பர்னுலாவின் கரத்தைப் பலப்படுத்தியுள்ளது.

என்றாலும் தீவிரவாதிகள் அவ்வளவு சுலபமாக அடங்கிவிடப் போவதில்லை. அவர்கள் மறுபடியும் வன்முறையின் துணையையும் மீண்டும் மதத் தலைவர்களின் துணையையும் நாடுவார்கள். கலகங்களை, கிளர்ச்சிகளைத் தொடர்வார்கள்.

பயங்கரவாதிகளை அடக்குவது என்பது வேறு; பயங்கரவாதத்துக்கே இடமில்லாமல் செய்துவிடுவது வேறு. ராஜீவ் — லோங்கோவால்ஒப்பந்தம்துரிதமாக அமுலானுல் எல்லா ஷரத்துக்களும் இல்லையென்றுலும் உடனடி சாத்தியமான ஷரத்துக்கள் தாமதமின்றி நிறைவேற்றப்படுமானுல் பயங்கரவாதிகளுக்குத் தங்கள் செயலை நியாயப்படுத்த ஒரு காரணம் இல்லாது போகும். மக்களிடம் அவர்கள் பெற்றுள்ள கொஞ்ச நஞ்ச அனுதாபத்தையும் அடியோடு இழப்பர். இதைப் புரிந்து கொண்டு பிரதமர் செயலாற்றுவாரா?



— தில்லி ஜெயமகன்

மேலட்டை வண்ணப்படங்கள்,
புகைப்படங்கள்:
பானு இந்தியா
வி. எஸ். ராமநாதன்

நான் கொலை செய்யவில்லை!

அவனை அழைத்துப் போகப் போலீஸ் கார் வந்துவிட்டது.

விடியா தன்னைப் பிடித்திருந்தவர்களிடமிருந்து திமிறினாள்.

"நான் கொலை செய்யவில்லை, நான் கொலை செய்யவில்லை" என்று உச்சக் குரலில் கத்தினாள். நெருங்கி வரும் போலீஸ் காரரிடமிருந்து ஒளிந்து கொள்ளும் முயற்சியாய்ச் சுவரோரம் ஒடுங்கிக் கொண்டாள்.

"என்னை ஒன்றும் செய்யாதீர்கள்: நான் அவனைக் கொல்லவில்லை" அழுது துடித்தாள்.

"நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன், விடியா. நீ நிரபராதியா, இல்லையா என்பதைநீதிபதிதீர்மானிக்கட்டும். நான் உன்னை நீதிமன்றத்திற்குத்தான் அழைத்துப் போக வந்திருக்கிறேன்" என்றான் டேவிட்—போலீஸ்காரன்.

"மாட்டேன். நான் எந்த ஆளையும் நம்பி வரமாட்டேன்."

"உனக்காகவே நம்முடன்ஒருபெண்போலீஸும் வருகிறாள். நிக்கி, நீ எடுத்துச் சொல்."

நிக்கி என்றழைக்கப்பட்ட அந்தப் பெண் போலீஸ் விடியாவின் கைகளில் விலங்கைப் பொருத்தினாள். "வா, நீ குற்றவாளியில்லை என்று நீதிபதி தீர்ப்புச் சொல்ல நாங்கள் பிரார்த்திக்கிறோம்" முகத்தில் சிரிப்பு, குரலில் நட்பு இருந்தாலும் அவள் விடியாவைப் பிடித்த பிடியில் ஒரு போலீஸின் உறுதி இருந்தது.

கார் சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது. டேவிட் ஓட்டினான்.

பின் இருக்கையில் விடியாவின் விலங்கு வளையத்தை கார் கதவின் பிடியுடன் இணைத்திருந்தார்கள். சற்று ஒதுங்கி உட்கார்ந்து, நிக்கி ஒரு கனமான கதைப் புத்தகத்தை, அடையாளப் பேப்பர் வைத்த பக்கத்தில் திறந்து படிக்க ஆரம்பித்தாள்.

"கொலைக்காரர்களைப் பிடிக்கப் போனால்கூட, நீ புத்தகம் படித்துக் கொண்டே கோட்டை விடப் போகிறாய் நிக்கி" என்றான் டேவிட், அரைச் சிரிப்போடு.

"பாதையைப் பார்த்து நீ ஓட்டு, போதும்...." என்றாள் நிக்கி, புத்தகத்திலிருந்து நிமிராமலே.

திடீரென்று காரின் சீரான ஓட்டம் மாறிக் குதித்துக் குதித்து நகரத் தொடங்கியது.

"ஏய், நேர்ப் பாதையை விட்டுவிட்டு ஏன் இந்த ஒட்டை



ரோட்டில் நுழைந்தாய், டேவிட்?" நிக்கி பதற்றத்துடன் கேட்டாள்.

"பேசாமல் இரு. குறுக்கு வழியில் சீக்கிரம் போய்விடலாம்" டேவிட் மண்பாதையில் தளும்பித் தளும்பிக் காரைத் திருப்பினான்.

"டேவிட், வேண்டாம். இது டிபார்ட்மெண்டின் காரில்லை. வாடகைக் கார், வழியில் மக்கர் செய்து நின்றுவிட்டால் மெஸேஜ் கொடுக்க, வயர்லெஸ் வசதி கூடக் கிடையாது."

"நீ நம்பிக்கையோடு ஒன்றுமே பேச மாட்டாயா, நிக்கி?" டேவிட் பற்களை நறநறத்தான்.

விடியா பிணைக்கப்பட்ட விலங்குடன் காரில் துள்ளித் துள்ளித் தவித்தாள்.

ஐந்து கிலோ மீட்டரைக் கடப்பதற்குள் கார் சாலையின் அத்தனை புழுதியையும் தன் மேல் போர்த்திக் கொண்டுவிட்டது. பாதை ஒரு சீராக இல்லாமல் நிலாவின் மேல்பரப்பு போல் குண்டும், குழியுமாக இருந்து காரைப் பகடைக்காய் போல உருட்டிவிட்டது.

டேவிட் பிடிவாதக்காரன். ஆரம்பித்த பாதையில் தொடர முடிவு செய்துவிட்டான். இன்னும் சில குலுக்கல்களுக்குப் பிறகு எதிரே ஒரு ஹோட்டல் வந்தது. தெருவோர ஹோட்டல்.

திரைவிழாப் படக்கதை

''எனக்குப் பசிக்கிறது'' என்றான் டேவிட்.

''எனக்கும்தான்'' என்றாள் நிக்கி. ''வா மூவரும் சாப்பிடலாம்.''

''நான் வரமாட்டேன்'' என்றாள் விடியா. ''இந்த மாதிரி ஹோட்டலைப் பார்த்தால் எனக்கு அந்த மோசமான நாளின் நினைவு வந்துவிடும். நான் செய்யாத கொலைக்காக என்னை இழுத்துப் போகும் உங்கள் மேல் கோபம் வந்துவிடும்'' விடியா கண்ணீரை அடக்கிக் கொண்டு சொன்னாள்.

ஹோட்டல் வாசலில் காரை நிறுத்தி விட்டு, அவர்கள் இறங்கினார்கள். விடியாவின் விலங்கைக் காரிலிருந்து விடுவித்துத் தெருவோரம் இருந்த ஒரு தண்ணீர்க் குழாயில் மாட்டினான் டேவிட்.

''டேவிட், இது அநாகரிகமான செயல்'' நிக்கி ஆட்சேபித்தாள்.

''கொலைகாரர்களை எப்படிக் கையாள வேண்டும் என்று எனக்கு நீ சொல்லித் தர வேண்டாம். நீ என் ஜூனியர்தான் என்பதை மறந்துவிடாதே...'' டேவிட் குரூரமாகச் சிரித்துவிட்டு ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

''ஸாரி டியர்'' என்று வருத்தம் தெரிவித்து விட்டு, நிக்கியும் ஹோட்டலுக்குள் நுழைந்தாள்.

விடியா கோபத்தோடு தன் கைகளைச் சேர்த்துத் திமிறினாள்.

சடபுட என்ற சத்தத்தைத் தொடர்ந்து, குழாய், மக்கிப் போன சுவரிலிருந்து, கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை பெற ஆரம்பித்தது.

பத்து நிமிடங்களில் வயிற்றை நிரப்பிக் கொண்டு, பயண வழிக்காக டின்னில் அடைத்த உணவையும் வாங்கிக் கொண்டு அவர்கள் வெளியே வந்தபோது, விடியா இருந்த இடத்தில் சுவரில் பெரிய பொத்தல் தான் இருந்தது.

டேவிட்டின் கையிலிருந்து உணவு டின்கள் நழுவின. துப்பாக்கி முளைத்தது.

''க்விக். அவளை உடனே கண்டுபிடித்தாக வேண்டும்...'' டேவிட் துடிக்கும் இதயத்தோடு ஓட ஆரம்பித்தான். நிக்கி, தவிப்போடு எதிர்த்திசையில் ஓடினாள்.

விடியா அந்தப் பெரிய லாரிக்குப் பின்னே ஒளிந்திருந்தாள். விலங்கோடு சேர்ந்து, நீளமான குழாயும் இப்போது கையில் தொங்க, அதையும் இழுத்துக் கொண்டு ஓடுவது சிரமமாயிருந்தது. டேவிட் அந்த லாரியை நோக்கி வருவது தெரிந்தது. சற்றுக் குனிந்து கொள்ள முற்பட்டபோது, இரும்புக் குழாய் டொடங் என்று சப்தம் செய்து விட்டது. டேவிட் தீப்பறக்கும் கண்களுடன் நிமிந்து பார்த்தான்.

கார் மறுபடியும் புறப்பட்டபோது, விடியா முகத்தில் இரண்டு காயங்களையும், டேவிட் அடித்த அடியின் வலியையும் சேர்த்துச் சுமந்தாள்.

''இதோ பார், தப்பித்துப் போனால் பிரச்னைகள் அதிகமாகும். பேசாமல் நீதிபதி தீர்ப்புச் சொல்லும் வரையில் அமைதியாய் இரு....'' நிக்கி விடியாவை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தாள்.

கார் கற்களையும், மண்ணையும், புழுதியையும் கிளப்பிக் கொண்டு விரைந்தது. திடீரென்று 'பட்டீர்' என்று ஒரு துப்பாக்கி வெடித்த சத்தம். போலீஸ் பயிற்சி, டேவிட்டையும், நிக்கியையும் உடனே குனிந்து கொள்ளச் சொன்னது.

''ச்சே, துப்பாக்கியில்லை, டயர்'' என்றான் டேவிட், காரை நிறுத்தத்திற்குக் கொண்டு வந்து.

காரின் இடது பின் டயரில் காற்று விடுதலையாகி, பிரசவம் முடிந்த பெண்ணின் வயிறு போல் அமுங்கியிருந்தது.

''பங்க்ச்சர்'' என்றான் டேவிட்.

நிக்கியின் கண்களில் கோபம் துள்ளியது. ''இந்த குறுக்கு வழி வேண்டாம் என்று சொன்னேனே, கேட்டியா?''

''உஷ்... கத்தாதே. ஸ்டெப்னி இருக்கிறது.''

காற்று புழுதியை வாரி இறைத்துக் கொண்டு போக, டேவிட், டிக்கியைத் திறந்து ஸ்டெப்னி டயரை வெளியே எடுத்தான்.

அரை மணி நேரத்தில் கார் மறுபடியும் கிளம்பியது. நாற்பது கிலோ மீட்டர் போவதற்குள் மறுபடியும் பட்டீர்! இந்த முறை முன் சக்கரம் பஞ்சல்!

''ஆட்டம் க்ளோஸ்'' என்றான் டேவிட். தலையில் கைவைத்துக் கொண்டான். ''இருந்தது ஒரு ஸ்டெப்னிதான்.''

''முட்டாள். நம் காரில் ட்ரான்ஸ்மிட்டர் கூடக் கிடையாது'' நிக்கி வெடித்தாள்.

''மிதிபட்ட கோழி மாதிரி கத்தாதே....'' டேவிட் இறங்கினான். ''ஏதாவது கார் வரும். உதவி கேட்போம்.''

''கார்கள்! எல்லோரும் உன்னைப் போல் அடிமுட்டாள்களில்லை. இந்த மோசமான வழியில் யாரும் கார் ஓட்டி வரமாட்டார்கள்.''

விடியா முதன்முறையாக வாய் விட்டுச் சிரித்தாள். ''நாளைக் காலைக்குள் நீதிபதியின் முன் என்னை நிறுத்த வேண்டும் என்றீர்களே....''

''வாயை மூடு. வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளாதே.... நிக்கி, காரிலிருந்து அவளை இறக்கு. ஆனால் கைவிலங்கை எடுத்துவிட வேண்டாம்....''

விடியா காரிலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டாள்.

தூரத்தில் புர்ர் என்று ஒரு காரின் சத்தம். நிக்கி டேவிட் இருவர் முகத்திலும் ஒரு பரபரப்பு. சத்தம் வந்த திசையை நோக்கி, இருவரும் ஓட ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் போகுமுன் அடுத்த பாதையில் அந்தக் கார் கடந்து சென்றுவிட்டது.

''ஷிட்!'' டேவிட் தரையை எட்டி உதைத்தான். ''ஹேய், விடியாவைத் தனியே விட்டு விட்டோமே...''

இருவரும் தடதடவென்று கார் நின்ற



''நம்ம படத்தோட ப்ரீ வியூ காட்சியில் சில பேர் கண்ணீர் விட்டு அழுதாங்களாமே?''

''ஆமா, படத்தோட விநியோகஸ்தருங்கதான்!''

— சிறை அ. கதிர்வேல்

விட்ட இடத்திற்கு ஓடி வந்தபோது —

விடியா அங்கே இல்லை. இருள் சூழ ஆரம்பித்துவிட்டது.

ஓடு... அவளை உடனே பிடிக்க வேண்டும்!

இருவரும் தவித்துப்போய்த்திசைக்கொருவராக ஓட முற்பட, ''தேவையில்லை. நான் இதோ இருக்கிறேன்'' என்று குரல் வந்தது.

விடியா ஒரு மரத்தின் பின்னாலிருந்து வெளிப்பட்டாள்.

''நீதிபதியே தீர்ப்புச் சொல்லட்டும் என்று நிக்கி சொன்ன பிறகு, தப்பிக்கும் எண்ணங்கள் எனக்கு இல்லை.''

''பின் எங்கே போனாய்?''

''நாம் இளைப்பாற ஓர் இடம் வேண்டாமா? தேடினேன். அதோ அங்கே ஓர் இடம் இருக்கிறது.''

அது ஓர் உதாசீனம் செய்யப்பட்ட குதிரைத் தொழுவம்.

பக்கத்திலேயே சின்னக் குடிசை போன்ற அமைப்பில் சில பஞ்சு மூட்டைகள்.

''இதுதான் நம் சொர்க்கம்.''

காரிலிருந்து உணவு அடைத்த டின்கள் கொண்டு வரப்பட்டன. விடியாவின் விலங்கு நீக்கப்பட்டது.

சாப்பிட்டார்கள். பேசினார்கள். தூக்கம் வராமல் சூழ்நிலையின் உந்துதலால் கூடிக் கூடிப் பேசினார்கள்.

''விடியா அன்று என்ன நடந்தது, உண்மையைச் சொல்!'' நிக்கி ஊக்கினாள்.

விடியா அந்தக் கசப்பான நினைவால் உடல் சிலிர்த்தாள்.

''ஹைவேயில் இருக்கும் ஹோட்டலில் நான் பணிப்பெண். அந்த முதலாளி சபலம் பிடித்த கேஸ். கடைசியில் அவனிடம் நான் தனியே மாட்டினேன். தோட்டக் கத்திரியைக் காட்டி என்னைப் பயமுறுத்தி பலாத்காரம் செய்ய முற்பட்டான். நான் பயத்தில் உறைந்துபோன சமயம், அந்தத் தடியனின் மனைவி வந்துவிட்டாள். 'விடியா, நீ ஓடிப் போ!' என்றாள். அவனிடமிருந்து அந்தத் தோட்டக் கத்திரியைப் பிடுங்கிக் கொண்டாள். நான் ஓடிவிட்டேன். மறுநாள் காலையில் செய்தி வருகிறது. அவன் அந்தக் கத்திரியால் கொலை செய்யப்பட்டான் என்று. நான்தான் கொன்றுவிட்டேன் என்று அவன் மனைவி கம்ப்ளெயின்ட் கொடுத்துவிட்டாள்.''

''ஆனால் நீ கொல்லவில்லை?''

''சத்தியமாய் இல்லை.''

அப்புறம் பேச்சு ஆயிரம் ஆயிரம் விஷயங்களைத் தொட்டு இரவு தன் பின்னுரையை எழுத ஆரம்பித்த நேரம், அயர்ச்சியில் தூங்கிப் போனார்கள்.

விடிந்தபோது, மறுபடியும் விடியாவைக் காணவில்லை.

ஆனால் பதறாமல் காத்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் விடியா சில மீன்களோடு வந்தாள். ''என் கவுனை அவிழ்த்து அதை வலை போல் வீசிப் பிடித்தேன்'' என்றாள் விடியா, ஈர உடைகளோடு.

போலீஸ்காரர்களும், குற்றம் சாட்டப்பட்ட கைதியும் இப்போது நண்பர்களாகி விட்டனர். சேர்ந்து சிரித்து, சேர்ந்து பேசி, சேர்ந்து நண்டுகளை வேட்டையாடி, உதவி வரும் என்று காத்திருந்த இரண்டாவது நாளில் மூன்று பேரும் வெகு நெருக்கமாகி விட்டனர்.

மூன்றாவது நாள் ஹெலிகாப்டர் வட்டமிட்டு, அநாதரவான காரைக் கண்டு பிடித்து, இவர்களைப் பிக் அப் செய்தபோது, விடியா சந்தோஷத்தோடு விலங்கை மாட்டிக் கொண்டாள்.

சந்தோஷம் டேவிட் சொன்ன ஒரு வாக்கியத்தால் — ''விடியா குற்றமற்றவள், நிக்கி. நாம் அவளைக் காப்பாற்ற வேண்டும்.''

சொன்னதோடு நின்றுவிடவில்லை டேவிட். கொலையுண்டவனின் மனைவியைத் தேடிப்போய்த்துப்பாக்கி முனையில் உண்மைகளை வரவழைத்தான்:

''விடியாவை ஓடிப் போகச் சொல்லி விட்டு நான்தான் என் கணவனைக் கொன்றேன்.''

கோர்ட் விசாரித்து, விடியாவை விடுதலை செய்தது.

தனிமைப்படுத்தப்பட்ட ஒரே காரணத்தால்தான் குற்றவாளி என்ற உடைக்குள் ஒரு நிரபராதிப் பெண்ணை, அந்த இரு போலீஸாரால் கண்டு கொள்ள முடிந்தது. இல்லையெனில் விடியாவால் தன் மீது குற்றமில்லை என்று நிரூபித்திருக்கவே முடியாது.

இதற்கு வழி வகுத்துக் கொடுத்த அந்தக் கார் எந்தவித கர்வமும் இன்றி, தன்னை இழுத்துச் செல்லும் லாரியின் பின்னே மூக்கைத் தூக்கிக் கொண்டு ஊர்ந்தது.

— ஜெயமன்மதன்

BACKLASH எனும் இந்த ஆஸ்திரேலியப் படம், மூன்றே முக்கிய பாத்திரங்களை வைத்துக் கொண்டு, சஸ்பென்ஸ் ஒன்றையும் உள்ளடக்கி, சில அத்து மீறல் காட்சிகளைக் கவனமாகத் தவிர்த்து, பார்ப்பவரிடத்தில் சின்னமான சலசலப்பை ஏற்படுத்தியது.


பட்ஜெட்டுக்கு முந்தைய சரக்குக் கட்டண உயர்வு ரூ320 கோடி
ரயில் பயணி
ரயில்வே பட்ஜெட் ரூ69 கோடி உபரி
இந்தா பிடி, விசிறி! விசிறிக்க... ஜில்லு காத்து வரும்!
உர்ர்ர்
உர்ர்ர்
விடுதலைப் புலிகள்
உர்ர்ர்
இதைக் கொஞ்சம் 'மியாவ்'னு கத்த வையுங்க! எல்லாம் சரியாப் போயிடும்!
தமிழக ஐந்து நகரங்களின் அபிவிருத்திக்கு உலக வங்கியிடம் ரூ450 கோடி கடனுதவி கோரிக்கை!
தமிழக நகரங்கள்
ஊழல்



கல்கி

1987 மார்ச் 8
மலர் 45 இதழ் 32
அக்ஷய மாசி 24



பட்ஜெட் என்றொரு பம்மாத்து வேலை!

அமைச்சர் மாதவ்ராவ் ஸிந்தியா சமர்ப்பித்த ரயில்வே பட்ஜெட்டில், பயணிகள் கட்டணத்திலும் உயர்வு இல்லை; சரக்குக் கட்டணத்திலும் உயர்வு இல்லை. இதனால், நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் அமைச்சர் ஏகப்பட்டப் பாராட்டுக்களைப் பெற்று, சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கிறார். ஆனால், மது தண்டவதே எடுத்துக் காட்டியிருப்பது போல், இது ஒரு மாயையே!

பொது பட்ஜெட்டுக்குச் சில காலம் முன்பே, எஃகு, பெட்ரோலியம் பொருள்கள் போன்ற அரசுக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அம்சங்களின் விலைகளை ஏற்றுவதும், ரயில்வே பட்ஜெட்டுக்குச் சில காலம் முன்னதாகவே, சரக்குக் கட்டணங்களை உயர்த்தி விடுவதும் சமீப காலமாக வழக்கத்துக்கு வந்துவிட்டன. இதன் மூலம், பட்ஜெட்டில் மக்களைத் துன்புறுத்தாமல் இலகுவாக விட்டுவிடுவது போல ஒரு பம்மாத்து வேலை நடைபெறுகிறது! இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரயில்வே பட்ஜெட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த நவம்பர் மாதம் சரக்குக் கட்டணங்கள் எக்கச்சக்கமாக உயர்த்தப்பட்டன. இதனால் 320 கோடி புதிய வருமானம் ரயில்வேக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், உண்மையில் இதற்கு மிக அதிகமாகவே கிடைத்திருக்கிறது. இதனால்தான் இப்போது உபரி பட்ஜெட்டைச் சமர்ப்பிக்க முடிந்திருக்கிறது. நவம்பர் சரக்குக் கட்டண உயர்வு, விலைவாசிகளையும் உயர்த்தி, நடுத்தர வர்க்கத்தினரின் சுமையை அதிகரித்துள்ளது.

சென்னை, பீச் — லஸ் ரயில் திட்டத்துக்கு நாலு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இது யானைப் பசிக்குச் சோளப் பொறி. போதாக்குறைக்கு, 'மாநில அரசுகள் இதுபோன்ற திட்டங்களுக்குப் பணம் கொடுக்க முன்வர வேண்டும்' என்று வேறு கூறப்படுகிறது. எம். ஜி. ஆரோ, சமீபத்தில்தான் தில்லி சென்ற போது, இரண்டாயிரம் கோடிக்குத் திட்டங்களைப் பிரதமரிடம் சமர்ப்பித்து நிதி உதவி கோரியுள்ளார். 2,000 கோடி என்ன 20,000 கோடிக்குக் கூடத் திட்டங்களைச் சமர்ப்பிக்கலாம். நிறைவேற்றுவதானால் தானே கவலை? இதையெல்லாம் பார்க்க, சென்னைவாசி பீச் — லஸ் ரயில் திட்டத்தை ஒருவழியாக மறந்துவிடுவதே மேல்! எதிர்பார்ப்பு இருந்தால்தானே ஏமாற்றம்?

பிரதமர் சமர்ப்பிக்க இருக்கும் பொது பட்ஜெட்டும் கடுமையாக இராது என்று எதிர்பார்க்கப்படுகிறது. காரணம், பட்ஜெட்டின் பெரும் பகுதியை வி. பி. சிங் ஏற்கெனவே தயாரித்து வைத்துவிட்டார் என்பது மட்டுமல்ல; அவரை இலாகா மாற்றம் செய்தது அவரது செயல்திறனில் கொண்ட அதிருப்தியால் அல்ல என்று நிரூபிக்கவேனும் ராஜீவ் நம்மை இலகுவாக விட்டுவிடுவார் என்று கருதலாம்.

பொது பட்ஜெட்டுக்கு முன்பு வருகிற பொருளாதார அறிக்கை, உற்பத்தி உயர்வு என்றும் பொருளாதார மேம்பாடு என்றும் மார் தட்டுகிறது. ஆனால், விலைவாசிகள் என்னவோ ஏறிக் கொண்டேதான் போகின்றன. இன்றைய தேதியில் ரூபாயின் மதிப்பு பதினைந்து பைசாவுக்கும் குறைவு! வி. பி. சிங் எடுத்த பல நடவடிக்கைகள் சரியானவை என்றாலும் அதே திசையில் அரசின் பொருளாதாரக் கொள்கைகள் இன்னும் வெகுதூரம் பயணப்பட அவசியம் இருக்கிறது. முக்கியமாக, சிங் அடிக்கோடிட்டுக் காட்டியது போல, உற்பத்திக்கு உதவாத அரசாங்கத்தின் அனாவசியச் செலவினங்கள் குறைய வேண்டும்.

'ராணுவத் தயார் நிலை' என்ற பெயரில், கிட்டத்தட்ட பாகிஸ்தானுடன் ஒரு யுத்தம் தொடங்கும் அளவுக்குப் போய்விட்ட பயிற்சிகளுக்குப் பல நூறு கோடி ரூபாய்கள் செலவு! அப்னா உத்சவ், இந்திய விழா போன்றவற்றுக்குச் செலவாகும் பணத்துக்குக் கணக்கே கிடையாது. மந்திரிகள் டிக்கெட் வாங்கிக் கொண்டு விமானம் ஏறுவதற்குப் பதில் விமானத்தையே வாடகைக்கு எடுத்துக் கொண்டு பறப்பது ஒருபுறமிருக்க, அரசின் பல்வேறு இலாகாக்களில் உள்ள கார்களையும் ஜீப்களையும் ஒரு வரம்புக்குள் கொண்டு வந்தாலே பல கோடி ரூபாய்கள் மிச்சமாகும். ராணுவம் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் தான்; அதற்குச் செலவு செய்யத் தயங்கவும் கூடாதுதான். ஆனால், ராணுவத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வாய்ப்பே இல்லையென்றோ, தட்டிக் கேட்பதே மகாபாவம் என்றோ யாரும் கருதத் தேவையில்லை.

உற்பத்திக்கு உதவாத அரசுச் செலவினங்களைக் குறைத்து, அதன் மூலம் விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்தினாலன்றி, பொருளாதார மேம்பாட்டினைச் சாமானியன் உணர முடியாது.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

* முத்து ரவிச்சந்திரன், நந்தியநல்லூர்

? எம்.ஜி. ஆர். பஞ்சாப் முதல்வராய் இருந்தால் எப்படி இருக்கும்?

! ஏனய்யா, உமக்கு இப்படி ஒரு கெட்ட எண்ணம்? சீக்கியருக்கு ஏற்கெனவே உள்ள பிரச்னைகள் போதாதா?

* லதா, சென்னை

? எத்தனை முயன்றும் வேலை கிடைக்காததால் எனக்குள்ள ஒரு கடமையை முடித்து விட்டு அடுத்த மாதத்தில் தற்கொலை செய்து கொள்ளப் போகும் எனக்கு ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?

! தற்கொலை முயற்சி முன்பு தண்டனைக்குரியதாக இருந்தது. தற்போது தற்கொலை முயற்சிக்குக் காரணம், சமுதாயம் தனி நபருக்கு இழைக்கும் அநீதியே என்று கருதப்பட்டு விடுதலை அளித்துச் சில தீர்ப்புக்கள் வெளியாகியுள்ளன. எனவே, உங்கள் விரக்தியில் அர்த்தமிருக்கிறது என்றாலும் தற்கொலை செய்து கொள்வதும் முகவரி இல்லாமல் எழுதுவதும் எல்லாம் கோழைத்தனத்தின் வெளிப்பாடுதான். வேலை கிடைக்கவில்லை என்று நாம் கூறும்போது பெரும்பாலும் நமது மனத்துக்குத் திருப்தியான வேலை கிடைக்கவில்லை என்பதே உண்மையாகிறது. ஏதேனும் ஒரு கௌரவமான தொழில் அல்லது வேலை செய்து ஒரு சாண் வயிற்றை நிரப்ப முடியாமல் போகாது.

* எஸ். துரைராஜன், கடலூர்

? புறநகரிலிருந்து நகருக்கு வந்து பணி புரியும் பெண்களில் சிலர் — அதிலும் திருமணமான பெண்கள் — ஆபீஸுக்கு மட்டம் போட்டுவிட்டுச் சக ஊழியருடன் உல்லாச உறவு கொள்ளும் போக்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! நினைப்பது என்ன, அருவருப்புதான். நீங்கள் பஸ் டிரைவராக இருப்பதால் தினமும் சந்திக்கும் பலருள் 'ஏதோ ஓரிருவரின் நடத்தை உங்களை மிகவும் பாதித்திருக்கிறது என்று எண்ணுகிறேன். ஓரிருவரைக் கொண்டு நாம் எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்க வேண்டாம். பெரும்பாலானவர்கள் நல்லவர்களே.

* கு. கணேசன், சென்னை—15

? இதயம் பேசுகிறது பத்திரிகையை எம்.ஜி. ஆரும், கல்கி பத்திரிகையைக் கருணாநிதியும் விலைக்கு வாங்கிவிட்டதாகப் பேசிக் கொள்கிறார்களே?

! இதயம் பேசுகிறது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கல்கியைக் கருணாநிதி காசு கொடுத்து வாராவாரம் வாங்கிப் படிக்கிறார் என்பது தெரியும்.

* வண்ணை கணேசன், சென்னை—11

? தொலைக்காட்சியில் காலையில் தேசிய நிகழ்ச்சி காட்டுகிறார்களே?

! ஹிந்தித் திணிப்புக்கு மேலும் ஒரு வாய்ப்பு.

* தங்க கார்த்திகை ராஜா, விருத்தாசலம்

? சமையலில் அதிகமாகச் சேர்ப்பது நெய்யா, டால்டாவா? ஏன்?

! என்ன, ஊறுகாய் பதில் அளித்த ஊக்கத்தில் பிறந்த கேள்வியா? சளைக்கமாட்டேன் சுவாமி! புத்துருக்கு நெய்க்கு எதுவும் ஈடாகாதென்றாலும் செலவைப் பார்க்கையில் அத்துடன் டால்டாவும் சரிக்கு சரி கலக்கலாம். மணத்துக்கு மணம், செலவிலும் சிக்கனம். கரகரவென்று பொன்வண்ணத்தில் மைசூர்பாகு! ஸ்...ஸ்...ஸ்....

* நாகை பாபு, தஞ்சாவூர்

? பெண் கவிஞர்களில் உங்களை ஆச்சர்யப்பட வைத்தவர் யார்?

! ஔவையார் என்றால் 'நிகழ்காலத்துக்கு வாய்யா' என்ற அங்கலாய்ப்பு உங்களிடம் எழும் என்றால் நிர்மலா சுரேஷ் — கவிதைத் திறனால் மட்டுமின்றி பேச்சாற்றலாலும் கவர்வதால்.

* ஆர்.கே. அருள்செல்வன், விக்கிரபாண்டியம்

? சிறை சென்று வந்த பின் கலைஞர் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் என்ன?

! திருச்சி, மதுரை, ராஜபாளையம் கூட்டங்களில் கலைஞர் பேசியபோது வந்த கூட்


எம்.ஜி.ஆர். பஞ்சாப் முதல்வரானால்...!

டத்தை வைத்துக் கணித்தால் உமாபதி கார்ட்டூன்தான் உண்மையாகிறது. (15.2.87 கல்கி இதழ்.)

* எம். கல்யாண சுந்தரம், திருநரையூர் *

? அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் கொள்ளையடிப்பதாக இ. காங்கிரஸ் தலைவர்கள் பேசி வருகிறார்கள். தேர்தல் கூட்டுச் சேரும் போது மட்டும் அவர்கள் ஊழலைப் பற்றிப் பேசுவதில்லையே?

! இதைவிட ஆச்சர்யம் இத்தனை குற்றச்சாட்டுக்களை இ.காங்கிரஸ் சுமத்தியும் அவர்களுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொள்ள அ.இ.அ.தி.மு.க. தயாராக இருப்பதுதான். ஆக மொத்தம், மத்திய இ. காங்கிரஸ் ஆட்சிக்கு இங்குள்ள அ.தி.மு.க. தலைமை பயப்படுவதும், எம்.ஜி. ஆரின் பிராபல்யத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஓரளவுக்கேனும் சட்டசபையில் இடங்களைக் கைப்பற்ற இ. காங்கிரஸ் துடிப்பதும் தெளிவு.



* நியூ கிராஸ் ரிவைவல் இசைக்குழு

* லதா பிரியன், கோவை—8

? சமீபத்திய இசைப் பாடல்களில் உங்களை மிகக் கவர்ந்தது....?

! அகாடெமி அரங்கை அதிர வைத்த இசைக் குழு அமெரிக்காவிலிருந்து வந்த **New Grass Revival.** பாப் ரசிகர்களுக்கு சர்க்கரைப் பொங்கலாக இனித்தது என்பது அவர்கள் எழுப்பிய கூச்சலிலிருந்தே புரிந்தது. என்றாலும் அரங்கின் முகப்பில் படங்களாகக் காட்சியளித்த கர்நாடக இசை மும்மூர்த்திகளும் மற்றும் இருவரும் இதைக் கேட்க முடியுமானால் என்ன சொல்வார்கள் என்று எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை! சத்தம் அதிகமாகத் தோன்றினாலும் அமெரிக்காவின் பல்வேறு ரகப்பட்ட சங்கீதங்களை ஒருங்கிணைத்து ஒரு புதிய பாணியை உருவாக்கிய புஷ்ஷை வாழ்த்தியிருப்பார்கள்; கிடார் வாசிப்பில் பாட் ஃப்ளின் காட்டிய ஆற்றலைக் கண்டு வியந்திருப்பார்கள்; கோவனின் சாரீர வளம் இங்குள்ள பல இசைக் கலைஞர்களுடைய பொறுமைக்கு உள்ளாகக் கூடியது என்றும் அதனை அவர் அசுர சாதகம் செய்து பண்படுத்திப்பயன்படுத்தியவிதம் இங்குள்ள இசைக் கலைஞர்களைத் தலைகுனியச் செய்யக் கூடியது என்றும் தயங்காமல் கூறியிருப்பார்கள். பிடிக்காத விஷயம் நிகழ்ச்சியைத் தாமதமாக ஆரம்பித்தது. பிடித்த விஷயம் உற்சாக ரசிகர்களின் சில அத்து மீறிய கூக்குரல்களைக்கூட ஸ்போர்ட்டிவ்வாக இசைக் குழு ஏற்றது.



* உமார்த்தி, கோவை

? உணர்ச்சிவசப்படாத நேர்முகவர்ணனையாளர் உண்டா?


! உணர்ச்சிவசப்படாவிட்டால் அதுஎன்ன நேர்முக வர்ணனை வேண்டிக் கிடக்கிறது? 'செத்தவன் கையில் வெற்றிலைப் பாக்கு' என்ற பழமொழி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படித்தானே இருக்கப் போகிறது!

*

ரூ 10 பரிசு பெறுபவர்:

எம். கல்யாணசுந்தரம்,
திருநரையூர்,
நாச்சியார் கோயில் அஞ்சல்,
612 602.

மாதம் ஒரு மாவட்டம்



கல்கி ஏற்கும் சமுதாயப் பணி

திருச்சிக்கு வருகிறோம்...

கம்பீரமாய் உயர்ந்து நிற்கும் மலைக் கோட்டையும், வானம் தொட்டுவிடும் உயரந்தானே என்று வியப்புறும் அளவுக்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கம் கோபுரமும், காவிரியின் அழகும் திருச்சிக்கே உரிய பெருமிதங்கள். கரிகால் சோழன் கட்டிய கல்லணையின் கட்டடக் கலையும் பொறியியலும் இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல, இனி வரும் எந்த நூற்றாண்டிலும் வியக்கச் செய்யும் அற்புதங்கள். கல்விக் கண் திறக்கும் கல்லூரிகளும் ஏராளம். இவற்றோடு பிரச்னைகளுக்கும் குறைவிருந்துவிட முடியாது என்பதில் சந்தேகமேயில்லை.

அதனால்தான், கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில், பதினான்காவது மாவட்டமாகத் திருச்சி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். எனவே திருச்சி மாவட்டம் முழுவதிலுமுள்ள பிரச்னைகள் அல்லது அவரவர் ஊர்ப் பிரச்னைகள், இல்லையெனில், தனி மனிதர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஆகியவற்றோடு, அரசியல்வாதிகளுடைய—அமைச்சர்களுடைய—அதிகாரிகளுடைய மெத்தனப் போக்குகளையும் சமூக விரோதிகளுடைய அட்டகாசங்களையும் சுருக்கமாக எழுதி, உங்கள் முழு முகவரியோடு கல்கி அலுவலகத்திற்கு அனுப்புங்கள். இவற்றோடு உங்கள் மாவட்ட வளர்ச்சிக்கான ஆலோசனைகளையும் உங்கள் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ள சாதனைகளையும் சேர்த்தே எழுதலாம்.

கல்கி அலுவலகத்திற்கு வரும் உங்கள் ஒவ்வொருவருடைய கடிதமும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்து, ஏப்ரல் மாத மத்தியில், நமது கல்கி பிரதிநிதிகள் திருச்சி மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்வார்கள்; உங்களைச் சந்தித்துப் பேசுவார்கள். அவர்கள் வரும் தேதி பற்றிய முழு விவரங்களும் பின்னர் தனித்தனிக் கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

சுற்றுப் பயண முடிவில், கல்கி பிரதிநிதிகள், திருச்சி மாவட்டக் கலெக்டரைச் சந்தித்துத் தாங்கள் சேகரித்த பிரச்னைகளுக்குரிய விஷயங்களைப் பற்றிப் பேசி—விவாதித்துப் பதில்களைப் பெறுவார்கள். அவையெல்லாம் மே மாதக் கல்கி இதழ்களில், செய்திகளாகவும் பேட்டிக் கட்டுரைகளாகவும், புகைப்படங்களாகவும் பிரசுரமாகும்.

எல்லாவற்றையுமே பிரசுரித்துவிட முடியாது என்பது உண்மைதான் என்றாலும் நியாயமான' பிரச்னைகள் அத்தனையும் மாவட்டக் கலெக்டரிடமும், சம்பந்தப்பட்ட மற்ற அதிகாரிகளிடமும் எடுத்துச் சொல்லப்படும். அதன் மூலம் அரசின் கவனத்தையும் அதிகாரிகளின் கவனத்தையும் திருப்ப முடியும். இவற்றோடு வாழ்க்கையின் நிஜங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், நமது சகோதர மக்களிடமும் ஓர் ஒட்டு மொத்த விழிப்புணர்ச்சியை உண்டாக்க முடியுமல்லவா! உடனடியாக எழுதுங்கள்.

திருச்சி மாவட்டம் பற்றிய பிரச்னைகள், அநீதிகள் தவிர, சாதனைகளும் முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.3.87.

உறையின் மேல் 'மாதம் ஒரு மாவட்டம்—திருச்சி' என்று அவசியம் குறிப்பிடுங்கள். அது எங்கள் பரிசீலனைக்கு மிகவும் உதவியாய் இருக்கும்.

— ஆசிரியர்

நீதி இல்லாத



காலையில், மணி ஒன்பதே ஒன்பதுதான். இரவில் படுத்ததோ, எட்டு மணிக்கு. அதற்குள் தூக்கத்தைக் கலைக்கும் வகையில், வீட்டுக் கதவில் மேளச் சத்தத்தை எழுப்பினால், கோபம் வராதா என்ன?

எழுந்து போய்க் கோபத்துடன் வாசல் கதவைத் திறந்தான் பண்டாரம்.

"காலங் காத்தால என்னய்யா கலாட்டா....." என்று அதட்டினான் வாசலில் நின்ற இளைஞனைப் பார்த்து.

"நான் கலாட்டா செய்து ஒரு மாதமாச்சு..... அதாவது அந்தக் கலாட்டா....." என்றபடி உள்ளே நுழைந்தான் இளைஞன்.

"விவரமாய்ச் சொல்லு... சுவிக்காயும் சொல்லு... நான் பீளி..."

"போன மாதத்துல.... ஒரு தேதியில.... ஒரு நாள்ல.... சாயங்காலத்துல.... ஒரு நேரத்துல... நடந்துட்டு... அன்னிக்கு நான் லீவு... அதுக்காக ஆபீஸ் போகப்படாதா என்ன? அந்தப் பக்கம்தான் மில்ஸிக் கடையே கீது... போனேன், போட்டேன் ஐந்நூறு மில்லி.... அப்படியே நம்ம தோஸ்து வாட்ச்மேன் வைகுண்டத்தைப் பார்க்கப் போனேன். 'ஆபீஸ்கா குடிச்சுட்டு வாரே'ன்னு அந்தக் குடிகார கஸ்மாலம் கத்துனான். இன்னா சாமி நாயம்.....? ஆபீஸுக்குக் குடிச்சுட்டுப் போகாம... வேறே எங்கே போறதாம்? அவன் கெட் அவுட்டுன்னு கத்துனான். நான்தான் ரோஷக்காரனாச்சே... விட்டேன் ஒரு குத்து... அவனோட ஒரு பல்லு அவுட்டு... தெறிச்சு விழல... முழுசா விழுந்துட்டுது... பாரு சாமி இந்த அநியாயத்தை... இதுக்காக என்னை பியூன் வேலையில் இருந்து சஸ்பெண்ட் செய்துருக்காங்க...

"நீ வாட்ச்மேனை குடிச்சுட்டு அடித்திருக்கே...?"

"தப்பு சாமி. குடிச்சுட்டும் அடிச்சேன். அடிச்சுட்டும் குடிச்சேன்."

"இந்தா பாருய்யா... உப்பு தின்னவன் தண்ணீர் குடிக்கணும்... புளிகாய் தின்னவன் குழந்தை பெறணும்; இந்த விதியை யாராலும் மாற்ற முடியாது. போய்யா..."

"சாமி... நீயே இப்படிப் பேசினால், அதுவும் அந்த வாட்ச்மேன் மாதிரி...."

"நான் இப்போ உதவுகிற நிலையில் இல்லை. வீட்டுக்கு நூறு ரூபாய் அனுப்பணும். மாதக் கடைசி. யார்கிட்டேயாவது கெஞ்சிக் கூத்தாடி...."

"பன்னாடைப் பசங்ககிட்டே நீ கெஞ்சுறதா? இந்தத் தங்கமணி என்ன ஜெயிலுக்கா பூட்டான்? பிசாத்துப் பணம் நூறு ரூபாய். இந்தா...."

"ஒன்கிட்டே எப்படி வாங்குறதுன்னு யோசிக்கேன்..."

"யோசிக்கணுமுன்னா, அதுநான்தான்... விட்டுத் தள்ளு. இதோ ரைட் கையில கீற ரூபாய் நோட்டைப் பிடி... லெப்ட் கையில கீற ரிக்கார்டுகளைப் படி. என்குயரியில் நீதான் எனக்கு டிபென்ஸ் அஸிஸ்டெண்ட்."

பண்டாரம், ரூபாய் நோட்டுக்களைச் சுறுசுறுப்பாகவும், ரிகார்டுகளைச் சோம்பேறித்தனமாகவும் வாங்கிக் கொண்டான். பணத்

விசாரணை



தைக் கொடுத்து, பண்டாரத்தை விலைக்கு வாங்கிவிட்டதுபோல், தங்கமணி, கொத்தடிமைத்தனமாகப் பார்த்தான். உடனே லேசாகப் பயமெடுத்த பண்டாரம், இவன் வம்பே வேண்டாம் என்பதுபோல், பைக்குள் கிடந்த ரூபாய் நோட்டை எடுக்கப் போனான். கைவலித்தது. தங்கமணியைப் பார்க்க விரும்பாதவன்போல் அவன் கொடுத்த ரிகார்ட் கொத்துக்களை, தன் முகத்திற்கும், தங்கமணி முகத்திற்கும் இடையே நிறுத்தியபடி, படிக்கத் துவங்கினான். அந்த ரிகார்டுகள் இப்படிப் பட்ட வடிவில் இந்த மாதிரி இருந்தன.

அலுவலக ஆணை

இந்த அலுவலகத்தில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றும் தங்கமணி, வாட்ச்மேன் வைகுண்டத்தை, குடித்துவிட்டு அடித்து, ஒரு பல்லை வீழ்த்தியதற்காக அரசு அலுவலர் ஒழுங்குமுறை விதி 14(ஏ) இன்படி சஸ்பெண்ட்செய்யப்படுகிறார். தங்கமணி, இந்த அலுவலக நகர எல்லையை முன் அனுமதியின்றித்தாண்டக் கூடாது. சப்ஷிஸ்டென்ஸ் அலவன்ஸ் (அதாவது வாழ்க்கையை ஓட்டுவதற்காக) வாழ்க்கைப் படி வழங்கும் உத்தரவு தனியே பிறப்பிக்கப்படுகிறது.

பிற்சேர்க்கை—ஒன்று—குற்றப் பட்டியல்

இந்த அலுவலகத்தில் பணியாற்றும் கடைநிலை ஊழியரான தங்கமணி, 15.8.86 இல் — அதாவது சுதந்திரத் திருநாளில், மாலை நேரம், அலுவலகத்திற்கு, குடித்துவிட்டும், ஒரு பாட்டைப் பாடியபடியும் வந்திருக்கிறார். இதைத் தட்டிக் கேட்பதற்காக, வாயைத் திறக்கப் போன இரவுக் காவலர் வைகுண்டத்தைத் தாக்கி, ஒரு பல்லை வீழ்த்திவிட்டார். இந்தச் செயல் மூலம் தங்கமணி, அரசு விதி 13 (3) ஏ—இன்படி, முறையற்ற அரசு ஊழியராகிவிட்டார். ஒழுங்கீனக் குற்றத்திற்கு உட்பட்டவராகிவிட்டார்.

பிற்சேர்க்கை—இரண்டு—குற்ற விளக்கப் பட்டியல்

எட்டாண்டு காலமாகக் கடைநிலை ஊழியராகப் பணிபுரியும் தங்கமணிக்கு, தகாத நடவடிக்கைக்காக, பத்து மெமோக்கள் கொடுக்கப் பட்டுள்ளன. ஒரு தடவை நிர்வாக அதிகாரியைத் தாக்கப் போனதற்காக, சஸ்பெண்ட் செய்யப்பட்டு, உடனே மன்னிப்புக் கேட்டதால், மனிதாபிமான உணர்வில், மீண்டும் பதவியில் சேர்க்கப்பட்டார். அலுவலகத்தில் குடித்துவிட்டு வருவதும், தட்டிக் கேட்டால் அலுவலகத்திலேயே குடிப்பதும் இவருக்கு வாடிக்கை. சகாக்களை அடிக்கப் போவது, அன்றாட வேடிக்கை. காம்பிடெண்ட் அதாரிட்டி அதாவது தலைமை அதிகாரி பெல் அடித்தால், இவர் போவது இல்லை; போக முயற்சிக்கும் விசுவாச கடைநிலை ஊழியர்களைப் போகவிடுவது இருக்கட்டும், அந்த பெல் சத்தத்தைக் கேட்க

சு. சமுத்திரம்



"உங்க காரை ஒரு கும்பல்தான் திருடியிருக்கணும்னு எப்படி இவ்வளவு உறுதியாச் சொல்றீங்க?"

"ஒண்டி ஆளா தள்ளக் கூடிய கார் இல்லைங்க அது."

— கிழை அ. கதிர்வேல்

விடாமல் கூட ஊளையிடுவார். இதன் உச்சக் கட்டந்தான், நல்ல நாளான சுதந்திரத் திருநாளில், வயிறு முட்டக் குடித்துவிட்டு, உடல் முழுக்கத் தள்ளாடி, வாய் குலுங்கப் பாடி, வைகுண்டத்தின் வாயில் குத்தி, ஒரு பல்லை முழுசாக விழ்த்திவிட்டார். அக்கம்பக்கத்தார் தடுத்திருக்கவில்லையானால், அந்த இரவுக் காவலரைக் கொலை கூட செய்திருப்பார்.

பிற்சேர்க்கை — மூன்று — சாட்சிகள்

1. பல்லிழந்த வைகுண்டம். .

2. பல் விழுவதைப் பார்த்த அண்மை அலுவலக ஊழியர்களான திருவாளர்கள் திருவோணம், கிட்டப்பா ஆகியோர்.

பிற்சேர்க்கை — நான்கு — ஆவணங்கள்

1. வைகுண்டத்தின் புகார் கடிதம்

2. வைகுண்டத்தின் கீழே விழுந்த பல்.

அண்ணாந்து பார்த்த தங்கமணியை, குனிந்து பார்த்தபடியே பண்டாரம் பெருமூச்சோடு சொன்னான்.

"சிக்கலான கேஸ்... அரசு விதி 14 (ஏ) இல் சஸ்பெண்டானால், வீட்டுக்குப் போக வேண்டிய கேஸ். வைகுண்டத்தை... நீ ஊமைக் குத்தாய் குத்தியிருக்கணும். ஒனக்கு மூளை இருக்குதா.....?"

"அதான் இல்லேன்னு தெரியுதே... ஏன் சொல்லிக் காட்டறே... எனக்கு மூளை தலையில் கிடையாது... கையிலதான்....

எப்படியோ, பண்டாரம் இனிமையோடும், தங்கமணி பயந்தும் எதிர்பார்த்த விசாரணையின் முதல் நாள் வந்தது. தூக்கலான மேடையில் போடப்பட்ட மெத்தை நாற்காலியில் என்குயரி அதிகாரி ஏகாம்பரம் உட்கார்ந்திருந்தார். அவருக்கு வலது பக்கம் நிர்வாக அதிகாரி வகையறுக்களும், இடது பக்கம் பண்டாரம், தங்கமணியும் அமர்ந்திருந்தார்கள். இந்த நிர்வாக அதிகாரிக்கு, 'பிரசன்டிங் ஆபீஸர்' என்ற பொறுப்பு இதுதான் முதலாவது. ஆகையால் முதலிரவில் நடுங்கியது போலவே இங்கேயும் நடுங்கினார். விசாரணை அதிகாரி, தங்கமணியை நிற்க வைத்து, குற்றப் பட்டியலைப் படித்தார். பிறகு, "நீங்கள் இதை ஒப்புக் கொள்கிறீர்களா?" என்று வினவினார். தங்கமணி, பண்டாரம், சொன்னபடி, "இல்லை, இல்லவே இல்லை" என்றான்.

விசாரணை துவங்கப் போனபோது —

பண்டாரம் ஓர் ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினான்.

"மாண்புமிகு விசாரணை அதிகாரி அவர்களே! ஓர் ஆட்சேபணை தெரிவிக்க விரும்புகிறேன். நான்காவது பிற்சேர்க்கையில், வைகுண்டத்தின் வாயில் இருந்து விழுந்ததாகக் கூறப்படும் பல், ரிகார்டாக அதாவது ஆவணமாகக் காட்டப்படுகிறது. ரிகார்ட் எனப்படுவது கையெழுத்திட்ட எழுத்தாலான அல்லது டைப்பாலான அல்லது பிரிண்டாலான காகிதங்களே... அப்படி இருக்கையில் இந்தப் பல் எப்படி ரிகார்டாகும்? ஆகையால் விசாரணையை ரத்து செய்ய வேண்டும்."

ஒரு சின்னப் பல், இப்படி கோரப் பல்லாய் விஸ்வரூபம் எடுக்கும் என்பதை எதிர்பாராத விசாரணை அதிகாரி, சிறிது அதிர்ந்தார். பிறகு சௌகரியமாக நிர்வாக அதிகாரியை நிற்க வைத்தார். அவர் நடுங்கியபடியே பதிலளித்தார்.

"பல்... ஆம்... பல்... அதாவது வைகுண்டத்தின் பல்லை... ஏதாவது ஓர் இடத்தில் போட்டாக வேண்டும்... வேண்டுமானால், சாட்சிகள், பட்டியலில் போடலாம்..."

பண்டாரம் எழுந்து எகிறினான்.

"சாட்சிகள் எனப்படுவோர் பேசும் மனிதர்கள். இந்தப் பல்... வைகுண்டத்திடமோ அல்லது நாய், நரியிடமோ இருக்கும்போது, இந்த வைகுண்டமோ அல்லது நாய், நரியோ முறையே பேச, குலைக்க, ஊளையிட உதவியிருக்கும். இப்போதோ இது ஜடப் பொருள். பேசாத பொருள் சாட்சியாகாது. எழுதப்படாத ஒன்று ரிகார்டாகாது. ஆகையால், பல விஷயங்கள் இந்தப் பல் விஷயத்தில் உள்ளன. இதைத் தீர்க்காமல், விசாரணையைத் துவங்குவது சட்ட விரோதம்."

விசாரணை அதிகாரி, தனது ஒரிஜினல் பதவியான செக்கரடேரியட் சூப்ரின்டெண்ட் பதவி தேவலை என்பது மாதிரி எழப் போனார். எல்லோருமே, ஒரு முக்காலியில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பல்லையே பார்த்தார்கள். உரித்து வைத்த வெள்ளைப் பூண்டு சுளை ஒன்றில், அங்குமிங்குமாய் வெற்றிலைச் சாறை தூவியது மாதிரியான அந்தப் பல்லை, அருவெறுப்பாய்ப் பார்த்தார்கள். எங்கும் அமைதி; எதிலும் அமைதி. இறுதியில், பண்டாரம் விட்டுக் கொடுப்பதுபோல் பேசினான் — வேடிக்கை பார்க்க.


"வேண்டுமானால்.... இந்தப் பல்லை, ஐந்தாவது பிற்சேர்க்கை போட்டு, சாட்சிப் பொருள் என்று போடலாம்..."

நிர்வாக அதிகாரியும், அரசு விதிகளை எழுத்துக்களில் மட்டுமே பிடித்துக்

** பிறருக்கு நீ செய்யும் சேவையெல்லாம் இறைவனுக்குச் செய்யும் சேவையே!

நியூட்ராமுல் சக்தி





க்ரீம் வளம்கொழிக்கும் அமுல் பால், சுகம் தரும் மால்ட், இன்சுவைமிக்க கோக்கோ, கும்மாகும்! இவற்றின் நற்பயனுகத் தான் வலியூட்டுகிறது நியூட்ராமுல். எதனுலும் மிஞ்சமுடியாத நயவிலையிலே கிடைக்கிறது!

	1000 gms.	500 gms.	Refil.
நியூட்ராமுல்	37.21	19.29	–
மால்டோவா	43.75	24.65	22.79
பூஸ்ட்	–	24.89	23.06
போர்ன்விடா	47.48	24.67	22.81

Prices as on 1st January, 1987. Local taxes extra.



அமுல் வழங்கும்

நியூட்ராமுல்

விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக

விற்பனையாளர் விநியோகிப்போர்,
குஜராத் கோ-ஆபரேட்டிவ் மில்க்
மார்க்கெட்டிங் பெடரேஷன் லிட்.,
ஆனந்த்-388 001.

daCunha/GCM/135/86 TAM

பரிசு ரூ.200/-

பொன்மொழிப் போட்டி — 9

இந்த இதழின் உள்பக்க மார்ஜின்களில் ஐந்து பொன்மொழிகள் தரப்பட்டுள்ளன. கீழே ஐந்து பெயர்கள் உள்ளன. எந்தப் பொன்மொழியை யார் சொன்னது? பொருத்தம் பார்த்துப் பெயர் அருகே வெற்றிடத்தில் பொன்மொழியை முழுதுமாகப் பிழையின்றி எழுதவும். விலாசத்தைப் பூர்த்தி செய்து இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். உறையின் மீது, "பொன்மொழிப் போட்டி — 9" என்று அவசியம் குறிப்பிடவும். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.



எஸ். ராதாகிருஷ்ணன்:

அன்னை தெரஸா:

பெர்னார்ட் ஷா:

ருட்யார்ட் கிப்ளிங்:

சத்யசாயி பாபா:

முடிவு தேதி: 18.3.87

என் பெயர்: ....

விலாசம்: ....

....

கொள்பவருமான வெங்கட்ராமன், வெறும் ராமன்போல் பேசினார். ஒரு தலையணைப் புத்தகத்தைக் கையாடப் பிடித்து, கண்ணாடிப் படித்துச் சொன்னார்.

"அரசு விதிப்படி, ஒரு என்குயரி புரொஸீடிங்ஸ்க்கு நான்கு பிற்சேர்க்கைகளே உள்ளது. இந்தப் பல்லுக்கு இடம் கொடுக்க ஐந்தாவது பிற்சேர்க்கை இல்லை..."

பண்டாரம் கத்தினான்.

"அப்படியானால் இந்தப் பல்லின் இடம் எந்த இடம்? இதைத் தீர்மானிக்கும் முன்னால் விசாரணை நடத்த முடியாது. அப்படி நடந்தால் அட்மினிஸ்டிரேட்டிவ் டிரிப்யூனலுக்கு....."

விசாரணை அதிகாரி பண்டாரத்தைப் பயந்து பார்த்தார். ஓடப் பார்த்தார். அது முடியாது என்பதால், விசாரணையை ஒத்தி வைத்தார்.

எப்படியோ, நான்கு மாத கால இழுபறிக்குப் பிறகு, பண்டாரத்தின் பெருந்தன்மையில் (எடுத்த எடுப்பிலேயே தங்கமணியை விடுவித்தால், காசு எப்படி கிடைக்கும்?) பல் விவகாரம் முடிக்கப்பட்டு, விசாரணை இன்னொரு கட்டத்திற்கு வந்தது. வாட்ச்மேன் வைகுண்டம், தான் தாக்கப்பட்ட அநீதியை விவரமாய்ச் சொல்லி முடித்த போது:—

தங்கமணியின் சார்பில், பண்டாரம் எழுந்தான். வைகுண்டத்தைக் குறுக்கு விசாரணை செய்தான்.

"அந்த நாளில் தங்கமணி தள்ளாடித் தள்ளாடி வந்தானா?"

வைகுண்டம் பட்டென்று பதிலளித்தான்.

"இல்லீங்க... ஸ்டெடியாய் வந்தான்."

"குடித்திருந்தால் தள்ளாடி இருப்பானே..."

"இவன் கேஸ் தனி சாமி. குடிக்காட்டி தான் தள்ளாடுவான்."

"அப்படின்னா, இவன் தள்ளாடி நடக்கவில்லையானால் குடித்தான் என்று அர்த்தமா? என்ன அநியாயம்! இந்த நாட்டில் ஒருத்தன் நேராய் நடந்தால் குடிகாரன்....!"

"அப்படி மட்டும் இல்லீங்க... வாசனை கும்முன்னு இருந்தது....."

"சிக்கு முக்கின்னு ஒரு நாட்டு மருந்து இருக்குது... ஜுரத்தைக் கேட்கும். இதைக் குடித்தால் சாராயம் மாதிரி வாசனை வரும். ஆனால் போதை வராது? இப்படி நீயே தங்கமணியிடம் ஒருசமயம் சொல்லி இருக்கே, உண்டா... இல்லையா?"

"சும்மா விளையாட்டுக்கு..."

"நான் கேட்டது, உண்டா இல்லையா...?"

"உண்டுங்க...

"ஆக... பாவம் ஜுரத்துல... சிக்கிமுக்கி மருந்து சாப்பிட்ட தங்கமணி, உன் கெட்ட பார்வையில் ஒரு குடிகாரன்."

"அது மட்டும் இல்லீங்க. பாடிக்கிட்டே வந்தான்."

"என்ன பாட்டு?"

V.V.D

தும்பியின் பல சிறகடிக்க
இளமை ஊஞ்சலாடும் அழகி.
அவள் நெஞ்சைக் கவர்ந்தவைப் பல.
மெல்லத் தவழ்ந்து செல்லும் நீரோடை...
செல்லமாக வீசும் தென்றல்.
உள்ளம் கவர்ந்த கட்டழகன்.
கொள்ளை அழகு மலர்கள்.
பளபளப்பான நீண்ட கூந்தல்
அக்கூந்தலுக்கு
வி.வி.டி. தேங்காய் எண்ணெய்...





VVD-9/86.

வி.வி.டி. தேங்காய் எண்ணெய்
இயற்கைக் கூந்தலின் இளமை ரகசியம்

V.V.D

"அதுவா... ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே... ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று..."

"அன்று சுதந்திர நாள். தங்கமணி ஒரு தேச பக்தன்... சுதந்திர வேட்கை மிக்கவன். பெரியவர்கள் வாங்கித் தந்த சுதந்திரத்தைப் பேணிக் காப்போரில் ஒருவன்... அந்தக் கடமை வேகத்தில் பாரதியின் பாட்டை இசைத்தான். *கொடியேற்ருத அலுவலகத்தில் வந்து சுதந்திரப் பாட்டைப் பாடிஞன். இது குடிகாரன் செயலாம். என்ன அநியாயம்? தேச பக்தர்களுக்குக் கொடுக்கிற மரியாதையா இது?"

நிர்வாக அதிகாரி, தட்டுத் தடுமாறி எழுந்தார். உளறிக் கொட்டிஞரோ அல்லது கொட்டி உளறிஞரோ எப்படியோ பேசிஞர்.

"அப்படியே, தங்கமணி குடிக்கலேன்னு வச்சுக்குவோம். ஆனுலும் வைகுண்டத்தை அடித்திருக்கிருர். இதையாவது விசாரிக்கணும்..."

பண்டாரம், பன்னுடைச் சிரிப்போடு பதிலளித்தான்.

"குடித்துவிட்டு அடித்தான் என்பதுதான் குற்றச்சாட்டு. சிங்கிள் சார்ஜ்... குடித்தான்; அடித்தான்; என்று இரண்டு குற்றச் சாட்டுக்கள் முதலாவது பிற்சேர்க்கையில் போட்டிருந்தால் நி. அதிகாரி சொல்வது ஏற்கக் கூடியது. ஆனுல் குற்றச்சாட்டு ஒன்றே. குடித்துவிட்டு அடித்தான். அதாவது குடிக்கவில்லேயானுல் அடிக்க மாட்டான்..."

விசாரணே அதிகாரி, பண்டாரத்துக்குச் சாதகம் போல தலேயைத் தூக்கியபோது, நிர்வாக அதிகாரி, தம் கையாலேயே, தம் தலேயைக் கிடத்திஞர். பல் விழுந்த வைகுண்டம் பதில் கேள்வி கேட்டான்.

"அவன் அடிக்காட்டி, என் பல்லு எப்படிங்க விழும்?"

பண்டாரம், அவன் மேல் பாயப் போவது போல் கேட்டான்.

"நீ வாட்ச்மேன். இரவில் திருடர்களிடமிருந்து இந்த அலுவலகத்தைக் காப்பாற்ற வேண்டியவன். அப்படிப்பட்ட நீ, தங்கமணி விட்ட ஒரே குத்துல பல்லேப் பறி கொடுத்தால், நீ என்னய்யா வாட்ச்மேன்? ஒன்னே இதுக்காக சஸ்பெண்ட் செய்யாத ஆபீஸ் என்னய்யா ஆபீஸ்?"

எல்லார் முகத்திலும் எள் விழுந்த கோலம். பதவிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து போன வைகுண்டம், தங்கமணி தன்னேத் தாக்கவில்லே என்று கூடச் சொல்லப் போஞன். பிறகு, அதட்டலாகச் சொன்ஞன்.

"இப்போ வேணுமுன்ஞல் அந்தச் சோமாறியைக் கைவைக்கச் சொல்லுங்க பார்க்கலாம்... அந்தப் பொறுக்கிப் பயலுக்கு நான் எப்படிப்பட்ட வாட்ச்மேன்னு நிரூபிச்சுக் காட்டுறேன்..."

"விசாரணே அதிகாரி அவர்களே, இப்போதே இப்படிப் பேசும் வைகுண்டம், அப்போது எப்படிப் பேசியிருப்பார் என்பதை உங்கள் யூகத்துக்கே விட்டுவிடுகிறேன். சரி, வைகுண்டம்! நீ பலசாலி. அதனுல்தான் உன்னே தங்கமணி தாக்கலே... தாக்க முடியாதுன்னு சொல்ல வந்தேன்."

"அப்படின்னு, இந்தப் பல்லு எப்படிங்க கிழே விழும்..."

"இது நாய்ப் பல்லோ, நரிப் பல்லோ... ஆனுல் உன் பல் இல்லே..."

"என் பல்லேதாங்க. இந்த மாதிரி பெரிசா யாருக்கும் கிடையாதுங்க."

"சரி, 'வாயைத் திற. இந்தப் பல்லே அது விழுந்த இடத்துல பொருத்திப் பார்க்கேன். பொருந்திஞல் உன் பல்... சரிதாஞ?"

"சரி வாயைத் தொறந்தது போறுமா?"

"இன்னும் திற.... இன்னும்... இன்னும் கொஞ்சம்.... சரி."

நாக்கை பாம்பு மாதிரி வெளியே போட்டபடி, வைகுண்டம் புற்று மாதிரித் தன் வாயைப் பிளந்தான். இந்தக் கோராமையைக் காணச் சகியாது, எல்லோரும் கண்களே மூடிக் கொண்டபோது,

பண்டாரம், அந்தப் பல்லே எடுத்து, வைகுண்டத்தின் வாய்க்குள் கொண்டு போஞன். ஓர் ஓட்டைக்குள் திணித்தபடியே கேட்டான்.

"சொல்லு... ஒன் பல்லா...."

"என் பல்.... என் பன்... என் பழ்...."

பண்டாரம் விடவில்லே. கூர்மையான அந்தப் பல்லே, அந்த ஓட்டையில் பலமாகக் குத்திஞன், வைகுண்டத்தால் வலி தாங்க முடியவில்லே. இதுவரை பட்டறியாத வேதனே. சித்தம் கலங்கிக் கத்திஞன்.

"என் பல்... இல்லீங்க... என் பல் இன்னே... இன்னே..."

பண்டாரம், வைகுண்டத்தின் வாயில் இருந்து கையை எடுத்தான். கையில் இருந்த பல்லே, நிர்வாக அதிகாரியின் முன்ஞல் போட்டான். விசாரணே அதிகாரியை, 'இன்னுமா... சும்மா இருக்கே' என்பது மாதிரி பார்த்தான். உடனே அவர் எழுந்தார். நிதானமாகப் பேசுவதாய் நினைத்து, எரிச்சலோடு கத்திஞர்.


"குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லே. சார்ஜஸ் அன் புரூவ்ட். அப்புறமாய் டிடெய்ல்ட் ரிப்போர்ட் அனுப்பப்படும்.."

'போதுமடா சாமி' என்று விசாரணே அதிகாரி ஓடிஞர். நிர்வாக அதிகாரி, வாட்ச்மேன் வைகுண்டத்தின் மிச்சம் மீதி பற்களே உடைக்கப் போவதுபோல் அவனேப் பார்த்தார். பிறகு தன் பற்களே உடைத்து விடுவதுபோல் கடித்துக் கொண்டார். அப்புறம் சகாக்களுடன் ஓடிவிட்டார்.

எஞ்சி நின்ற தங்கமணியும், பண்டாரமும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிஞர்கள். பிறகு, தங்கமணி, பண்டாரம் காலில் குப்புற விழுந்தான். உடனே, பண்டாரம், அவனேத் தூக்கி நிறுத்தி, ஒரு கையைக் குவித்து ஆசீர்வாதம் செய்துவிட்டு, அருள்மொழி கூறிஞன்.

"நான் இருக்கேன்... பயம் ஏன்? அடுத்த சஸ்பென்ஷனுக்கும் என்கிட்டேயே வா..."

•• உனது முகஸ்துதியால் மட்டும் ஒருவன் மகிழ்வதில்லை; முகஸ்துதி செய்யுமளவுக்குத் தகுதி உள்ளவன் என்று அவனை நீ நினைப்பதுதான் அவனுக்கு உண்மையான மகிழ்ச்சி தருகிறது!


பாபாலால் & கோ
ஜுவல்லர்ஸ் வழங்கும்
புதுமனை புகுவிழாச்
சிறப்புத் தள்ளுபடி!
நகைசெய்யும் கூலியில்: 20%
நவரத்தினக் கற்களின் விலையில்: 15%
வைரங்களின் விலையில்: 5%
இந்தச் சிறப்புத் திட்டம் 11.3.87 வரை மட்டுமே
ஞாயிற்றுக்கிழமைகள் உட்பட தினமும் இரவு 7.30 மணி வரை ஷோரூம் திறந்திருக்கும்.
பாபாலால் & கோ ஜுவல்லர்ஸ்
24, கதீட்ரல் சாலை,
சென்னை 600 086
போன்: 473030
வாழ்நாளிலேயே மகத்தான ஒரு சந்தர்ப்பம்!
UIPC BCJ 2:87



பூர்வ கதை

சுமார் 980 * ஆண்டுகளுக்கு முன்னால் தென்னாட்டில் வலிமை பெற்று வளர்ந்து வந்த சோழ சாம்ராஜ்யத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி அரசாண்டு வந்தார். அவர் உடல் நிலை திருப்திகரமாக இல்லையென்று நாடெங்கும் ஒரு வதந்தி பரவியது. சுந்தர சோழருக்குப் பிறகு தஞ்சாவூர் சிம்மாசனத்தில் யார் ஏறப் போகிறார் என்ற பேச்சும் எழுந்தது. சுந்தர சோழரின் மூத்த புதல்வரும் பட்டத்து இளவரசருமான ஆதித்த கரிகாலர் அச்சமயம் காஞ்சி நகரில் இருந்தார். அவரிடமிருந்து தஞ்சாவூருக்குச் செய்தி கொண்டு போனான் வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் வாலிபன்.

பழைய வாணர் குலத்தைச் சேர்ந்த இந்த வீரன் வழியில் வீர நாராயண ஏரியை அடுத்திருந்த கடம்பூரில் செங்கண்ணர் சம்புவரையர் என்னும் பிரமுகரின் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கினான். ஆதித்த கரிகாலருக்கு விரோதமாக ஒரு பெரிய சதி நடைபெறுகிறது என்பதை அங்கே தெரிந்து கொண்டான். சோழ ராஜ்யத்தின் தனாதிகாரியும், தானிய பண்டாரத் தலைவருமான பெரிய பழுவேட்டரையர் உள்படப் பல பிரமுகர்கள் அச்சதியில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதையும் அறிந்தான். பழுவேட்டரையர் தமது முதிய பிராயத்தில் ஓர் இளம் பெண்ணை மணந்திருந்ததுடன் அவளைத் தான் போகுமிடமெல்லாம் மூடு பல்லக்கில் அழைத்துச் செல்லுவது வழக்கம். கடம்பூர் மாளிகைக்கும் மூடு பல்லக்கு வந்திருந்தது. அதில் பழுவூர் இளைய ராணி வந்ததாகவே அனைவரும் எண்ணியிருந்தார்கள். ஆனால் நள்ளிரவில் நடந்த சதிக் கூட்டத்தின் முடிவில் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் இரகசியத்தை அம்பலப்படுத்தினார். பட்டுத் திரையை விலக்கியதும் உள்ளேயிருந்து இளவரசர் மதுராந்தக தேவர் வெளிப்பட்டு வந்தார். இவர் சுந்தர சோழரின் பெரிய தந்தையான சிவஞான கண்டராதித்தரின் புதல்வர். அடுத்த பட்டத்துக்கு உரியவர் மதுராந்தக தேவர்தான் என்று அங்கு வந்திருந்த சோழ நாட்டுப் பிரமுகர்கள் ஏக மனதாக முடிவு கட்டி ஜயகோஷம் செய்தார்கள்.

இதையெல்லாம் கடம்பூர் மாளிகையில் ஒரு மறைவான இடத்திலிருந்து வந்தியத்தேவன் கவனித்தது போலவே ஆழ்வார்க்கடியான் நம்பி என்னும் வீர வைஷ்ணவர் ஒருவரும் கவனித்தார். வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் கொள்ளிடக் கரையில் சந்தித்து ஒரே படகில் ஆற்றைக் கடந்தார்கள். ஒருவரிடம் ஒருவர் உளவு அறிய முயன்றார்கள். முடியவில்லை.

ஆழ்வார்க்கடியார் யோசனைப்படி வந்தியத்தேவன் தஞ்சை போகும் மார்க்கத்தில் பிரசித்தி பெற்ற குடந்தை ஜோதிடரிடம் சென்றான். அவருடைய வீட்டில் இரு உயர்குலப் பெண்களைச் சந்தித்தான். அவர்களில் ஒருத்தி சுந்தர சோழ சக்கரவர்த்தியின் அருமைப் புதல்வியான குந்தவை தேவி. இன்னொருத்தி ஈழத்துப் போரில் இறந்த கொடும்பாளூர்ச் சிறிய வேளாளின் மகள். இந்த விவரம் வந்தியத்தேவனுக்கு அப்போது தெரியாது.

குடந்தை ஜோதிடரிடம் வந்தியத் தேவன் புதிதாக எதுவும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆழ்வார்க்கடியாருடைய இன்னொரு பெயர் திருமலையப்பன் என்பது மட்டும் தெரிந்தது. பின்னர் அவன் அரிசிலாற்றங் கரையோடு தஞ்சாவூரை நோக்கிச் சென்றபோது, குடந்தை ஜோதிடரின் வீட்டில் அவன் பார்த்த இரு பெண்களும் இன்னும் சிலரும் நதிக் கரையில் கலங்கி நிற்பதையும் அவர்களுக்கு அருகில் பயங்கரமான ஒரு முதலை வாயைப் பிளந்து கொண்டிருப்பதையும் பார்த்தான். பாய்ந்து சென்று முதலையின் மீது தன் வேலைப் பாய்ச்சினான். அப்பெண்களின் கேலிச்சிரிப்பு அவனுடைய மனத்தில் குழப்பத்தை உண்டாக்கிற்று. பிறகு, அவன் கொல்ல முயன்ற முதலை, இறந்தபின் பதப்படுத்திப் பஞ்சு அடைத்திருந்த முதலை என்று தெரிந்து மிகவும் வெட்கினான். இதனால் ஏற்பட்ட கோபத்தைத் தான் ஏறி வந்த குதிரையின் மீது காட்டி அதை விரைந்து செலுத்தினான்.

இனி, மேலே கதையைப் படிக்கலாம்..........

---

* 1950 இல் எழுதியது.



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பதினெட்டாம் அத்தியாயம்

இடும்பன்காரி

கொள்ளிடத்துப் பரிசில் துறையில் ஆழ்வார்க்கடியார் நம்பி என்னும் திருமலையப்பரை விட்டு விட்டு வந்து விட்டோம். அந்த வீர வைஷ்ணவரை இப்போது கொஞ்சம் கவனிக்கலாம்.

வந்தியத்தேவன் குதிரை ஏறிக் குடந்தை நகர் நோக்கிச் சென்றதும், திருமலையப்பர் அவன் போன திசையைப் பார்த்துக் கொண்டே தமக்குள் சொல்லிக் கொண்டார்:— "இந்த வாலிபன் மிகப் பொல்லாதவனாயிருக்கிறான். நாம் தட்டியில் நுழைந்தால் இவன் கோலத்தில் நுழைகிறான். இவன் உண்மையில் யாருடைய ஆள், எதற்காக எங்கே போகிறான் என்பதை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக் கூட்டத்தில் இவன் கலந்து கொண்டானா என்றும் தெரியவில்லை. நல்ல வேளையாகக் குடந்தை ஜோசியரைப்பற்றி இவனிடம் சொல்லிவைத்தோம். நம்மால் அறிய முடியாததைக் குடந்தை ஜோசியராவது தெரிந்து கொள்ளுகிறாரா, பார்க்கலாம்!......"

"என்ன, சுவாமி! அரசமரத்தோடு பேசறீங்களா, உங்களுக்கு நீங்களே பேசிக்கறீங்களா?" என்ற குரலைக் கேட்டுத் திருமலையப்பர் திரும்பிப் பார்த்தார். கடம்பூரிலிருந்து வந்து வந்தியத்தேவனுக்குக் குதிரை பிடித்துக்கொண்டு வந்து கொடுத்த பணியாள் பக்கத்தில் நின்றான்.

"அப்பனே? நீயா கேட்டாய்? நான் எனக்கு நானே பேசிக் கொள்ளவும் இல்லை; அரசமரத்தோடு பேசவும் இல்லை. இந்த மரத்தின் மேலே ஒரு வேதாளம் இருக்கிறது. அதனோடு சிறிது சல்லாபம்செய்தேன்!" என்றார் திருமலையப்பர்.

"ஓஹோ! அப்படிங்களா! அந்த வேதாளம் சைவமா? வைஷ்ணவமா?" என்றான் அந்த ஆள்.

"அதைத்தான் நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள்ளே நீ

வந்து குறுக்கிட்டாய். வேதாளம் மறைந்துவிட்டது!...போனால்போகட்டும்! உன் பெயர் என்ன, அப்பனே?"


"எதற்காகக் கேட்கறீங்க, சுவாமி!"

"நடுக் கொள்ளிடத்தில் படகு கவிழாமல் காப்பாற்றினையே! அப்படிப்பட்ட புண்ணியவானுகிய உன்னை நான் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டாமா?"

"என் பெயர்... என் பெயர்...இடும்பன்காரி, சுவாமி!" என்று இழுத்தாற்போலச் சொன்னுன்.

"ஓ! இடும்பன்காரியா? எப்போதோ கேட்ட ஞாபகமாயிருக்கிறதே!"

இடும்பன்காரி அப்போது ஒருவிசித்திரமான காரியம் செய்தான். தன்னுடைய விரித்த கைகள் இரண்டையும் ஒன்றின்மேல் ஒன்றைக் குப்புறுத்தி வைத்துக் கொண்டு, இரு ஓரத்துக்



கட்டை விரல்களையும் ஆட்டினுன். ஆட்டிக்கொண்டே திருமலையப்பரின் முகத்தைப் பார்த்தான்.

"அப்பனே! இது என்ன சமிக்ஞை? எனக்கு விளங்கவில்லையே?" என்ருர் திருமலையப்பர்.

அப்போது இடும்பன்காரியின் கரிய முகம் மேலும் சிறிது கருத்தது. கண் புருவங்கள் நெரிந்தன.

"நானு? நான் ஒன்றும் சமிக்ஞை செய்யவில்லையே?" என்ருன்.

"செய்தாய், செய்தாய்! நான்தான் பார்த்தேனே? பரதநாட்டிய சாஸ்திரத்தில் திருமாலின் முதல் அவதாரத்துக்கு ஒரு அஸ்தம் பிடிப்பதுண்டு. அது மாதிரிச் செய்தாயே!"

"திருமாலின் முதல் அவதாரம் என்ருல்? அது என்ன? எனக்குத் தெரியவில்லை, சுவாமி?"

"விஷ்ணுவின் முதல் அவதாரம் தெரியாதா? மச்சாவதாரம்!"

"மீனைச் சொல்லுறீங்களா!"

"ஆமாம், அப்பனே, ஆமாம்!"

"நல்ல வேளை, சாமி! உங்கள் கண்ணே விசித்திரமான கண்ணுயிருக்கிறதே! வெறும் மரத்தின் மேலே வேதாளம் தெரிகிறது. என் வெறுங் கையிலே மச்சாவதாரம் தெரிகிறது! ஒருவேளை மீன் பேரிலே சாமியாருக்குக் கொஞ்சம் ஆசை அதிகமோ!"

"சேச்சே! அந்தமாதிரியெல்லாம் சொல்லாதே, அப்பனே! அதுபோனால் போகட்டும். நம்மோடு படகிலே ஒரு வீர சைவர் வந்தாரே, அவர் எந்தப் பக்கம் போனுர் பார்த்தாயா!"

"பார்க்காமலென்ன? பார்த்தேன். நான் குதிரை வாங்கப் போன பக்கந்தான் அவரும் வந்தார். உங்களைப் பற்றித் திட்டிக் கொண்டே வந்தார்..."

"என்னவென்று என்னைத் திட்டினுர்?"

"உங்களை மறுபடியும் அந்த வீர சைவர் பார்த்தால் உங்கள் முன் குடுமியைச் சிரைத்துத் தலையை மொட்டையடித்து......"

"ஓகோ! அந்த வேலை கூட அவருக்குத் தெரியுமா?"

"உங்கள் திருமேனியிலுள்ள நாமத்தையெல்லாம் அழித்துவிட்டுத் திருநீற்றைப் பூசிவிடுவாராம்!"

"அப்படியானுல் அவரைக் கட்டாயம் நான் பார்த்தேயாக வேண்டும். அவருக்கு எந்த ஊர் என்று உனக்குத் தெரியுமா?"

"அவருக்குப் புள்ளிருக்கும் வேளூர் என்று அவரே சொன்னுருங்க!"

"அந்த வீர சைவரைப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் மறுகாரியம். அப்பனே! நீ எங்கே போகப் போகிருய்! ஒருவேளை நீயும் அந்த வழி வரப் போகிருயோ?"

"இல்லை, இல்லை. நான் எதற்காக அங்கே வருகிறேன்? திரும்பிக் கொள்ளிடத்தைத் தாண்டிக் கடம்பூருக்குத்தான் போகிறேன். இல்லாவிட்டால் எஜமானர் என் கண்ணைப் பிடுங்கி விடமாட்டாரா?"

"அப்படியானுல், உடனே திரும்பு அப்பனே! அதோ படகு புறப்படப்

போகிறது!''

இடும்பன்காரி திரும்பிப் பார்த்த போது, ஆழ்வார்க்கடியார் கூறியது உண்மை என்று தெரிந்தது. படகு புறப்படும் தறுவாயில் இருந்தது.

''சரி, சாமியாரே! நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் படகுத் துறையை நோக்கி விரைந்து சென்றான் இடும்பன்காரி.

பாதிவழியில் ஒருதடவை திரும்பிப் பார்த்தான். அதற்குள் ஆழ்வார்க்கடியார் ஒரு விந்தையான காரியம் செய்திருந்தார். மளமளவென்று அந்த அரசமரத்தின்மீது பாய்ந்து ஏறிக் கிளைகள் அடர்ந்திருக்கும் இடத்துக்குப் போய்விட்டார். ஆகையால் இடும்பன்காரியின் கண்ணோட்டத்தில் அவர் விழவில்லை.

இடும்பன்காரி நதியின் பரிசில் துறையை அடைந்தான். படகோட்டிகளில் ஒருவன், ''அக்கரைக்கு வருகிறாயா, அப்பா?'' என்று கேட்டான்.

''இல்லை, அடுத்த படகில் வரப் போகிறேன். நீ போ!'' என்றான் இடும்பன்காரி.

''அடே! இவ்வளவுதானா? நீ வருகிற வேகத்தைப் பார்த்துவிட்டு அல்லவா படகை நிறுத்தினேன்!'' என்று சொல்லி ஓடக்காரன் கோல் போட்டு ஓடத்தை நதியில் செலுத்தினான்.

அதற்குள் அரசமரத்தின் நடு மத்தி வரையில் ஏறி நன்றாக மறைந்து உட்கார்ந்து கொண்ட திருமலையப்பர், ''ஓகோ! நான் நினைத்தது சரியாகப் போயிற்று. இவன் படகில் ஏறவில்லை; திரும்பித்தான் வரப் போகிறான். வந்த பிறகு எந்தப் பக்கம் போகிறான் என்று பார்க்க வேண்டும். இவனுடைய கைகள் மச்ச ஹஸ்த முத்திரை காட்டியதை நான் நன்றாகப் பார்த்தேன். அதன் பொருள் என்ன! மீன்! மீன்! மீன் சின்னம் எதைக் குறிக்கிறது! ஆ! மீன் பாண்டியனுடைய கொடியில் பொறித்ததல்லவா? ஒரு வேளை, ஆஹாஹா!...... அப்படியும் இருக்குமோ? பார்க்கலாம்! சிறிது பொறுமையுடனே இருந்து பார்க்கலாம். பொறுத்தவர் பூமி ஆள்வார்; பொங்கியவர் காடாள்வார்... ஆனால், இந்தக் காலத்தில் பூமி ஆள்வதைக் காட்டிலும் காடு ஆள்வதே மேலானது என்று தோன்றுகிறது. ஆனாலும் பொறுத்துப் பார்க்கலாம்!''......இவ்விதம் அரசமரத்திலிருந்த அருவமான வேதாளத்தினிடம் திருமலையப்பர் சொல்லிக் கொண்டிருந்தார்.

விரைவில் அவர் எதிர்பார்த்தபடியே நடந்தது. படகு இடும்பன்காரியை ஏற்றிக் கொள்ளாமலே சென்றது. இடும்பன்காரி நதிக்கரையிலிருந்தபடி அரசமரத்தடியை உற்று உற்றுப் பார்த்தான். பிறகு நாலா திசைகளிலும் துளாவிப் பார்த்தான். ஆழ்வார்க்கடியார் எங்குமில்லையென்பதை நன்கு தெரிந்து கொண்டு திரும்பி அதே அரசமரத்தடிக்கு வந்து சேர்ந்தான். இன்னும் ஒரு தடவை சுற்று முற்றும் நன்றாய்ப் பார்த்துவிட்டு அந்த மரத்தடியிலேயே உட்கார்ந்துகொண்டான். எதையோ, அல்லது யாரையோ எதிர்பார்ப்பவன் போல் அவனுடைய கண்கள் நாலாபுறமும் சுழன்று நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால் மரத்தின் மேலே மட்டும் அவன் அண்ணாந்து பார்க்கவில்லை. பார்த்திருந்தாலும் திருமலையப்பர் நன்றாகத் தம் திருமேனியை மறைத்துக் கொண்டிருந்தபடியால் மரத்தின்மேல் அவர் உட்கார்ந்திருப்பது இடும்பன்காரிக்குத் தெரிந்திராது.

சுமார் ஒரு நாழிகை நேரம் இவ்விதம் சென்றது. திருமலையப்பருக்குக் கால்கள் மரத்துப் போகத் தொடங்கின. இனி வெகு நேரம் மரத்தின் மேல் இருக்க முடியாதென்று தோன்றியது. இடும்பனோ மரத்தடியிலிருந்து எழுந்திருக்கும் வழியாகத் தோன்றவில்லை. தப்பித்துப் போவது எப்படி? எவ்வளவு ஜாக்கிரதையாக மரத்தின் மறுபக்கத்தில் இறங்கினாலும் ஏதாவது சத்தம் கேளாமல் இராது! கேட்டால் இடும்பன்காரி உடனே பார்த்துவிடுவான். அவனோ இடுப்பில் ஒரு கூரிய கொடுவாளைச் செருகிக் கொண்டிருந்தான். அதை இவர்பேரில் அவன் பிரயோகிக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?

வேறு என்னதான் செய்வது? பேய் பிசாசைப் போல் பயங்கரமாகச் சத்தமிட்டுக் கொண்டு இடும்பனின் மேலேயே குதிக்கலாமா? குதித்தால் தன்னை வேதாளம் என்று நினைத்துக் கொண்டு அவன் பயத்தினால் மூர்ச்சை அடைந்து விழலாம் அல்லவா! அல்லது தப்பித்து ஓடப் பார்க்கலாம் அல்லவா! அச்சமயம் தானும் தப்பி ஓடிவிடலாம்!...... இவ்விதம் திருமலையப்பர் எண்ணிய சமயத்தில், அவருடைய பொறுமையின் சோதனை முடிவடையும் எனத் தோன்றியது.

ஓர் ஆள் தென்மேற்கிலிருந்து, அதாவது குடந்தைச் சாலை வழியாக, வந்து கொண்டிருந்தான். அவனுக்காகத்தான் இடும்பன்காரி இத்தனை நேரமாய்க் காத்திருக்கிறான் என்று திருமலையப்பரின் உள்ளுணர்ச்சி கூறியது. அவருடைய உள்ளுணர்ச்சி தவறாகக் கூறவில்லையென்பது விரைவிலேயே தெரிய வந்தது.

புது ஆள் வந்ததைப் பார்த்ததும் அரச மரத்தடியில் உட்கார்ந்திருந்த இடும்பன் எழுந்து நின்றான்.

வந்தவன், முன்னால் இடும்பன் செய்த சமிக்ஞையைச் செய்தான். அதாவது ஒரு விரித்த புறங்கையின் மேல் இன்னொரு விரித்த கையை வைத்து, இரண்டு கட்டை விரல்களை ஆட்டி, மச்ச ஹஸ்தம் பிடித்துக் காட்டினான். அதைப் பார்த்த இடும்பனும் அதே மாதிரி செய்து காட்டினான்.

"உன் பெயர் என்ன?" என்று வந்தவன் கேட்டான்.

"என் பெயர் இடும்பன்காரி. உங்கள் பெயர்?"

"சோமன் சாம்பவன்!"

"உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

"நானும் உன்னைத்தேடிக்கொண்டுதான் வந்தேன்."

"நாம் எந்தத் திசையில் போக வேண்டும்?"

"மேற்குத் திசையில்தான்!"

"எவ்விடத்துக்கு?"

"பகைவனின் பள்ளிப் படைக்கு!"

"திருப்புறம்பயம் அருகில்......"

"இரைந்து பேசாதே! யார் காதிலாவது விழப் போகிறது!" என்று சொல்லிச் சோமன் சாம்பவன் நாலா பக்கமும் பார்த்தான்.

"இங்கே ஒருவரும் இல்லை. முன்னாலேயே நான் பார்த்துவிட்டேன்."

"பக்கத்தில் எங்கும் ஒளிந்திருக்கவும் இடமில்லையே?"

"கிடையவே கிடையாது!"

"அப்படியானால் புறப்படு. எனக்கு அவ்வளவு நன்றாக வழி தெரியாது. நீ முன்னால் போ! நான் சற்றுப் பின்னால் வருகிறேன். அடிக்கடி நின்று நான் பின்னால் வருகிறேனா என்று பார்த்துக் கொண்டு போ!"

"ஆகட்டும். வழி நல்ல வழியல்ல. காடும் மேடும் முள்ளும் கல்லுமாயிருக்கும். ஜாக்கிரதையாகப் பார்த்து நடந்து வரவேண்டும்!"


"சரி, சரி! நீ புறப்பட்டுப் போ! காட்டு வழியாயிருந்தாலும் யாராவது எதிர்ப்பட்டால் மறைந்து கொள்ள வேண்டும். தெரிந்ததா?"

"தெரிந்தது, தெரிந்தது!"

இடும்பன்காரி கொள்ளிடக் கரையோடு மேற்குத் திசையை நோக்கிப் போனான். அவனுக்குச் சற்றுப் பின்னால் சோமன் சாம்பவனும் தொடர்ந்து சென்றான்.

இருவரும் கண்ணுக்கு மறையும் வரையில் ஆழ்வார்க்கடியார் மரத்தின் மேலேயே இருந்தார். எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தார்.

"ஆஹா! காலம் பொல்லாத காலம்! என்னவெல்லாமோ எதிர்பாராத காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. ஏதோ ஒரு பெரிய மர்மமான காரியத்தைத் தெரிந்து கொள்ளப் போகிறோம். தெரிந்து கொள்ளக் கடவுள் அருளால் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இனி நம்முடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது விஷயத்தை அறிவது. கடம்பூர் மாளிகையில் அரைகுறையாகத்தான் தெரிந்து கொள்ள முடிந்தது. இங்கே அப்படி ஏமாந்து போகக் கூடாது. திருப்புறம்பயம் பள்ளிப் படையென்றால், இவர்கள் கங்க மன்னன் பிரிதிவீபதியின் பள்ளிப்படையைத்தான் சொல்லியிருக்க வேண்டும். அந்தப் பள்ளிப் படையைக் கட்டி நூறு வருஷம் ஆகிறது. ஆகையால் பாழடைந்து கிடக்



கிறது. சுற்றிலும் காடு மண்டிக் கிடக்கிறது.. கிராமமோ சற்றுத் தூரத்தில் இருக்கிறது. அங்கே எதற்காக இவர்கள் போகிறார்கள்! இந்த இரண்டு பேர் மட்டும் பேச வேண்டிய விஷயமாயிருந்தால், இங்கேயே பேசிக் கொள்ளுவார்கள். செய்ய வேண்டிய காரியமாயிருந்தாலும் இங்கேயே செய்துவிடுவார்கள். காட்டு வழியில் ஒரு காத தூரம் போக வேண்டியதில்லையே? ஆகையால், அங்கே இன்னும் சிலரும் வரப் போகிறார்கள் என்பது நிச்சயம். எதற்காக? பிரிதிவீபதியின் பள்ளிப் படையைப் 'பகைவனின் பள்ளிப்படை'யென்று இவர்களில் ஒருவன் சொல்லுவானேன்! பிரிதிவீபதி யாருக்குப் பகைவன்! ஆகா! நாம் நினைத்தது உண்மையாகும் போலிருக்கிறதே! எதற்கும் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். இவர்கள் கொள்ளிடக் கரையோடு போகிறார்கள். நாம் மண்ணிக் கரையோடு போகலாம். மண்ணிக் கரையில் காடு அதிக அடர்த்தியாயிருந்தாலும் பாதகமில்லை. காடும் மேடும் முள்ளும் கல்லும் நமக்கு என்ன இலட்சியம்? அவைதான் நம்மைக் கண்டு பயப்பட வேண்டும்!......''

இவ்வாறு எண்ணிக் கொண்டும் வாயோடு முணுமுணுத்துக் கொண்டும் திருமலையப்பர் அரச மரத்திலிருந்து இறங்கிச் சற்றுத் தெற்கு நோக்கிப் போனார். மண்ணியாறு வந்தது. அதன் கரையோடு மேற்கு நோக்கி நடையைக் கட்டினார்.

ஜன சஞ்சாரமில்லாத அடர்ந்த காடுகளின் வழியாக ஆழ்வார்க்கடியார் புகுந்து சென்று சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் திருப்புறம்பயம் பள்ளிப் படைக் கோயிலை அடைந்தார்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

ரணகள அரண்யம்

பழந்தமிழ்நாட்டில் போர்க்களத்தில் உயிர் துறந்த மகா வீரர்களின் ஞாபகமாக வீரக் கல் நட்டுக் கோயில் எடுப்பது மரபு.

வெறுங் கல்மட்டும் ஞாபகார்த்தமாக நாட்டியிருந்தால் 'நடுகற்கோயில்' என்று வழங்குவார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு தெய்வத்தின் சிலையையும் ஸ்தாபித்து ஆலயமாக எழுப்பியிருந்தால், அது **'பள்ளிப்படை'** என்று வழங்கப்படும்.

குடந்தை நகருக்கு அரைக்காதம் வடமேற்கில் மண்ணியாற்றுக்கு வடகரையில் திருப்புறம்பயம் என்னும் கிராமத்துக்கருகில் ஒரு பள்ளிப்படைக் கோயில் இருந்தது. இது அந்தப் பிரதேசத்தில் நடந்த ஒரு மாபெரும் போரில் உயிர்நீத்த கங்க மன்னன் பிரிதிவீபதியின் ஞாபகமாக எடுத்தது. உலக சரித்திரம் அறிந்தவர்கள் **வாடர்லூச் சண்டை, பானிபெத் சண்டை, பிளாசிச் சண்டை** போன்ற சில சண்டைகளின் மூலம் சரித்திரத்தின் போக்கே மாறியது என்பதை அறிவார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் திருப்புறம்பயம் சண்டை அத்தகைய முக்கியம் வாய்ந்தது. நமது கதை நடந்த காலத்துக்குச் சுமார் நூறு ஆண்டு காலத்துக்கு முன்னால் அச்சண்டை நடந்தது. அதன் வரலாறு தமிழ் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

கரிகால் வளவன், பெருநற்கிள்ளி

இளஞ்சேட்சென்னி, தொடித்தோட் செம்பியன் முதலிய பழைய சோழ குலமன்னர்கள் சீரும் சிறப்புமாகச் சோழ நாட்டை ஆண்டிருந்த காலத்துக்குப் பிறகு ஏறக்குறைய ஐந்நூறு, அறுநூறு வருஷ காலம் சோழர் குலத்தின் கீர்த்தியை நீடித்த கிரகணம் பிடித்திருந்தது. தெற்கே பாண்டியர்களும், வடக்கே பல்லவர்களும் வலிமை மிக்கவர்களாகிச் சோழர்களை நெருக்கி வந்தார்கள். கடைசியாக, சோழர் குலத்தார் பாண்டியர்களின் தொல்லையைப் பொறுக்க முடியாமல் அவர்களுடைய நெடுங்காலத் தலைநகரமான உறையூரை விட்டு நகர வேண்டி வந்தது. அப்படி நகர்ந்தவர்கள் குடந்தைக்கு அருகில் இருந்த பழையாறை என்னும்நகருக்குவந்துசேர்ந்தார்கள். ஆயினும், உறையூர் தங்கள் தலைநகரம் என்னும் உரிமையை விட்டுவிடவில்லை. 'கோழி வேந்தர்' என்னும் பட்டத்தையும் விட்டுவிடவில்லை.

பழையாறைச் சோழமன்னர்களில் விஜயாலய சோழர் என்பவர் இணையில்லா வீரப்புகழ் பெற்றவர். இவர் பற்பல யுத்தகளங்களில் முன்னணியில் நின்று போர் செய்து உடம்பில் தொண்ணூற்றாறு காயங்களை அடைந்தவர்.

"எண்கொண்ட தொண்ணூற்றின்
மேலுமிரு மூன்று
புண்கொண்ட வெற்றிப்புரவலன்..."

என்றும்,

"புண்ணூறு தன்திருமேனியிற்
பூணகத்
தொண்ணூறும் ஆறுஞ் சுமந்
தோனும்"

என்றெல்லாம் பிற்காலப் புலவர்களால் பாடப் பெற்றவர்.

இவருடைய மகன் ஆதித்த சோழன் தந்தைக்கு இணையான பெரு வீரனாக விளங்கினான். இவனும் பல போர்களில் கலந்துகொண்டு புகழ்பெற்றான்.

விஜயாலய சோழர் முதுமைப் பிராயத்தை அடைந்து மகனுக்குப் பட்டங் கட்டிவிட்டு ஓய்ந்திருந்தார். அச்சமயத்தில் பாண்டியர்களுக்கும் பல்லவர்களுக்கும் பகைமை முற்றி அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலத்துப் பாண்டிய மன்னனுக்கு வரகுண வர்மன் என்று பெயர்; பல்லவ அரசனுக்கு அபராஜிதவர்மன் என்று பெயர். இந்த இரண்டு பேரரசர்களுக்குள் நடந்த சண்டைகள் பெரும்பாலும் சோழ நாட்டில் நடைபெற்றன. யானையும்யானையும்மோதிச் சண்டையிடும்போது நடுவில் அகப்பட்டுக்கொள்ளும்சேவல்கோழியைப் போல் சோழ நாடு அவதிப்பட்டது. சோழ நாட்டு மக்கள் துன்புற்றார்கள். எனினும், இப்போர்களை விஜயாலய சோழர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். ஒவ்வொரு போரிலும் ஏதாவது ஒரு கட்சியில் தம்முடைய சிறிய படையுடன் போய்க்



கலந்து கொண்டார். வெற்றி
தோல்விகள் மாறி மாறி வந்தா
லும் சோழ நாட்டில் போர்க்
குணம் மிகுந்து வந்தது.

காவேரி நதியி
லிருந்து பல
கிளை நதிகள்
பிரிந்து சோழ
நாட்டை
வளப்படுத்து
வதை யாவரும் அறிவார்கள்.
அக்கிளை நதிகள் யாவும் காவி
ரிக்குத் தெற்கே பிரிகின்றன.
கொள்ளிடத்திலிருந்து பிரிந்து
காவிரிக்கும் கொள்ளிடத்துக்
கும் நடுவில் பாயும் நதி ஒன்றே
ஒன்றுதான். அதற்கு மண்ணி
யாறு என்று பெயர்.

இந்த மண்ணியாற்றின் வட
கரையில், திருப்புறம்பயம் கிரா
மத்துக்கு அருகில், பாண்டியர்
களுக்கும் பல்லவர்களுக்கும்
இறுதியான பலப் பரீட்சை நடந்
தது. இருதரப்பிலும் படைபலம்
ஏறக்குறைய சமமாக இருந்தது.
பல்லவ அபராஜிதவர்மனுக்
குத் துணையாகக் கங்க நாட்டுப்
பிரிதிவிபதி வந்திருந்தான்.
ஆதித்த சோழனும் அபராஜித
வர்மனுடைய கட்சியில் சேர்ந்
திருந்தான்.

பாண்டிய சைன்யத்துடனும்
பல்லவ சைன்யத்துடனும் ஒப்
பிட்டால் சோழ சைன்யம் மிகச்





சிறியதாகவே இருந்தது. எனினும், இம்முறை பாண்டியன் வெற்றி பெற்றால், சோழ வம்சம் அடியோடு நாசமாக நேரும் என்று ஆதித்தன் அறிந்திருந்தான். ஆகையால், பெரிய சமுத்திரத்தில் கலக்கும் காவேரி நதியைப் போல் பல்லவரின் மகா சைன்யத்தில் தன்னுடைய சிறு படையையும் சேர்த்திருந்தான்.

காத தூரத்துக்குக் காத தூரம் ரண களம் பரவியிருந்தது. ரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் நாலு வகைப் படைகளும் போரில் ஈடுபட்டிருந்தன. மலையோடு மலை முட்டுவது போல் யானைகள் ஒன்றையொன்று தாக்கிய போது நாலா திசைகளும் அதிர்ந்தன. புயலோடு புயல் மோதுவது போல் குதிரைகள் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்தபோது குதிரை வீரர்களின் கையிலிருந்த வேல்கள் மின்வெட்டுகளைப் போல் பிரகாசித்தன. ரதத்தோடு ரதம் மோதிச் சுக்குநூறாகித் திசையெல்லாம் பறந்தன. காலாள் வீரர்களின் வாள்களோடு வாள்களும், வேல்களோடு வேல்களும் உராய்ந்தபோது எழுந்த ஜங்கார ஒலிகளினால் திக்குத் திகாந்தங்கள் எல்லாம் நடுநடுங்கின.

மூன்று நாள் இடைவிடாமல் சண்டை நடந்த பிறகு, ரண களம் முழுதும் ரத்தக் கடலாகக் காட்சியளித்தது. அந்தக் கடலில் செத்த யானைகளும் குதிரைகளும் திட்டுத் திட்டாகக் கிடந்தன. உடைந்த ரதங்களின் பகுதிகள் கடலில் கவிழ்ந்த கப்பலின் பலகைகளைப் போல் மிதந்தன. இருதரப்பிலும் ஆயிரம் பதினாயிரம் வீரர்கள் உயிரிழந்து கிடந்தார்கள்.

மூன்று நாள் இவ்விதம் கோர யுத்தம் நடந்த பிறகு பல்லவர் சைன்யத்தில் ஒரு பகுதிதான் மிஞ்சியிருந்தது. மிஞ்சியவர்களும் மிகக் களைத்திருந்தார்கள். பாண்டிய நாட்டு வீர மறவர்களோ, களைப்பையே அறியாத வரம் வாங்கி வந்தவர்களைப் போல், மேலும் மேலும் வந்து தாக்கினார்கள். அபராஜித வர்மனுடைய கூடாரத்தில் மந்திராலோசனை நடந்தது. அபராஜிதன், பிரிதிவீபதி, ஆதித்தன் ஆகிய மூன்று மன்னர்களுடன் படைத் தலைவர்களும் கலந்து ஆலோசித்தார்கள். இனி எதிர்த்து நிற்க முடியாது என்றும், பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வட கரைக்குச் சென்றுவிடுவதே உசிதம் என்றும் முடிவு செய்தார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் போர்க்களத்தில் ஓர் அதிசயம் நடந்தது. முதுமையினால் தளர்ந்தவனும், உடம்பில் தொண்ணூற்றாறு காய வடுக்கள் உள்ளவனும், கால்களில் பட்ட கொடிய காயத்தினால் எழுந்து நிற்கும் சக்தியை இழந்தவனுமான விஜயாலய சோழன் எப்படியோ யுத்தரங்கத்துக்கு வந்து விட்டான். பல்லவ சைன்யம் பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடக்கே போய் விட்டால் சோழ நாடு மறுபடியும் நெடுங்காலம் தலையெடுக்க முடியாது என்பதை உணர்ந்திருந்த அந்தக் கிழச்சிங்கத்தின் கர்ஜனை பல்லவர் கட்சியில் எஞ்சியிருந்த வீரர்களுக்குப் புத்துயிர் அளித்தது.

"ஒரு யானை! எனக்கு ஒரு யானை கொடுங்கள்!" என்றான்.

"நமது யானைப் படை முழுதும் அதமாகிவிட்டது; ஒன்றுகூடத் தப்பவில்லை" என்றார்கள்.

"ஒரு குதிரை! ஒரு குதிரையாவது கொண்டு வாருங்கள்!" என்றான்.

"உயிருள்ள குதிரை ஒன்றுகூட



மிஞ்சவில்லை'' என்று சொன்னார்கள்.

''சோழநாட்டுச் சுத்த வீரர்கள் இருவரேனும் மிஞ்சி உயிரோடிருக்கிறார்களா? இருந்தால் வாருங்கள்!'' என்று விஜயாலயன் அலறினான்.

இருவருக்குப் பதிலாக இருநூறு பேர் முன்னால் வந்தார்கள்.

''இரண்டு பேர் — தோளில் வலிவும் நெஞ்சில் உரமும் உள்ள இரண்டு பேர், — என்னைத் தோள் கொடுத்துத் தூக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்கள் இரண்டு இரண்டு பேராகப் பின்னால் வந்துகொண்டிருங்கள். என்னைச் சுமக்கும் இருவர் விழுந்தால், பின்னால் வரும் இருவர் என்னைத்தூக்கிக்கொள்ளுங்கள்!'' என்றான் அந்த வீராதி வீரன்.

அப்படியே இரண்டு பீமசேனர்கள் முன்னால் வந்து விஜயாலயனைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

''போங்கள்! போர் முனைக்குப் போங்கள்!'' என்று கர்ஜித்தான்.

போர்க்களத்தில் ஓரிடத்தில் இன்னமும் சண்டை நடந்து கொண்டிருந்தது. தெற்கத்தி மறவர்கள் கீழை நாட்டாரைத் தாக்கிப் பின்வாங்கச் செய்துகொண்டே வந்தார்கள்.

இருவருடைய தோள்களில் அமர்ந்த விஜயாலயன் அந்தப் போர் முனைக்குப் போனான். இரண்டு கைகளிலும் இரண்டு நீண்ட வாள்களை வைத்துக் கொண்டு, திருமாலின் சக்ராயுதத்தைப் போல் சுழற்றிக் கொண்டு, எதிரிகளிடையே புகுந்தான். அவனைத் தடுக்க யாராலும் முடியவில்லை., அவன் புகுந்து சென்ற வழியெல்லாம் இருபுறமும் பகைவர்களின் உடல்கள் குவிந்து கொண்டேயிருந்தன.



ஆம்; இந்த அதிசயத்தைப் பார்ப்பதற்காகப் பின்வாங்கிய வீரர்கள் பலரும் முன்னால் வந்தார்கள்: விஜயாலயனுடைய அமானுஷ்ய வீரத்தைக் கண்டு முதலில் சிறிது திகைத்து நின்றார்கள். பிறகு, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்திக்கொண்டு தாங்களும் போர் முனையில் புகுந்தார்கள்.

அவ்வளவுதான்; தேவி ஜய லக்ஷ்மியின் கருணை கடாட்சம் இந்தப் பக்கம் திரும்பி விட்டது!

பல்லவர் படைத் தலைவர்கள் பின்வாங்கிக் கொள்ளிடத்துக்கு வடகரை போகும் யோசனையைக் கைவிட்டார்கள்.

மூன்று வேந்தர்களும் தத்தமக்குரிய மூலபல வீரர்கள் புடைசூழப் போர் முனையில் புகுந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் பாண்டிய வீரர்கள் பின்வாங்கத் தொடங்கினார்கள். பிறகு அவர்கள் பாண்டிய நாட்டின் எல்லைக்குச் சென்றுதான் நின்றார்கள்.

கங்க மன்னன் பிரிதிவீபதி அன்றையப் போரில் செயற்கரும் செயல்கள் பல புரிந்த பிறகு தன் புகழுடம்பை அப்போர்க்களத்தில் நிலைநாட்டி விட்டு வீரசொர்க்கம் சென்றான்.

அத்தகைய வீரனுடைய ஞாபகார்த்தமாக அப்போர்க்களத்தில் வீரக்கல் நாட்டினார்கள். பிறகு பள்ளிப்படைக் கோயிலும் எடுத்தார்கள்.

அத்தகைய கொடூரமான பயங்கர யுத்தம் நடந்த ரணகளம் சில காலம் புல் பூண்டுகள் முளையாமல் கிடந்தது. அந்தப் பக்கம் மக்கள் போவதேயில்லை. சிறிது காலத்துக்குப் பிறகு அங்கே காடு மண்ட ஆரம்பித்தது. பள்ளிப்படைக் கோவிலைச் சுற்றிக் காடு அடர்ந்தது. புதர்களில் நரிகள் குடிபுகுந்தன. இருண்ட மரக் கிளைகளில் ஆந்

தைகளும் கோட்டான்களும் வாசம் செய்தன. நாளடைவில் அப்பள்ளிப் படைக் கோயிலுக்கு யாரும் போவதை நிறுத்தி விட்டார்கள். எனவே, கோயிலும் நாளுக்கு நாள் தகர்ந்து போய் வந்தது. நமது கதை நடக்கும் காலத்தில் பாழடைந்து கிடந்தது.

இத்தகைய பாழடைந்த பள்ளிப் படைக் கோயிலுக்கு இருட்டுகிற நேரத்தில் ஆழ்வார்க்கடியான் வந்து சேர்ந்தான். கோயிலின் மேல் மண்டப விளிம்பில் அமைத்த காவல் பூத கணங்கள் அவனைப் பயமுறுத்தப் பார்த்தன. ஆனால் அந்த வீர வைஷ்ணவ சிகாமணியா பயப்படுகிறவன்? பள்ளிப்படைக் கோயில் மண்டபத்தின் மீது தாவி ஏறினன். ம்ண்டபத்தின் மீது கவிந்திருந்த மரக்கிளையின் மறைவில் உட்கார்ந்து கொண்டான். நாலாபுறமும் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் அடர்த்தியான இருளைக் கிழித்துக் கொண்டு பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தன. அவனுடைய செவிகளும் அவ்வாறே மிக அற்பமான ஓசையையும் கேட்கக் கூடிய கூர்மை பெற்றிருந்தன.

இருட்டி ஒரு நாழிகை, இரண்டு நாழிகை, மூன்று நாழிகையும் ஆயிற்று. சுற்றிலும் சூழ்ந்திருந்த அந்தகாரம் அவனை அடியோடு அமுக்கி மூச்சுத் திணறச் செய்தது. அவ்வப்போது காட்டு மரங்களினிடையே சலசலவென்று ஏதோ சத்தம் கேட்டது. அதோ ஒரு மர நாய் மரத்தின் மேல் ஏறுகிறது. அதோ ஓர் ஆந்தை உறுமுகிறது! இந்தப் பக்கம் ஒரு கோட்டான் கூவுகிறது! மரநாய்க்குப் பயந்து ஒரு பறவை சடசடவென்று சிறகை அடித்துக் கொண்டு மேல் கிளைக்குப் பாய்கிறது. அதோ, நரிகள் ஊளையிடத் தொடங்கி விட்டன.

தலைக்கு மேலே ஏதோ சத்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தான். அணிலோ, ஓணானே, அல்லது அத்தகைய வேறொரு சிறிய பிராணியோ



மரக்கிளைகளின் மீது தாவி ஏறிற்று.

மரக்கிளைகளின் இடுக்குகளின் வழியாக வானத்தில் ஒரு சிறு பகுதி தெரிந்தது. விண் மீன்கள் 'முணுக்' 'முணுக்' என்று மின்னிக் கொண்டு கீழே எட்டிப் பார்த்தன. அந்தத் தனிமை மிகுந்த கனந்தகாரத்தினிடையே வானத்து நட்சத்திரங்கள் அவனுடன் நட்புரிமை கொண்டாடுவது போல் தோன்றின. எனவே, ஆழ்வார்க்கடியாராகிய திருமலையப்பர் மரக்கிளைகளின் வழியாக எட்டிப் பார்த்த நட்சத்திரங்களைப் பார்த்து, மெல்லிய குரலில் பேசினர்: — 'ஓ! நட்சத்திரங்களே! உங்களை இன்றைக்குப் பார்த்தால்பூவுலகமக்க



ளின் அறிவீனத்தைப் பார்த்துக் கேலி செய்து கண்சிமிட்டிச் சிரிப்பவர்களைப் போலத் தோன்றுகிறது. சிரிப்பதற்கு உங்களுக்கு வேண்டிய காரணம் உண்டு. நூறு வருஷத்துக்கு முன்னால் இதே இடத்தில் நடந்த பெரும் போரையும், போர் நடந்த பிறகு இங்கே வெகுநாள் வரை இரத்த வெள்ளம் பெருகிக் கிடந்ததையும் பார்த்திருக்கிறீர்கள். மனிதர்கள் எதற்காக இப்படி ஒருவரையொருவர் பகைக்க வேண்டும் என்று அதிசயிக்கிறீர்கள். எதற்காக இப்படி மனித இரத்தத்தைச் சிந்தி வெள்ளமாக ஓடச் செய்ய வேண்டும் என்று வியக்கிறீர்கள். இதற்குப் பெயர் வீரமாம்!


ஒரு மனிதன் இறந்து இருநூறு வருஷம் ஆகியும் அவனிடம் பகைமை காட்டுகிறார்கள்! இந்தப் பள்ளிப்படை பகைவனுடைய பள்ளிப்படையாம்! பகைவன் பள்ளிப்படைக்கு அருகில் கூடி யோசிக்கப் போகிறார்களாம்! செத்துப் போனவர்களின் பெயரால் உயிரோடிருப்பவர்களை இம்சிப்பதற்கு! வானத்து விண்மீன்களே! நீங்கள் ஏன் சிரிக்க மாட்டீர்கள்? சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்!

கடவுளே! இங்கு வந்தது வீண்தானா? இன்றிரவெல்லாம் இப்படியே கழியப் போகிறதா? எதிர்பார்த்த ஆட்கள் இங்கே வரப் போவதில்லையா? என் காதில் விழுந்தது தவறா? நான் சரியாகக் கவனிக்கவில்லையா? அல்லது அந்த மச்ச ஹஸ்த சமிக்ஞையாளர்கள் தங்கள் யோசனையை மாற்றிக் கொண்டு வேறிடத்துக்குப் போய் விட்டார்களா! — என்ன ஏமாற்றம்? என்ன ஏமாற்றம்? இன்றைக்கு மட்டும் நான் ஏமாந்து போனால் என்னை நான் ஒருநாளும் மன்னித்துக் கொள்ள முடியாது!...... ஆ! அதோ சிறிது வெளிச்சம் தெரிகிறது! அது என்ன? வெளிச்சம் மறைகிறது; மறுபடி தெரிகிறது. சந்தேகமில்லை. அதோ, சுளுந்து கொளுத்திப் பிடித்துக் கொண்டு யாரோ ஒருவன் வருகிறான்! இல்லை; இரண்டு பேர் வருகிறார்கள். காத்திருந்தது வீண் போகவில்லை!

வந்தவர்கள் இருவரும் பள்ளிப்படையைத் தாண்டிக் கொண்டு சிறிது அப்பால் போனார்கள். அடர்ந்த காட்டுக்கு மத்தியில் சிறிது இடைவெளி இருந்த இடத்தில் நின்றார்கள். ஒருவன் உட்கார்ந்து கொண்டான். கையில் சுளுந்து வைத்திருந்தவன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். யாருடைய வரவையோ அவன் எதிர்பார்த்தான் என்பதில் சந்தேகமில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். அவர்கள் நல்ல தைரியசாலிகளாயிருக்க வேண்டும். இதற்குமுன் இந்த இடத்

அடுத்த இதழ்:

திருவரங்கச் சிறப்பிதழ்



* சுஜாதாவின் இளமைக் கால நினைவுகள்.
* ஆனந்தியின் பக்தி மணம் கமழும் கட்டுரை.
* சைலஜாவின் உணர்ச்சிமயமான சிறுகதை
* ராஜகோபுரம் வளர்ந்த கதை — சிறப்புக் கட்டுரை
* பள்ளி கொண்ட பெருமான் — மணியம் செல்வனின் கண்ணைக் கவரும் வண்ணப்படம்.

துக்கு வந்தவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த இருளில், அடர்ந்த காட்டில், வழி கண்டுபிடித்துக் கொண்டு வர முடியுமா?

முதலில் வந்தவர்களும் பின்னால் வந்தவர்களும் ஏதோ பேசிக் கொண்டார்கள். ஆனால் ஆழ்வார்க்கடியான் காதில் அது ஒன்றும் விழவில்லை. அடடா! இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தும் பிரயோஜனம் ஒன்றும் இராது போலிருக்கிறதே! ஆட்களின் அடையாளம் கூடத் தெரிந்து கொள்ள முடியவில்லையே?

பிறகு இன்னும் இரண்டு பேர் வந்தார்கள். முன்னால் வந்தவர்களும் கடைசியில் வந்தவர்களும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். கடைசியாக வந்தவர்களில் ஒருவன் கையில் ஒரு பை கொண்டு வந்திருந்தான். அதை அவன் அவிழ்த்து அதனுள் இருந்தவற்றைக் கொட்டினான். சுளுந்து வெளிச்சத்தில் தங்க நாணயங்கள் பளபளவென்று ஒளிர்ந்தன.

கொட்டிய மனிதன் பைத்தியம் பிடித்தவனைப் போல் சிரித்து, "நண்பர்களே! சோழநாட்டுப் பொக்கிஷத்தைக் கொண்டே சோழ ராஜ்யத்துக்கு உலை வைக்கப் போகிறோம்! இது பெரிய வேடிக்கை அல்லவா?" என்று சொல்லிவிட்டு மறுபடியும் கலகலவென்று சிரித்தான்.

"ரவிதாஸரே! இரைச்சல் போட வேண்டாம். கொஞ்சம் மெதுவாகப் பேசலாம்!" என்றான் ஒருவன்.

"ஆகா! இங்கு எப்படிப் பேசினால் என்ன? கேட்டால், நரிகளும் மரநாய்களும், கூகைகளும், கோட்டான்களுந்தான் நம் பேச்சைக் கேட்கும்! நல்ல வேளையாக அவை யாரிடமும் போய்ச் சொல்லாது!" என்றான் ரவிதாஸன் என்று அழைக்கப்பட்டவன்.

"இருந்தாலும் கொஞ்சம் மெதுவாகப் பேசுவதே நல்லது அல்லவா?"

பிறகு அவர்கள் மெள்ளப் பேசத் தொடங்கினார்கள். ஆழ்வார்க்கடியானுக்கு அவர்களுடைய பேச்சைக் கேட்டறியாமல் மண்டபத்தின் பேரில் உட்கார்ந்திருப்பது வீண் என்று தோன்றியது. மண்டபத்திலிருந்து இறங்கிக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு அருகில் நின்று ஒட்டுக்கேட்டே தீரவேண்டும். அதனால் விளையும் அபாயத்தையும் சமாளித்துக்கொள்ள வேண்டும்.— இவ்விதம் எண்ணி ஆழ்வார்க்கடியான் மண்டபத்திலிருந்து இறங்க முயன்றபோது, மரக்கிளைகளில் அவன் உடம்பு உராய்ந்ததால் சலசலப்புச் சத்தம் உண்டாயிற்று.

பேசிக் கொண்டிருந்த மனிதர்களில் இருவர் சட்டென்று குதித்து எழுந்து, "யார் அங்கே?" என்று கர்ஜித்தார்கள்.

ஆழ்வார்க்கடியானுடைய இதயத் துடிப்பு சிறிது நேரம் நின்று போயிற்று. அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஓடினாலும் காட்டில் சலசலப்புச் சத்தம் கேட்கத்தானே செய்யும்! அவர்கள் வந்து தன்னைப் பிடித்து விடுவார்கள் அல்லவா?

அச்சமயத்தில், கோட்டான் ஒன்று சப்பட்டையை விரித்து உயர்த்தி அடித்துக் கொண்டதுடன் "ஊம் ஊம்" என்று உறுமியது.

(தொடரும்)



காதல் கடிதம்

கார்ப்பரேஷன் டெண்டர்கள் ஏகமாய்க் குவிந்து கொண்டிருந்த சமயம் அது. பத்மஜா மிகவும் பிஸியாக இருந்தாள். கடைசி நபராக நிரஞ்சன் அவளெதிரே வந்து நின்றான். வந்திருந்த டெண்டர் விண்ணப்பதாரர்களிலேயே இவன்தான் இளையவனாக இருக்கக் கூடும் என்று நினைத்துக் கொண்டவள் அவன் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டாள்.

''தேங்க்ஸ் மேடம்'' என்றான் அவன் புன்முறுவலுடன். ''நீங்க கொஞ்சம் தயவு பண்ணணும். எல்லாம் உங்ககிட்டேதான் இருக்கு. நீங்க மனசு வைச்சா நடக்கும்.''

அவனுக்குப் பதிலேதும் சொல்லாமல் வெறுமனே அவனை ஓர் அலுவலகப் பார்வை பார்த்துவிட்டு வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள்.

ஒவ்வொரு உறையாய்ப் பிரித்துக் கடிதங்களை ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டிருந்தாள். கடைசிக் கடிதத்தைப் பிரித்தபோது வியப்பு கலந்த அதிர்ச்சி நெஞ்சைத் தாக்கியது. அது டெண்டருக்கு வந்த கடிதமில்லை. அவளையே வாங்குவதற்கான கடிதம். கவிதை பாணியில் இருந்தது:

பத்மஜா!
எனக்கு நீங்கள்
வேண்டும்.
மனமிருந்தால்
சொல்லுங்கள்
மணமுடிப்போம்.

— நிரஞ்சன், எம்.ஏ., 4, அய்யப்பன் தெரு, சென்னை—600 010.

கடிதத்தைக் கொடுத்தது யார் என்று அவளுக்கு அப்போதே நன்றாகப் புரிந்துவிட்டது. மனசு படபடத்தது.

சதாசிவராவுக்கு ஆஜானுபாகுவான தோற்றம். ராணுவ வீரன் போன்ற அடர்த்தியான மீசை. பெரிய கண்கள். கணீரென்ற தொண்டை. ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த மகள் சொன்னதை அட்சர சுத்தமாய்க் காதில் வாங்கிக் கொண்டார். அடர்ந்த மீசையை முறுக்கினார். பிறகு சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தார். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு விருட்டென நடந்தார்.

அப்போது நிரஞ்சன் வீட்டில் இருந்தான். காலிங் பெல் ஓசைக்கு வந்து கதவைத் திறந்தவன், வாசலில் நின்றிருந்த சதாசிவராவைக் கண்டதும் சற்றே திகைத்துவிட்டான். அவரை வரவேற்றான்.

''வாங்க. யாரு அப்பாவா...?'' என்று பாதிக் குரலில் சமையலறையில் வேலையாய் இருந்த அம்மாவும், படுத்துக் கொண்டிருந்த தங்கையும் யாரோ வந்திருக்கும் சத்தம் கேட்டுக் கூடத்திற்கு வந்து நின்று கொண்டார்கள். பாத்ரூமிலிருந்து அப்பாவும் வந்துவிட்டார். பத்மஜாவின் அப்பாவுக்கு ஒரு வணக்கம் சொல்லிவிட்டு அவரெதிரே உட்கார்ந்தார். அவர் கேட்ட முதல் கேள்வி:

''நீங்கதான் நிரஞ்சனா?''





வீரன் 1: "ஆச்சரியமாயிருக்கே! உங்க நாட்டு மன்னர் முடிசூடா மன்னராகத் திகழ்கின்றாரா? அது எப்படி?"
வீரன் 2: "அவர்தான் மணிமுடியை அடகு வைத்துவிட்டாரே!"

— ஓ.மே. அ. கதிர்வேல்.

"ஆமாம்" என்றான். "என்ன விஷயம்?"

"நீ என் பொண்ணுக்கு லவ் லெட்டர் எழுதினியா?" கப்பென்று அவனுக்கு ஒரு கணம் மூச்சு முட்டியது. முகம் வெளிறிப் போயிற்று. ஆனாலும் ஒன்றும் தெரியாதவன் போல் பாவலா செய்தான்.

"உங்க பொண்ணு யாரு?"

"தெரியாத மாதிரி கேட்காதப்பா? என் பொண்ணு பத்மஜாவை உனக்குத் தெரியாதா?"

"யார் சார் அது பத்மஜா? நான் கேள்விப் பட்டதேயில்லையே?"

ஆனால் அவர் போதிய அத்தாட்சியுடன் தான் வந்திருந்தார். பாக்கெட்டிலிருந்து அவன் எழுதிய கடிதத்தை எடுத்தார்.

"அப்ப இந்த லெட்டரை நீ எழுதலையா?"

அவனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

அப்பா வாங்கி அதை உன்னிப்பாய்ப் பார்த்தார்.

"ஆமாம்! இவன் எழுதின மாதிரிதான் தெரியுது" என்றவர் நிரஞ்சனைப் பார்த்தார். "ஏண்டா இது உன் கையெழுத்து மாதிரி தான் இருக்கு!"

அவன் அதை வாங்கிப் பார்த்தான்.

"இது என் கையெழுத்து மாதிரிதான் இருக்கே தவிர, இது நான் எழுதினதில்லே. எங்க ஆபீஸ் யூனியன்ல யாரோ எனக்கு வேண்டாதவங்க இப்படியொரு சதி பண்ணி என்னைப் பழிவாங்க முயற்சி பண்ணியிருக்காங்க."

சதாசிவராவின் முகம் இறுகியது. சரீரம் பதறியது. குரலில் தம் சுபாவத்தைக் காட்டினார்.

"அப்ப இது உங்க பையன் எழுதலையா?"

அந்தக் குரூர கர்ஜனையில் நிரஞ்சனுக்கு நடுக்கம் எடுத்தது. அவனது சார்பில் அப்பாவே பதிலளித்தார்.

"அதான் அவன் சொல்லிட்டானே... யாரோ யூனியன்ல செய்த சதின்னு..."

அவர் விருட்டென எழுந்தார். நிரஞ்சனை அக்னிப் பார்வை பார்த்தார். வேகமாய் வெளியேறினார்

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு மாலை நேரத்தில் நிரஞ்சன் அவளது அலுவலகத்திற்குச் சென்றான். அப்போது அவள் ஏதோ வேலையாய் இருந்தாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ" என்று ஒரு குரல் கேட்டதும் நிமிர்ந்தாள். எதிரே நின்றிருந்த நிரஞ்சனைக் கண்டதும் முகத்தில் கோபம் படர்ந்தது.

"மேடம், நீங்க என் மேல் கோபமா இருக்கீங்கன்னு புரியுது. ஆனால் என்ன இருந்தாலும் நீங்க இப்படி பண்ணியிருக்கக் கூடாது. ப்ளீஸ் எனக்காக அஞ்சு நிமிஷம் ஒதுக்குங்க." அவன் ஏறக்குறைய கெஞ்சும் தோரணையில் சொன்னான்.

அவனிடம் சீக்கிரம் பேசி அனுப்பிவிடும் எண்ணத்துடன், அவனை வரவேற்பறைக்குப் பின்னால் இருந்த ஓர் ஒதுக்குப்புறத்திற்கு அழைத்துச் சென்றாள்.

"நீங்க நாகரிகமானவங்கங்கிற நம்பிக்கையில்தான் உங்களுக்குக் கடிதம் கொடுத்தேன். உங்களுக்கு என்னைப் பிடிக்கலேன்னு, பிடிக்கலேன்னு பதில் கடிதம் போட்டிருக்கலாம். அதை விட்டுட்டு இப்படியொரு காரியத்தை நீங்க செய்வீங்கன்னு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கலே" என்றான்.

"அப்படி நான் என்ன காரியம் பண்ணிட்டேன்?"

"நீங்க உங்க அப்பாவை அனுப்பிச்சு என்னை மிரட்டியிருக்க வேண்டாம்."

"யார் உங்களை மிரட்டினது? எங்கப்பா ஒண்ணும் உங்களை மிரட்ட வரலே. நீங்க அந்த அளவுக்குப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்க. நீங்க செய்தது தப்பான காரியமா இருந்தாலும்கூட எங்கப்பா மனசைச் சமாதானப் படுத்திக்கிட்டு உங்கப்பா அம்மாவோட சம்மதத்தைக் கேட்டுத் தெரிஞ்சுக்கத்தான் உங்க வீட்டுக்கு வந்தாங்க. ஆனா நீங்க...."

அவன் ஸ்தம்பித்துப் போனான். வருத்தம் கலந்த வியப்பை வெளிப்படுத்தினான்.

"மேடம், உண்மையிலே நான் என்னமோ ஏதோன்னு நினைச்சு பயந்து போயிட்டேன். அந்த அளவுக்கு உங்க அப்பாவின் சுபாவம் அப்படி இருந்துச்சு. எனக்கு ஒரு தங்கையிருக்கா. அவளுக்கு முதல்ல கல்யாணம் ஆகணும். மேலும் எங்கப்பா அம்மாவுக்கும் இதுவரைக்கும் நான் உங்களை விரும்பற விஷயம் தெரியாது. உங்க சம்மதத்துக்குப் பிறகுதான் சொல்லணும்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்பவும் உங்களை மனசார நேசிக்கிறேன்..."

"வெரி வெட் மிஸ்டர் நிரஞ்சன். நீங்க என்னை மனப்பூர்வமா விரும்புற ஆளாயிருந்தா, ஆயிரம் பேருக்கு முன்னாலேயும் என்னைத்தான் மணப்பேன்னு சொல்ற அளவுக்கு உங்களுக்கு மனத் திடமும் தைரியமும் இருக்கணும். உங்க தங்கச்சிக்குக் கல்யாணம் நடக்கட்டும். நான் வேண்டாங்கலே. உங்களுக்காகப் பத்து வருஷம்கூட நான் காத்திருக்கத் தயார். ஆனால் நீங்க உங்க அப்பா அம்மாவுக்கும் வெளியுலகத்துக்கும் பயந்துக்கிட்டு உங்க உள்ளத்துல இருக்கிற காதலைக் குழிதோண்டிப் புதைச்சுட்டது கொஞ்சமும் நியாயம் இல்லே. இது சுத்த கோழைத்தனம். இப்படியொருத்தரை ஒரு பெண் கணவனாக அடையறதைவிட வாழ்நாள் முழுவதும் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்திடலாம்"

கண்ணில் படர்ந்த நீர்த் திரையைத் துடைத்துக் கொண்டு அவள் தன் இருப்பிடத்தை நோக்கி நடந்தாள்.

— மதுமதி

** ஜடப் பொருள்களின் உள்ளே இருக்கிற உயிரையும் உயிருள்ள பொருள்களின் உள்ளே இருக்கிற ஆன்மாவையும் புலப்படுத்துவதே கவிஞனின் லட்சியம்.


கோத்ரெஜ்
புதிய
மேகா
ஏ ஓ எஸ்* கொண்ட
நீல டிடர்ஜென்ட் கட்டி
என்ன அருமையான சலவை!
MEGA
Mudra: B:GS 4223 TAM
*ஏஓஎஸ், அதிக நுரையையும் அதிக சலவைத்
திறனையும் தரும் அற்புதமான மூலப்பொருள்.

வேறென்ன இருக்கு?

தெருக்கோடியில் புள்ளியாய்ச் சென்று மறையும் சைக்கிள் ரிக்ஷாவைப் பார்த்தபடியே நின்றார் சுந்தரம். அழகான ரிக்ஷா. அலங்கரிக்கப்பட்ட ரிக்ஷா. பின்புறம் ஆளுங் கட்சிக் கொடி வண்ணத்தில் வரையப்பட்டிருந்தது. கொடியின் நடுவில் முதலமைச்சர் கவர்ச்சியாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார். வெயிலில் சக்கரத்துக்கு மேல் புறத்து குரோமியம் பளபளத்தது. சூரியனை எதிர் வீச்சியது.

சுந்தரத்துக்குத் தலை சுற்றியது. கால்கள் உணர்வற்று நழுவுவதுபோல் தோன்றியது. நெஞ்சை அடைத்தது. நிலைப் படியைப் பிடித்துக்கொண்டார்.

நேற்று குடும்பத்தினர் புவனாவை வாழ்த்தி வழியனுப்ப வந்தபோது ஞானம்தான் எவ்வளவு சாதுரியமாகப் பேசிச் சமாளித்தாள்? "நம்ம குடும்பத்திலே மொத முறையா புவனேஸ்வரிக்கு அதிர்ஷ்டம் அடிச்சு, பாட்டுப் படிக்க வாய்ப்புக் கெடச்சிருக்குது. அவங்க அப்பாவுக்கு தானே அவளைப் பட்டணத்திற்குக் கூட்டிட்டுப் போவணும்னு தான் ஆசை. ஆனாப் பள்ளிக்கூடத்தில் பரீட்சை, பேப்பர் திருத்தம்னு ஒரே வேலைங்க. புவனா எப்பவும் அவங்க அப்பா பொண்ணு. அவர்தானே அவளுக்குக் குரு. அவர் கூடப் போனாத்தான் அவளுக்குச் சந்தோஷமாக இருக்கும். ஆனாலும் பாருங்க, புவனா இன்னும் பச்சை புள்ளையா இருக்குது — கூடப் பொம்பளை யாராவது போனாத்தானே, அங்கே ஹாஸ்டல், மத்த வசதி எல்லாம் எப்படியிருக்குன்னு பார்த்து ஏற்பாடு செய்ய முடியும். லோகு அவங்கப்பாவைக் கவனிச்சுப்பா. பத்து நாளோ, ஒரு மாசமோ, இந்தப் பொண்ணை ஹாஸ்டல்லே சேர்த்துட்டு நான் ஓடி வந்துடுவேன். என்னதான் லோகு நல்லாவே கவனிச்சுப்பான்னாலும், எனக்கு வீட்டை விட்டு இருக்க மனசு கேக்குமா?" என்று நீட்டி முழக்கிப் பேசினாள்.

சிவகாமிகூட, "நீயும் ஒரு நடை கூடப் போய் வந்தால் அவங்களுக்குச் சவுகரியமா இருக்கும். ஞானசுந்தரி பாவம். பட்டணத்துலே தனியா ஆண் பிள்ளைத் துணையில்லாமல் சமாளிக்கணும். லோகு பத்து நாட்கள் எங்ககூட இருக்கமாட்டாளா.... நீயும் போய் வாயேன்" என்றாள்.

சுந்தரம் மட்டும் பதிலே பேசவில்லை. புவனா அரசியல் கூட்டங்களில் பாடச் சென்றபோது, "இது என்ன சுந்தரம், நம்ம குடும்பங்களிலேயே இல்லாத வழக்கமா வயசுக்கு வந்த பெண்ணை மேடையேறிப் பாடச் சொல்றது. நாளைக்குக் கல்யாணமாக வேண்டாமா என்று முகம் சுளித்த அதே உறவினர்கள் இன்று: "நம்ம சுந்தரத்தின் மகள் புவனேஸ்வரிக்கு சரஸ்வதி கடாட்சம் அருமையா வாய்ச்சிருக்கு. அரசாங்கத்திலே அவங்களா அழைச்சு ஸ்காலர்ஷிப் பணம் தந்து சங்கீதம் கத்துத் தாங்களாம்" என்று வியந்தனர். தங்கள் குடும்பத்திலிருந்து முதல் முதலாக ஒரு பெண் சங்கீத மேல் படிப்புப் படிக்கச் செல்வது சுந்தரத்தின் குடும்ப அந்தஸ்தையே உயர்த்திவிட்டதாக எண்ணினார்கள்.

மற்றவர்கள் பார்வை எப்படியிருந்தாலும்....

சுந்தரம் மட்டும் ஏன் பாதிக்கப்படவில்லை! அவர் செல்ல மகள்... அவர் பாலும், சோறும் மட்டுமின்றி, சங்கீதமும் ஊட்டி வளர்த்த அவர் மகளின் வளர்ச்சி அவருக்கல்லவோ பெருமை அளித்திருக்க வேண்டும். அளிக்கவில்லையே, ஏன்? புவனா ஓராண்டுப் படிப்பை இழந்தாலும், நல்ல வேளை பத்தாவது பரீட்சையாவது எழுதிவிட்டாள். படிப்பு பாதியில் நிற்கிறது என்கிற குறை கூட அவருக்கு இருக்கக் கூடாதே! அரசியல் மேடையேறிப் பாடுவது அவருக்கு முறைகேடான செயலாகத் தோன்றலாம். ஆனால், அழகாக, முறையாகக் கர்நாடக சங்கீதம் கற்கச் செல்வதை அவர் ஏன் வெறுக்க வேண்டும்! எதிர்காலத்தில் மகள் ஒரு எம்.எஸ். சுப்புலக்ஷ்மியாகவோ, எம்.எல். வசந்தகுமாரியாகவோ உருவாகலாம். சங்கீதமே அவளுக்கு நல்ல கணவனையும், குடும்ப வாழ்வையும் கூட அளிக்கக் கூடும். பெற்றவருக்கு மகிழ்ச்சியையும், நிறைவையும் தரக் கூடிய விஷயங்கள் ஏன் அவர் மனத்தை அலைபாயச் செய்கின்றன?

இந்தக் கேள்விகளைச் சுந்தரம் தனக்குத் தானே கேட்டுக் கொண்டார். புவனா முறையாக அப்ளிகேஷன் எழுதி நேர்முகத் தேர்வில் நாலு ஸ்வரம் பாடி, ராகங்களை அடையாளம் சொல்லித் தேர்வாகுமா, ஆகாதா என்று சதா கவலைப்பட்டு, பழுப்புக் காகிதத்தில் வரும் 'செலக்டட்' என்ற வாசகத்தைப் படித்து மகிழ்ந்து போகாமல், முகமறியாத யாரோ ஒருவர் சிபாரிசால், எந்த முயற்சியுமின்றி உபகாரச் சம்பளம், நுழைவு இரண்டையும் பெற்றுவிட்டதை அவர் மனம் ஏற்க மறுக்கின்றதா? ஆனால் புவனா இந்த உபகாரச் சம்பளத்திற்குத் தகுதி பெற்றவள் தானே... சிபாரிசு அவள் குரலுக்கும், இசை ஞானத்திற்கும் கிடைத்ததுதானே, இதிலென்ன தவறு?


உஷா சுப்பிரமணியன்

சுந்தரத்திற்குக் குழப்பமாக இருந்தது. அவரை அறியாமலே அவர் ஒரு பழைமைவாதியாக இருக்கிறாரா... அல்லது பிறந்து வளர்ந்த இந்த ஊரையும், சூழலையும் விட்டுப் புதிய வாழ்வை அமைத்துக் கொள்ளப் பயப்படுகிறாரா?

"அப்பா நீங்களும் எங்க கூடப் பட்டணத்துக்கு வந்தா எங்களுக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்னு தெரிஞ்சிட்டும் நீங்க ஏம்பா இவ்வளவு பிடிவாதமா இருக்கீங்க. பொண்ணுன்னா அவள் வாழ்க்கை பள்ளிப் படிப்போடும், முறை மாப்பிள்ளையோடும் உள்ளூர் வாழ்க்கையோடும் முடிஞ்சு போயிடணும்னு நினைக்கறீங்களா.... புவனா, நீ எனக்கு மகள் மட்டுமில்லே, பிள்ளையும் நீதான்னு சொல்லுவீங்களே, என்னைப் பிள்ளையாகவாவது பாருங்களேன்பா. என்னையும் அம்மாவையும் குத்தம் செய்யறவங்க மாதிரி ஏம்பா ஒதுக்கறீங்க?"

இரண்டாண்டுகளுக்கு முன்வரை குழந்தையாக இருந்த புவனாவா இப்படிப் பேசுகிறாள் என்னு மனவுக்குப் புவனா பொங்கிப் பொங்கி அவரை நேர்முகமாகவே கேட்டபோது அவர் திகைக்கத் தான் செய்தார். மகளை மென்மையாகத் தோளில் தட்டினார். அவள் தலையைக் கோதிவிட்டார். "இல்லே புவனா.... நீங்க எந்தக் குத்தமும் செய்யவில்லே. ஆனால் எனக்குத்தான் எதுவும் புரியவில்லே."





அருள்வாக்கு



அன்பு என்றால் என்ன? நம் மனஸ் இன்னொரு மனஸில் அப்படியே கலந்து விடுவது.

கரைவதற்கு முந்திய ஸ்டேஜ் கலப்பது. சர்க்கரையை முதலில் பாலில் போட்டுக் கலக்க வேண்டும். அப்புறம்தான் கரையும். இரண்டு வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று அந்யமாக இருக்கும்போது இரண்டும் ஒன்றோடொன்று கலக்கின்றன. அப்புறம் ஒன்றிலே மற்றது கரைய ஆரம்பித்து முடிவாகக் கரைந்து முடிந்தபின், இரண்டு இல்லை; ஒன்றுதான் இருக்கிறது. இதை 'ஐக்யம்' ஆகி விடுவது என்பார்கள். 'ஏகம்' என்ற ஒன்றின் தன்மையை அடைவது 'ஐக்யம்'. பாலில் சர்க்கரையைக் கலக்கும்போது பாலும் சர்க்கரையும் வேறேயாகத்தான் . இருக்கும். 'கலப்பு' என்பது இரு வேறு வஸ்துக்கள் உள்ளபோதுதான் ஏற்பட முடியும். அது ஏகமான அத்வைதமான கரைப்பில்தான் முடிந்தாக வேண்டும் என்றில்லை. த்வைதக் கலப்பு அப்படியே நின்றுவிடலாம். அக்ஷதையையும் எள்ளையும் வாத்யார் கலந்து வைக்கிறார். அவை ஒன்றில் இன்னொன்று கரைந்து ஐக்யமாகி விடுவதில்லை.

ஆத்மா வேறு ஒன்றின் கலப்பே இல்லாமல் ஸ்வச்சமான ஏகமாக, தன்னில் தானாக, தனியாக இருப்பது. அதனால் அதிலே கொண்டு போய் மனஸைக் கலப்பது என்றால் முடியாத கார்யம். மனஸ்தான் ஆத்மாவின் கிட்டேயே போக முடியாதே! இதை எப்படி அதில் போய்க் கலக்கும்படி செய்வது! இந்த இடத்தில்தான் இரண்டாக இருந்து கலக்கக் கூடியதாக அந்த ஆத்மாவையே ஈச்வரன் என்று வைத்து பக்தி பண்ண வேண்டியிருப்பது. பரமாத்மா, ஜீவாத்மா என்று த்வைதமாகப் பிரித்துச் சொல்வது இங்கேதான். ஜீவாத்மா சின்ன மனஸ்; பரமாத்மா மஹா மனஸ். சின்ன மனஸ் எந்தத் தொடர்புமில்லாத ஆத்மாவோடு கலக்க முடியாது. ஆனால் அதைப் படைத்த மஹா மனஸோடு கலக்க முடியும். இதை அதுதான் படைத்தது என்பதாலேயே, தாயாரிடம் குழந்தை அன்போடு கலக்கிற மாதிரி கலக்க முடியும். அந்தப் பரமாத்மாவும் தாயார் மாதிரி அன்போடு ஜீவாத்மாவுடன் கலந்து அநுக்கிரஹம் செய்வார், அல்லது செய்யும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

புவனாவுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, பட்டணம் சென்று குடித்தனமமைத்து, நித்யா அத்தானைப் பற்றிய விவரம் தேடியறிந்து, லோகுவுக்காவது வாழ்வமைக்கலாம். அப்பாவைப் போன்ற அனுபவமிக்க ஓர் ஆசிரியருக்கு இவ்வளவு பெரிய பட்டணத்தில் வேலையா கிடைக்காது. கிராமத்திலிருக்கும் ஒரு துண்டு நிலம் கூட அப்பாவின் நேரடிக் கண்காணிப்பில் இல்லையே.

'அப்பா இவ்வளவு பெரிய சுயநலமியா... தம் சொந்தக் குழந்தைகளின் எதிர்காலம், குடும்ப நன்மை இவற்றைவிடத் தம் பிடிவாதம்தானே அவருக்குப் பெரிசாப் போச்சு. உண்மையில் இரக்கப்பட வேண்டியது அம்மாவைப் பார்த்துத்தான். அம்மாவின் எத்தனை ஆசைகளை அப்பா தம் பிடிவாதத்தால் நசுக்கியிருப்பார். பாவம் அம்மா, அவள் ஆவலுடன் புவனாவின் எதிர்காலத்தைப் பற்றிப் பேசும்போதும் சரி, பயண ஏற்பாடுகளைச் செய்யும் போதும் சரி, ஏதோ இதில் தமக்குச் சம்பந்தமே இல்லாததுபோல் மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டு, 'உம்; சரி' என்பதுபோல் ஒற்றை வார்த்தை பேசும் அப்பா புவனாவுக்கு மிகவும் அன்னியமாகத்தான் தெரிந்தார்.

"ஏங்க, நான் ஒருத்தி கழுதையாட்டம் கத்தறேன், வாயைத் திறந்து பதில்தான் சொல்லுங்களேன்" என்று ஞானமும் குரலை உயர்த்திப் பார்த்தாள். பயனில்லை.

"ஏங்க, பயணத்திற்குப் பணம் வேணுமா, புவனா, தங்கிப் படிக்க வசதி செய்ய, ஸ்காலர்ஷிப் பணம் வர்றவரை கைச்செலவுக்குப் பணம் வேணுமா... ஓர் ஆயிரம் ரூபாய்க்கு வழி பண்ணுங்க" என்றபோது முதலில், "என்னிடம் அவ்வளவு பணமில்லை" என்றார் சுந்தரம் நிதானமாக. ஞானம் சிறிது நேரம் செயலற்று நின்றுவிட்டு, தமிழ்ச் செல்வனிடம் கடன் சொல்லிப் பெறலாமா, நகைகளை அடகு வைக்கலாமா, என்று குழம்பிய போது, சுந்தரம் நிதானமாகப் பெட்டியைத் திறந்தார்.

"இந்தா" என்று அந்தத் தங்க நகையை நீட்டினார். லோகு முதல் குழந்தையாகப் பிறந்தபோது அவரே மிக ஆசையாக இரண்டு பவுனில் செய்த அரைஞாண். அதை வாங்க மனமின்றி ஞானம் தயங்கினாள். ஆனால், உணர்ச்சிகளுக்கு இதுவா சமயம். இப்போது முதல் தேவை பணம். "இதை நான் விக்கலீங்க, அடகுக் கடையிலே வெச்சுடறேன். அப்புறம் மீட்டுவிடலாம்" என்றாள் ஞானம். கணவன் கடன் வாங்க விடமாட்டார் என்பது அவளுக்குத் தெரியும்.

"இல்லை வித்துடு..." ஒரே வார்த்தையில் முடித்துவிட்டார் சுந்தரம்.

சுந்தரம் மெல்லத் தலைகுனிந்து உள்ளே வந்து வாயிற் கதவைத் தாழிட்டார். கூடம் வெறிச்சோடிக் கிடந்தது. காமிரா அறையில் இருட்டு படிந்திருந்தது. சமைய

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I 1. ஸாமவேத அஷ்ட ப்ராம்மணம்—நாகராக்ஷரம்—3 பாகங்கள், விலை ரூ 210/—
2. ஸாமவேத ஸம்ஹிதா—நாகராக்ஷரம்—2 பாகங்கள் (ஸ்வரத்துடன்) விலை ரூ 110/—
3. ஸாமவேத ஸம்ஹிதா (ஸ்வரத்துடன்) கிரந்தாக்ஷரம்—2 பாகங்கள் விலை ரூ 235/—
4. சாந்தி குஸுமாகரம் (கிரந்தாக்ஷரம்)—2 பாகங்கள் விலை ரூ 75/—

II க்ரந்தாக்ஷரத்தில் ஸ்வரத்துடன் மணக்கால் பிரம்மஸ்ரீ முத்து ச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புக்கள்

1. போதாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 70/—; 2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 65/—; 3. ஆபஸ்தம்ப ச்ரார்த்த ப்ரயோகம், விலை ரூ 30/—; 4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம், விலை ரூ 60/—; 5. ஆச்வலாயன ச்ரார்த்த ப்ரயோகம், விலை ரூ 25/—; 6. கல்ப சிந்தாமணி விலை ரூ 35/—


III நாகர அக்ஷரம் — நாகர பதத்திற்கு தமிழ் அர்த்தத்தோடு


1. ஸ்ரீமத் பாகவதம்—5 Volumes—12 ஸ்கந்தங்கள், விலை ரூ 415/—; 2. ஸுந்தர காண்டம், விலை ரூ 80/—; 3. ஸ்ரீ நாராயணீயம், விலை ரூ 55/—.

IV 1. மனுசேச்லோக & ராமமந்த்ராசேச்லோக, விலை ரூ 9/—; 2. ஸ்ரீ ராதா க்ருஷ்ண பூஜாவிதானம், விலை ரூ 10/—; 3. நளோதந்தம் (நைஷத காவ்யத்தின் சுருக்கம்), விலை ரூ 9/—; 4. வேதபாட வழிமுறை (Syllabus) (ரிக், யஜுர், ஸாம), விலை ரூ 8/—.

V.P.P.யில் அனுப்புவதில்லை. பூராத் தொகையையும் M.O. (or) Draft மூலம் அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்
புண்ய ஸ்மரண ஸமிதி
D-76, மூன்றுவது கிராஸ், ஸ்ரீநகர்காலனி, கும்பகோணம்—612 001





Everest 86 BCL 31-tm

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்: சாந்தி லால் பிரதர்ஸ், 7, காசி செட்டி சந்து, இரண்டாவது மாடி, சென்னை—600 079. போன்: 32856/31826.

லறையில் ஏதோ ஒரு மூலையில் லோகு கவிழ்ந்து படுத்திருக்கக் கூடும். இப்போதெல்லாம் பெரும்பான்மையான நேரங்களில் அவள் அப்படித்தானே கிடக்கிறாள்.

தனிமை...பயங்கரமான தனிமைஉணர்வு. இனம் புரியாத ஏமாற்றம், காரணம் புரியாத மனப் பளு அனைத்தும் சேர்ந்து தாக்க, சுந்தரத்தின் நெஞ்சே உடைந்து பெருகுவது போல், அழுகை பீரிட்டு எழுந்தது. பல நாட்களாகக்கல்லாகிக்கிடந்தநெஞ்சம்,பாகாய்க் கரைய, ஆண் மகன் அழக்கூடாது என்கிற கோட்பாடுகளை மீறிச் சுந்தரம் வெடித்து அழுதார். நெஞ்சு ஓயும் மட்டும் அழுதார்.

"அப்பா....!"

திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்தபோது லோகு எதிரே நின்றிருந்தாள்.

"ஏம்பா, நீங்க ஏன் அழறீங்க... உங்க மகள் பெரிய பாடகியா வரப் போறான்னு சிரிக்க வேண்டியவங்க, ஏன் அழறீங்க. அழணும்னு நான் அழணும். மேல படிக்கவும் படிக்காம, பாட்டும் சொல்லித் தராமல், பரிசம் போட்ட புருசனைக் கட்டிக்கவும் வழியில்லாமல், இந்தக் குடும்பத்துச் சந்தோஷத்தைக் கெடுக்கறதுக்குன்னு நான் பொறந்திருக்கேனேன்னு நான் இல்லே அழணும்!"

"லோகு,அப்படியெல்லாம்பேசாதேம்மா. இது போறாத காலம். உனக்கு எல்லாமே நல்லா நடக்கும். கலியாணமாகி சந்தோஷமா இருப்பேம்மா. நீ குடும்பத்திலே விளக்கேத்தப் போற லட்சுமி... மனசு வருத்தப்பட்டுப் பேசக் கூடாது."

லோகு மெல்லச் சூள் கொட்டினாள். "யாரைப்பா ஏமாத்தறீங்க? உங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் இருந்திருந்தா, நீங்க புவனாவைக் கூட்டிக்கிட்டுப் பட்டணம் போயி அத்தானைப் பற்றி விசாரிக்காமல் இருப்பீங்களா?"

சுந்தரம் 'சுரீர்' எனத் தாக்கப்பட்டார். அவர் ஏன் நித்தியாவைத் தேடவில்லை என்று சொன்னால் இவளுக்குப் புரியுமா? தானாகக் கனியாத பழத்தைத் தடியால் அடித்துப் பழுக்க வைக்க முடியுமா? இவள் கழுத்தில் தாலி கட்டிய பிறகு மறுபடியும் நித்தியா ஓடி மறைந்தால், அது கழுத்தை நீட்டியவளுக்குத்தானே அவமானம்! நித்தியா கட்டாயம் திருந்தி விடுவான் என்று அவர் காத்திருப்பதை லோகு கூடவா அலட்சியம் என்று எண்ணுகிறாள்?

புவனாவுடன் அவர் சென்னைக்குப் போவது பற்றிப் பேச்சு எங்கே வந்தது. அவரில்லாத நேரத்தில் யார் யாரோ வந்து பேசி, ஞானம் தானே ஏற்பாடு செய்து கொள்ளும்போது, அவர் அதில் என்ன பங்கு வகிக்க முடியும்? அவரால் நேர்வழியில்தான் செல்ல முடியும். தமிழ்ச் செல்வனையோ, வேறு ஒருவனரயோ தேடிப் போய்க் குழைந்து பேசிக் காரியம் சாதித்துக் கொள்ள அவரால் முடியுமா? இது சுயநலம் என்றால் அவர் சுயநலமிதான். ஆனால் அவர் கட்டாயம் அவர் குழந்தைகளை மனமார நேசிக்கிறார். அவர்கள் வாழ்க்கைச் செம்மையாக அமைய வேண்டும் என்று தினம் தினம் கடவுளை வேண்டுகிறார். இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் ஞானமும், லோகுவும், புவனாவும் இதை உணர மாட்டார்களா?

சுந்தரம் வலியுடன் லோகுவைப் பார்த்தார். அவள் முகத்தை வெடுக்கெனத் திருப்பிக் கொண்டு உள்ளே நடந்தாள்.

வலி.... இது மனவலி மட்டுமா? கடந்த சில மாதங்களாக நெஞ்சில் 'சுரீர்' என அடிக்கடி குத்தும் வலியையும், சேர்த்துப் பொறுத்துக் கொள்ள அவர் பழகிவிட்டார்.

(தொடரும்)

உங்களுக்கு 'ஊளைச் சதை' அதிகமோ, 'ஹார்ட் அட்டாக்' வருமோ என்று சந்தேகப்படுகிறீர்களோ? இதோ ஒரு 'செக்'—அப்.'

1. உங்கள் இடுப்பின் சுற்றளவையும் (வயிறைச் சேர்த்து) இடுப்புக்கு மேல் விலாவுக்கு கீழ் உள்ள பகுதியின் சுற்றளவையும் அளந்து கொள்ளுங்கள்.

2. இரண்டு அளவுகளுக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்.

3. விலாப் பகுதி அளவை விட இடுப்பு (வயிறு) அளவு ஆண்களுக்கு 1.0'' அதிகமாகவும், பெண்களுக்கு 0.8'' அதிகமாகவும் இருக்கலாம். அதற்குமேல் அதிகமாக இருந்தால், உங்களுக்கு தொந்தி விழுந்திருப்பதாக அர்த்தம். 'ஸ்டிரோக்'கோ, 'ஹார்ட் அட்டாக்'கோ வர வாய்ப்பு உண்டு! ஜாக்கிரதையாக இருக்கவும்!



ஆதாரம்: 'எக்ஸிகியூடிவ் டைஜஸ்ட்'
— சம்பத்குமாரி



லட்சக்கணக்கான ரூபாய் செலவில் வாங்கிய எந்திரங்கள் கிண்டியில் துரு ஏறிக் காயலான் கடைக்கு மட்டுமே லாயக்கு என்ற நிலையில் இருக்கின்றன. மொப்பெட்டுகளுக்கெனச் செய்த உதிரிப் பாகங்கள் ஆயிரக்கணக்கில் ஏற்கெனவே காயலான் கடைக்குப் போய்விட்டன!

டி.வி.எஸ் 50, ஹீரோ மெஜஸ்டிக, லூனா மொப்பெட்களைப் பற்றித் தெரிந்திருக்கும். மயூரம் மொப்பெட் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? கொஞ்சம் மூளையைக் கசக்கிப் பாருங்கள். ஞாபகம் வரவில்லையா....! உங்கள் மீது தவறில்லை!

மயூரம் மொப்பெட் தமிழ்நாடு மொப்பெட் நிறுவனத்தின் தயாரிப்பு. 1978லேயே மூன்று கோடி செலவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அரசு நிறுவனம் இன்று மூடப்படும் நிலையில் இருக்கிறது. ஏன் மூடப்பட வேண்டும்?

1981 லேயே மொப்பெட் தயாரிப்பை நிறுத்தியாயிற்று. முதலில் கிண்டி தொழிற்பேட்டையில்தான் உற்பத்தியைத் துவக்கினார்கள். டான்ஸி தயாரிப்பாக, 'டான்ஸி மொப்பெட்' என்று நாமகரணம் பெற்றது. பிறகு 'தமிழ்நாடு மொப்பெட்ஸ்' என்று புதிய நிறுவனம் தொடங்கி, 'மயூரம்' என்று மொப்பெட்டுக்குப் பெயர் மாற்றம் செய்தார்கள். மறைமலைநகரில் பெரிய கட்டடம் எடுத்து மொப்பெட் யூனிட்டை அங்கே கொண்டு போக நினைத்தார்கள். நினைத்தார்கள், அவ்வளவுதான்! எட்டு வருடங்களாகக் காலியாகக் கிடந்த அந்தக் கட்டடத்தை இப்போது சிவில் சப்ளைஸ் துறைக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான ரூபாய் செலவில் வாங்கிய எந்திரங்கள் (கிண்டியில்) துரு ஏறிக் காயலான் கடைக்கு மட்டுமே லாயக்கு என்ற நிலையில் இருக்கின்றன. மொப்பெட்களுக்கெனச் செய்த உதிரிப் பாகங்கள் ஆயிரக்கணக்கில் ஏற்கெனவே காயலான் கடைக்குப் போடப்பட்டுவிட்டன. ஏன் இந்த நிலை?

மூன்று யூனியன்கள் உள்ளன. அவற்றுள் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துப் பேசினோம். முழுக்க, முழுக்க நிர்வாகக் கோளாறினால்தான் மொப்பெட் தயாரிப்பு நின்று போய்விட்டது என்று அவர்கள் கூறினார்கள். நிர்வாகக் கோளாறுக்கு அவர்கள் தரும் சாம்பிள்கள் சில:

— இத்தாலியிலிருந்து ஆறு லட்சம் ரூபாய் செலவில் 'இன்டக்ஷன் ஹார்டனிங் மிஷின்' ஒன்றை வாங்கினார்கள். ஆனால் இதன் மூலம் செய்யக் கூடிய உதிரிப் பாகங்களை வெளியில் சிறு தொழிலகங்களில் செய்து பெற்றால்தான் லாபம். இந்த ராட்சச இயந்திரத்துக்கு முழு அளவில் இங்கு வேலை கொடுக்க முடியாது. அதனால் மிஷினில் உற்பத்தி குறைவாக இருக்க மிஷின் வாங்கியதற்கு வங்கியில் வட்டி ஏறிக் கொண்டே போகிறது. ஆக இந்த மிஷினால் மட்டுமே ஏகப்பட்ட நஷ்டம்.

— ஹோனிங் மிஷின் என்று ஒன்று. இதுவும் இத்தாலியிலிருந்து வாங்கப்பட்டது தான். ஆறு லட்ச ரூபாய் விலை. இதையும் வாங்கிச் சும்மாதான் வைத்திருக்கிறார்கள். வருடத்திற்குப் பதினைந்து நாள்தான் இந்த மிஷின் தேவையாக உள்ளது. வங்கிக்குக் கொடுக்க வேண்டிய அசலையும் வட்டியையும் கணக்கிட்டுக் கொள்ளுங்கள்!

— வெளியில் கொடுத்துச் செய்ய வேண்டிய வேலைகளுக்கு மிஷின்கள் வாங்கித் தண்டமாகப் போட்டு வைத்து நஷ்டம் உண்டாக்கியவர்கள் தொழிற்சாலையிலேயே செய்யக் கூடிய பல உறுப்புக்களை வெளியில் செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்தார்கள். காரணம்கேட்டால் 'மூலப்பொருள் கிடைக்கவில்லை' என்றார்கள். இவர்களுக்குக் கிடைக்காத மூலப் பொருள் தனியாருக்கு மட்டும் எப்படிக் கிடைக்கும்? எல்லாம் 'கமிஷன்' விவகாரம்தான்!

— பர்சேஸ் செக்ஷனில் அடித்த கொள்ளைக்குக் கணக்கே கிடையாது. திரும்பத் திரும்பச் சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கே ஆர்டர்கள் கொடுத்து 'கமிஷன்' அடித்தார்கள். சப்ளை செய்பவர் வசதிக்காகத் தரக் கட்டுப்பாடே தளர்த்தப்பட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். 'இது வாங்குகிறேன், அது வாங்குகிறேன்' என்று அதிகாரிகள் தில்லிக்கும் பஞ்சாபுக்கும் பறந்து போய்க் கடைசியில் தரங்கெட்ட சரக்குகளை வாங்கி வருவார்கள். ஒரு தடவை 'ரிம்' வாங்கி வந்தார்கள். எல்லாம் உபயோகிக்க முடியாதபடி மோசமானவையாய் இருந்தன.

— பெரிய பெரிய கம்பெனிகளில் கூட 12000 ரூபாய்க்கு 'ஸ்டேஷனரி' வாங்க மாட்டார்கள். ஆனால் தமிழ்நாடு மொப்பெட் நிறுவனம் இந்த விஷயத்தில் ரொம்பத் தாராளம்.

— இந்த நிறுவனத்தின் செயல்பாட்டினை ஆராய்ந்த சட்டமன்ற பொதுத்துறை நிறுவனங்கள் கமிட்டி (முசிறிபுத்தன் தலைமை) நிர்வாகக் கோளாறுதான் சீர்கேட்டிற்குக் காரணம் என்று வலியுறுத்திக் கூறியுள்ளது.

இருக்கும் ஐந்நூறு மிஷின்களை வைத்துக் கொண்டு பாதுகாப்புத் துறையின் சில சில்லறை ஆர்டர்களைச் செய்து கொண்டிருக்கும் இந்த நிறுவனம் எந்த நேரமும் மூடப்படலாம். இருநூறு தொழிலாளர்கள் நிலை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

மொப்பெட் உற்பத்தி பற்றி நிர்வாகத் தரப்பில் கேட்டால், "3000 வண்டிகளுக்கும் அதிகமாக உற்பத்தி செய்தோம். ஆனால் எங்களுக்கு மார்க்கெட்டிங் வசதி போதாது. அதனால்தான் நிறுத்த வேண்டியதாயிற்று. மீண்டும் மொப்பெட் உற்பத்தி ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் இல்லை" என்று கூறுகின்றனர்.


ஓடிக் கொண்டிருக்கும் கொஞ்சநஞ்ச மிஷின்களோடு இந்தத் தொழிற்சாலையையே தனியாருக்கு விற்று விடவும் முயற்சி நடக்கிறதாம்!

— கௌசல்யா

படம்: **கே. வி. ஆனந்த்**

கடைத் தெருவில் நடந்து கொண்டிருந்தபோது ஒரு கடையில் பளபள வெனத் தங்க நிறப் பொட்டலங்கள் நிறையத் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். டி.வி.யில் ஜர்தா பாக்கு விளம்பரத்தைப் பார்த்த நினைவில் ஒரு பொட்டலம் வாங்கிப் பிரித்து வாயில் போட்டேன்.

உடனே நாக்கு சுரீலென எரிந்தது. நிற்கக் கூட முடியாமல் தலை கிர்ரெனச் சுற்றியது. கண் இருண்டது. தொண்டை உலர்ந்தது. அருகே இருந்த மருத்துவ க்ளினிக்கை வழிப் போக்கர் உதவியுடன் அடைந்தேன். டாக்டர் என்னை முழுவதுமாகச் சோதித்துவிட்டு, ஒரு ஜூஸ் பானம் வாங்கித் தந்து தமது க்ளினிக்கிலேயே படுக்க வைத்தார். அப்போதுதான் அவர் என் கையிலிருந்த பாக்குப் பொட்டலத்தைப் பார்த்தார். 'ஓ ஜர்தா பாக்கா, இதனை முதல்முறையாகச் சாப்பிடும் போது இதிலிருக்கும் போதைப் பொருள் உங்கள் உடம்பில் சில பயங்கர எதிர் விளைவுகளைத் தோற்றுவிக்கும். உங்கள் மயக்கத்துக்கு இதுவே காரணம்' எனக் கூறி நான் வீடு திரும்ப உதவினார்.




"ஜமாய்ங்க... ஜர்தா!"

அன்று இரவு முழுவதும் பயங்கரமான தலைவலி, தலை சுற்றல்... இந்த வேதனை மறுநாளும் நீடித்தது.

நடுத்தர வயதைக் கடந்த எனக்கே இத்தகைய பாதிப்புகள் தோன்றின என்றால் (அதுவும் பாக்கைத் துப்பிய பிறகும்) இந்த ஜர்தாவைச் சாப்பிடும் இளைஞர்களிடமும் சிறுவர்களிடமும் இது எத்தகைய உடல், மனப் பாதிப்புகளைத் தோற்றுவிக்கும்! ஒருபுறத்தில் 'போதைப் பொருட்களை ஒழிப்போம்' என விளம்பரம் செய்துவரும் அரசாங்கம், ஜர்தா பாக்கைத் தடை செய்யாதது ஏன் என்று புரியவில்லை!

— உஷா.



கல்கி ஸ்ரீ H.S. ராஜகோபால் அவர்களின் குமாரத்தி சௌ. சீதாவுக்கும், சிரஞ்சீவி S.R. மோகன், B.Com., க்கும் 11.2.87 புதன்கிழமையன்று திருப்பதி — திருச்சானூர் S.M.S.O. சபா கல்யாண மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்ற திருமணத்திற்கு உறவினர்களும், நண்பர்களும், பிரமுகர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!



வாழ்க்கை வளம் பெற...

வாழ்வு ஓர் இயக்கம்; மாற்றம் ஒரு தூண்டுகோல்!

7

மாறுதல்களைக் கண்டு மனிதன் ஏன் பயப்படுகிறான்? மாற்றங்கள் நம் வாழ்வில் என்ன கொண்டு வருமோ என்ற பயம். இந்தப் பயம் நம்மை முடக்கிவிடுகிறது. பயத்தில், இயல்பான பயம், இயல்பில்லாத பயம் என்று இரண்டு வகை உண்டு. அதைத் தான் 'அஞ்சுவதஞ்சாமை பேதமை. அஞ்சுவது அஞ்சலறிவார் தொழில்' என்றார் வள்ளுவர். புயல் வரப் போகிறது என்று வானொலி அறிவிக்கும்போது நாம் பயணத்தை மேற்கொள்வது பற்றி அஞ்சத்தான் வேண்டும். இது நியாயமான பயம். மாறாக, தினந்தோறும் பஸ்ஸில் ஆபீசிற்குப் போகிறோமே, பஸ்ஸுக்கு விபத்து நேர்ந்தால், என்ன செய்வது என்றெண்ணிப் பயப்படுவது அர்த்தமில்லாத பயம்!

'எனக்கு அதைப் பற்றிய பயம்' என்று வெளியே சொன்னால், எங்கே நம்மைப் பிறர் 'பயந்தாங்குளி' என்று எண்ணி விடுவார்களோ என்று நினைத்து நமது பயத்தை மறைத்து நாம் பேசுகிறோம்; நடந்து கொள்கிறோம். இப்படி மறைத்துப் பேசுவதே தொழிலானால் 'எதைப் பற்றிப் பயந்தோம்? எது நம்மை உண்மையில் ஆட்டிப் படைக்கிறது?' என்ற அடிப்படையே நமக்குப் புரியாமல் போய்விடுகிறது. எப்போது பயத்தின் அடிப்படை நமக்குப் புரியவில்லையோ அப்போது அதைக் கட்டுப்படுத்தும் வழிகளும் நமக்குப் புலப்படுவதில்லை.

மரணத்தைப் பற்றிச் சற்று நேரம் எண்ணிப் பாருங்கள். அடிமனத்தில் இலேசான பயம் எட்டிப் பாராமல் இருக்காது. கவலைகள் ஆட்கொள்ளாது போகாது. ஆயினும் அன்றாடம் நாம் மரண பயத்தை எப்படிச் சமாளிக்கிறோம்? அதை மறப்பதன் மூலம்; அதைப் பற்றி அதிகம் சிந்திக்காததன் மூலம்; அதை ஏற்றுக் கொள்ளாததன் மூலம். அதைக் 'கண்டு கொள்ளாமல்' இருப்பதன் மூலம். அதேபோல் மாற்றங்களைப் பற்றியும் பயப்படாதிருக்கப் பழகுங்கள். மாற்றங்கள் வளர்ச்சியின் தேவைகள் என்பதை உணர்ந்து அவசியமான மாற்றங்களை



ஏற்றுக் கொள்ளுங்கள்.

நாம் மாற விரும்பாததற்கு மற்றொரு காரணம்: விரக்தி மனோநிலை. வாழ்வில் ஏதும் அர்த்தமில்லை என்ற உணர்வு. "எது செய்து என்ன பயன் கண்டோம்?" "என்ன எழுதி என்ன சாதித்தேன்?" "ஏன் வாழ்கிறேன்? இதில் அர்த்தமில்லை!" என்பது போன்ற எண்ணங்கள் பலரிடம் மேவி நிற்கிறது. "ஈ, எறும்பு, புழு போன்றது மனித வாழ்க்கை. இதிலே ஆசைகள் என்ன? சபலங்கள் என்ன? லட்சியங்கள் என்ன?" என்று இவர்கள் அலுத்துக் கொள்கிறார்கள்.

'நாம் இருப்பது இவ்வுலகம். இதில் மனிதத் தொடர்பு கொண்டு குடும்பமாக, சமுதாயமாக வாழ்கிறோம். நமக்குக் கடமை இருக்கிறது. ஆத்மாவுக்குத் தாகம் இருக்கிறது' என்று சிந்தித்துப் பார்க்கும்போது விரக்தி மனோநிலை அகலும்.

வாழ்வு நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்

கும்போது நமக்கு 'ராஜா' போன்ற நினைவும் நிறைவும் ஏற்படுகிறது. வாழ்க்கையைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப நிர்வகித்து வெற்றி கண்டவர்கள் 'எல்லாம் விதிப்படி நடக்கும்' என்று தத்துவம் பேச மாட்டார்கள். ஆனால் 'விஷயங்கள் நமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை' என்ற நிலை ஏற்படுமானால், "போனால் போகட்டும் போடா! வந்தது தெரியும் போவது எங்கே? வாழ்க்கை நமக்கே தெரியாது!" என்று தத்துவம் பேசுவார்கள். இவர்களிடம் தன்னம்பிக்கை இருப்பதில்லை. சுயகௌரவம் போய்விட்ட உணர்வால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். சுயபச்சாத்தாபம் இவர்களை ஆட்கொள்கிறது. இதனால், வாழ்வில் பல வாய்ப்புக்கள் இருக்கின்றன—ஒன்று போனால் இன்னொன்று என்ற சிந்தனைக்கே இவர்கள் போவதில்லை. இதனால் வாய்ப்புக்கள் இருந்தும் இவர்களுக்குத் தெரிவதில்லை. அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில்லை.

நமது லட்சியத்தில் நமக்கு ஆர்வம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் அதற்காக உழைக்கவும் மாற்றங்களையும் தியாகங்களையும் ஏற்கவும் முன்வருவதில்லை. எனவே லட்சியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு, கடமை உணர்வு, பொறுப்புணர்வு இவை தேவை. வாழ்வில் வாய்ப்புக்கள் இருக்கலாம். வாய்ப்புக்களை உபயோகித்தால் ஒழியப் பலன் ஏதும் கிடைக்காது. வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று பேசிக் கொண்டிருந்தால் வாய்ப்பு மட்டும்தான் தங்கும்! பலன் விளையாது!

மாறினால்—வேறுவிதமாக நடந்து கொண்டால் பிறர் என்ன சொல்வார்கள், ஊர் உலகம் என்ன எண்ணும் என்ற நினைப்புதான் பலரையும் புதிய காரியங்கள் செய்ய முடியாமல் தடுத்து, முடக்கி விடுகிறது. இதனால் தன்னைப் பற்றிய மதிப்பு குறைந்து தாழ்வு மனப்பான்மையில் இவர்கள் மூழ்கி விடுகிறார்கள்.

மாற்றங்கள் வரும்போது புதிய நிலைகள் உருவாகின்றன. புதிய பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. பொறுப்பேற்கப் பலருக்குப் பயம் ஏற்படுகிறது. இதனாலேயே பல இளைஞர்கள் 'கல்யாணம் வேண்டாம்' என்று கூறிவிடுகிறார்கள்! உத்யோக உயர்வில் பலருக்கும் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஏற்படுகிறது. சுதந்திரம்—என்றுமே பொறுப்புடன் சேர்ந்துதான் வருகிறது. மாற்றங்களைச் சமாளிக்க முடியாதவர்கள், குற்ற உணர்வால் சங்கடப்படுவதோடு பிறரைக் குற்றம் சொல்லவும் பிறர் மீது பழி சுமத்தவும் முற்படுகிறார்கள். அல்லது பிறரைச் சார்ந்து அவர்கள் பலத்தில் நிற்க முயல்கிறார்கள். 'பிறர் மீது குற்றம் சாட்டினால் தன் குற்றத்தைப் பார்க்க மாட்டார்கள்' என்ற நினைப்புதான் மந்திரிகளை வீட்டுக்கனுப்புவதற்கு ஒரு காரணம். இதை ஆங்கிலத்தில் **Scapegoats** என்பார்கள். வாழ்விலோ, நாட்டிலோ, மாற்றங்கள் நிகழ வேண்டுமானால் தலைவனுக்குத் துணிந்து இறங்கும் தைரியம் வேண்டும். நமது தலைவர்கள் பலர் யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். யோசித்துக் கொண்டிருந்தால் யோசனைதான் மிஞ்சும். காரியமாற்றினால்தான் பலன் மிஞ்சும்.

நமது கொள்கைகளில் பிடிப்பும், நமது வாழ்க்கை நெறிகள் பற்றிய பெருமையும் நமக்கு இருக்கும்போதுதான் துணிவு ஏற்படுகிறது. இவை இல்லாதவர்கள், காத்திருப்பார்கள்; அல்லது பிறர் முடிவு செய்ய விஷயங்களை விட்டுவிடுவார்கள். அரசியல் முடிவுகளை ஆராயும்போது ஒரு தலைவர் தனக்குத் தானே முடிவு எடுக்கிறார் அல்லது எதிர்க்கட்சித் தலைவரை எண்ணி அவரைக் கவிழ்க்க, அல்லது முந்திக் கொள்ள, அல்லது தர்மசங்கடத்தில் ஆழ்த்த முடிவெடுக்கிறாரா என்பதைப் பரிசீலியுங்கள். ஒரு தலைவரின் வாழ்க்கை நெறியும் கொள்கைப் பிடிப்பும் விளங்கும்!

மாற்றங்களை வரவேற்பவர்கள் தன்னைப் பற்றிய தெளிந்த அறிவுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் பயம் இல்லாமல் இல்லை; பயம் இருந்தும் காரியங்களைச் செய்வார்கள். தடை இருந்தும் மேலே நடப்பார்கள். அவர்களிடம் பலன்களைப் பற்றிய கணிப்பு தெளிவாக இருக்கும். தங்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பற்றிப் பெருமைப்படுவார்கள். அந்த உரிமைகளை உபயோகித்துக் சாதனைகளை நிகழ்த்துவார்கள். இவர்கள் தங்கள் உள் உணர்வை மதிப்பவர்கள். தங்கள் ஆழ்மனம் கணிப்பதை நம்பிச் செயல்படுகிறவர்கள். நமக்கு இருக்கும் உரிமைகளையே சரிவரப் பயன்படுத்தாத போது மேலும் மாநில உரிமைகள் வேண்டும் என்று கூப்பாடு போடுவதில் என்ன பலன்?

மாற்றங்களை, வாழ்வு நலம் வேண்டி, நாட்டு நலம் வேண்டிப் புகுத்தும் புதிய தலைவர்கள் — புதிய பொறுப்புக்களைச் சவால்களாக எடுத்துக் கொள்பவர்கள் நமது நாட்டுக்குத் தேவைப்படுகிறார்கள்.

வாழ்க்கை என்பது கடைசியாகப் போய் அடைய வேண்டிய ஊரல்ல; செல்ல வேண்டிய திசை அது.


— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

"சீனி போடாம ஒரு காப்பி கொண்டா..."

"சார் உங்களுக்கு?"

"பில் போடாம ஒரு காப்பி கொண்டா!"

— கேழை அ. கதிர்வேல்





புதுக்கவிதைப் போட்டி — 10

11.1.87 கல்கி இதழின் அட்டைப் படத்துக்குப் பொருத்தமாக எழுதப் பட்ட கவிதைகள்:

தென்றலிடம் தோற்ற புயல்

முதல் பரிசுக் கவிதை:

- இரும்பாய் இருந்த
  இதய அறைகள்
  அவன் பார்வை
  பாய்ந்தவுடனே
  பூக்களாய்ப் புஷ்பித்தன.

- ஒரு புயல்
  தென்றலிடம்
  தோற்ற சம்பவம்
  அவனில் நிகழ்ந்தது

- கண்களுக்குள்
  சூரியனை வளர்த்தவன்
  பனிக்கட்டியாய்
  உறைந்து போனான்.

- அவன் மேனி கண்ட
  விழுப்புண்கள்
  அவள் பார்வையிலேயே
  மறைந்து போயின.

- புருவ வில்லில் அவள்
  பூட்டிச் செலுத்திய
  பருவ அம்புகள்
  வேதனை தந்திட்டாலும்
  சாதனைக்கும் வித்திட்டன!

— கவிதா,
XII-A, அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கன்னிகாபுரம், சென்னை — 12.

இரண்டாம் பரிசுக் கவிதை:

- ஆகாயச் சூரியன்
  அருகில் வந்ததால்
  தாமரைப் பூவுக்கு
  ஆச்சரியம்!

- பார்வைகளின் பரிமாற்றத்தால்......
  அங்கே —
  ஓராயிரம் மின்னல்கள்!

- உத்தியான வனத்தில்
  தாராளமாகவே பொழிந்தது
  காதல் மழை!

— ஜி. செல்குமார்,
XI-B, எம். சி. என். மேல்நிலைப் பள்ளி,
நமபிபுல்லா ரோடு,
தி. நகர், சென்னை — 17.

அன்பாலிணைந்த காதலரிருவர்
முகமொடு முகம் நோக்க,
தாமரை மலரோ என்றெண்ணி
வண்டுகளிரண்டு பறக்க,
விலக்கவும் வியக்கவும் தோன்றாமல்
உளம் மகிழ்ந்து இவர்கள் பார்க்க,
இடையில் புகுந்த கவிஞனொருவன்
இயற்றினான் காதல் கீதம்!

— க. வெங்கட்ரமணி,
பி.எஸ்.ஸி பௌதிகம், மூன்றாமாண்டு,
செயின்ட் ஜோசப்'ஸ் கல்லூரி,
திருச்சி — 2.

19

"என்ன கலெக்டரு, அவ்வளவு பெரிய செலவு?" தங்கராஜ் விழிகளை வியப்பாக்கிக் கொண்டு கேட்டான்.

"பொறப்படுங்கண்ணே" என்றான் நந்தகுமார். "அன்னிக்குப் போல் டவுனுக்குப் போய்ட்டு வரலாம். பஸ் டிக்கெட்டு நான்தான் எடுப்பேன், டவுன் ஹோட்டல்ல சாப்புடறதுக்கும் நான்தாண்ணே காசு கொடுப்பேன். மூஞ்சைத் தூக்கிக்கக் கூடாது..."

டவுனுக்குப் போய்ச் சேருகையில் விளக்குகள் சந்தோஷமாக வெளிச்சம் கொடுத்தன. சாலையில் மக்கள் சிரித்துக் கொண்டு நடந்தார்கள்.

"இன்னிக்கு எல்லாருமே சந்தோஷமா இருக்காங்க, இல்லண்ணே?"

தங்கராஜ் பதில் சொல்லாமல் நந்தகுமாரைப் புன்னகையோடு ரசித்தான்.

"நடந்துக்கிட்டேயிருந்தா எப்படி கலெக்டரு? எங்கே போகணும்?"

"இதோ இங்கதாண்ணே...."

கண்ணாடிக் கேஸில் புதுப் புடைவை நங்கை பளிச் சிரிப்பு சிரித்துக் கைகூப்பினாள். விசிறி விசிறியாய்த் தொங்கிய புடைவைகள். கடையின் அதீத செயற்கை வெளிச்சத்தில் காக்காய்ச் சரிகையுடன் மினுக்கின.

"வாங்க உள்ற வாங்க. என்ன வேணும்? பையனுக்கு டவுசர் சர்ட்டா? உங்களுக்கு வேஷ்டி சட்டையா? புதுப் புது டிசைன்ல காலைலதான் லாரி சரக்கு வந்து இறங்கியிருக்கு... டேய் பையா, இந்த லேட்டைப் போடுரா."

"என்ன கலெக்டரு? டவுசர் சட்டையா?"

"இல்லண்ணே...." நந்தகுமார் கொஞ்சம் வெட்கப்பட்டான். "எங்கம்மாவுக்கு ஒரு பொடவை எடுக்கணும்ண்ணே....."

"கலெக்டரு, பெரிய்ய ஆளு நீ!" தங்கராஜ் பெருமையோடு நந்தகுமாரை அழுத்திக் கொடுத்தான்.

மாயகிருஷ்ணன் ஏ.ஸி.யைத் தமக்குச் சாதகமான குளுமைக்குப் பொருத்திக் கொண்டார். இயல்பாக மீசையை வருடிக் கொண்டார். மெத்தை சமுத்திரத்தில் கால்களை நீட்டிக் கொண்டார்.

"நான் சொன்னதெல்லாம் விளங்கிச்சாடா?" என்றார்.

"விளங்கிச்சுங்க..." என்றான் ரத்தினம். "நைட்,பஸ்லயே பொறப்பட்டுப்போறேங்க, மொதலாளி..."

"ஆம்.... சண்முகவேலன்னு செவப்பா இருப்பாரு. அவர்கிட்டே மட்டும் பேசு. இப்ப அங்கங்க போலீஸ் மோப்பம் பிடிச்சுட்டு வராங்களாம், கவர்மெண்ட்டு வேறே வெடி மருந்துக்கு எக்கச்சக்கமா கண்ட்ரோல் போட்டுட்டாங்களாம். அத்தனை கஷ்டத்துக்கும் நடுவில்தான் உங்களுக்கோசரம் ரகசியமா தயார் பண்ணாருனு எங்க மொதலாளி — அதனால [illegible] பைசா குறையாதுன்னு அடிச்சுச் சொல்லிடு...." மாயகிருஷ்ணன் நீளமான சுருட்டை ஆராய்ந்து விட்டு உதடுகளில் பொருத்திக் கொண்டார்.

"சாம்பிள் வேணும்னு கேப்பாங்களே மொதலாளி?"

"எவன்டா இவன், சுத்த மரமண்டையா இருக்கிறான்? வெடி குண்டெல்லாம் பஸ்ஸில சாம்பிளுக்கு எடுத்திட்டுப் போக முடியாதுடா, மூதேவி... எங்க சரக்கு என்னைக்கும் காலை வாரி விட்டதில்லைன்னு சொல்லு, போ...."

அவன் கிளம்பிப் போனதும் சுவரில் பதிந்த அலமாரியைத் திறந்து பாட்டிலையும், கோப்பையையும், ஐஸ் பெட்டியையும் எடுத்துத் தன் முன்னே பரப்பிக் கொண்டார். கோப்பையில் பிரதிபலித்த தன் விபூதி பூசிய நெற்றியை ரசித்தார்.

"மொதலாளி..." வேறு குரல்.

சடாரென்று நிமிர்ந்தார் முத்து!

"உங்கண்ணன் இல்லேடா... ஊருக்கு அனுப்பியிருக்கேன்" என்றார்.

"உங்களைத்தான் பார்க்க வந்தேன் மொதலாளி... வீடு பிரிச்சுக் கட்டணும்னு சொன்னேனே, பிடி கொடுக்கவே மாட்டேன்றீங்களே மொதலாளி....?"

"டேய், நிறுத்துடா. பத்தாயிரம்லாம் தர முடியாதுன்னு சொன்னேன், இல்லே?"

"அப்படிச் சொல்லக் கூடாதுங்க" முத்து வஞ்சகமாய்ச் சிரித்தான். "எப்பேர்ப்பட்ட எடத்தில நான் வேலை செய்யறேன், என்னென்ன விஷயம்லாம் எனக்குத் தெரியும்னு யோசிக்கவே மாட்டேன்கறீங்களே, மொதலாளி."

"மெரட்டறியா?" மாயகிருஷ்ணனின் கண்கள் சிவப்பாயின.

"ஐயோ, இல்லீங்க... நான் கேக்கற பணத்தைக் கொடுத்தா, அடிமை மாதிரி இருக்கேன்னுதான் சொல்றேங்க..."

"கொடுக்காட்டி?"

"என்ன செய்வேன்னு உங்களுக்கே

சின்னச் சின்ன கனவுகள்

சுபா



தெரியும், மொதலாளி. அந்த மாதிரில்லாம் செய்யமாட்டீங்க.''

''ஒரு பைசா கொடுக்க மாட்டேன். உன்னால் என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்க...'' மாயகிருஷ்ணன் கண்ணாடிக் கோப்பையை ஆத்திரத்தோடு நிரப்பலானார்.

நந்தகுமார் கடைசிமுறையாக மனத்தில் கேட்டுக் கொண்டான். போகலாமா, வேண்டாமா? போகலாம், வேண்டாம். போகலாம். போகலாம். வேண்டாம். போகலாம். போகலாம். போகலாம்.

கதவு மூடியிருந்தது. படியேறினான். தயங்கினான். உள்ளே வளையல்களின் சப்தம் கேட்டது. கண்ணாடி வளையல்கள். அம்மாவின் வளையல்கள்.

யோசித்து விரல்களை அமைத்துக் கதவைத் தட்டினான்.

''யாரது?''

அந்த வினாடியில் நந்தகுமார் நெஞ்சில் கனமாய் ஏதோ புரள்வதை உணர்ந்தான். அம்மாவின் தேன் தோய்த்த குரலுக்குப் பதில் சொல்ல நா எழவில்லை. கண்களில் பார்வை நீர்த் திரையால் மசமசத்தது.

''யாரு?'' மறுபடியும் குரல் பொங்கி வந்தது.

''நந்து வந்திருக்கேம்மா!'' என்று கத்த நினைத்தான். கம்மிய குரல்தான் வெளிப்பட்டது. இடது மணிக்கட்டால் கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

கதவு பளர் என்று திறந்தது. சொர்க்க வாசல் போல.

''நந்தா....''

நந்தகுமார் குனிந்து நின்றான். அம்மாவின் மெட்டி அணிந்த, மஞ்சளில் குளித்த பாதங்களைப் பார்த்தான். கொஞ்சம் நிமிர்ந்து பூக்கள் மலர்ந்த புடைவையைப் பார்த்தான். அந்தப் புடைவையினுள்ளே மறைந்திருந்த கால்களில்தானே அம்மா இவனைப் போட்டு முதுகில் தட்டித் தட்டித் தூங்கப் பண்ணினாள்! அந்தக் கால்களில் போட்டுத்தானே இவன் உடம்பில் எண்ணெய் மினுமினுப்பை ஏற்றினாள். ஏறக்குறைய முழங்கால்வரை நீண்டிருந்த அந்தக் கைகளைப் பார்த்தான். அள்ளி அளைத்து சோற்றை உருட்டி உருட்டிப் போட்ட, அவனை வாஞ்சையுடன் நீவிக் கொடுத்த, பாசத்துடன் தலையைக் கோதிக்

கொடுத்த, கடைசியாக அவனை அடித்த கைகள்! தோள்கள், கழுத்து, அது சுமக்கும் மஞ்சள் கயிறு, துடிக்கும் உதடுகள், நீர் நிறைந்த அகலமான கண்கள். அம்மா!

''அம்மா....''

இந்திரா சடாரென்று பாய்ந்தாள். நந்தகுமாரை அள்ளிக் கொண்டாள். கன்னத்தில் நெற்றியில் என்று மாறி மாறி முத்தமிட்டாள். முகத்தை அவன் முகத்தில் வைத்துத் தேய்த்தாள். விட்டுவிட்டால் ஓடிப் போய் விடுவானோ என்று அச்சத்தோடு இறுக்கிக் கொண்டாள்.

''நந்து... நல்லாயிருக்கியாடா?'' அவன் முகத்தைக் கைகளில் ஏந்திக் கேட்டாள். ''இப்படி எளைச்சிட்டியேடா... தங்கராஜ் அண்ணன் ஒனக்குச் சரியா சோறு வாங்கித் தரதில்லையா? அந்தப் பாவி பரிமளா நெனைப்பிலயே இருக்காரா?''

''அண்ணன் என்னை ரொம்ப நல்லாப் பார்த்துக்கறாரும்மா....''

''நீ வருவேன்னு எனக்குத் தெரியும். எப்ப அவர் வந்து 'பகோடாவை நீ ரசிச்சுச் சாப்பிட்டே'ன்னு சொன்னாரோ, எப்ப நீ பருப்புருண்டைக் கொழம்பை அழுதுகிட்டே சாப்டேன்னு சொன்னாரோ அப்பவே நீ வருவேன்னு தெரியும். ஒவ்வொரு லீவு நாளும் சாப்பிடாமக் காத்திருந்தேன். இன்னிக்குக் கூட அம்மா இன்னும் சாப்பிடலை. வா, ராஜா.... நீயும் நானும் நானும் நீயும் சேர்ந்து சாப்பிடலாம் வாடா...'' இந்திரா இமைத்து, இமைத்துக் கண்ணீரை அடக்கினாள்.

நந்தகுமாருக்கு சங்கடமாயிருந்தது. பாண்டியன் நந்தகுமாரின் முகச்சுளிப்புகளைப் பற்றிச் சொல்லாமல் பகோடாவைக் கூட ருசித்துச் சாப்பிட்டதாகச் சொல்லியிருந்தது மனத்தை என்னவோ செய்தது.

''வாடா, உள்ளே வா'' இந்திரா நந்தகுமாரை உள்ளே அணைத்து இழுத்துக் கொண்டு போக, அவன் திமிறிக் கொண்டு நின்றான்.

''ஏன் நந்து, உள்ள வரமாட்டியா?''

''வரமாட்டேன்னு சொல்லலியே.''

''பின்ன வாயேன்.''

''வரேம்மா இப்ப இல்லை! இப்ப நான் சாப்பிடறதுக்கு வரலை. வேறே விஷயமா வந்தேன்'' நந்தகுமார் வீட்டைச் சுற்றுமுற்றும் பார்த்தான்.

''அவரு வீட்ல இல்லடா. உங்க ஃபாக்டரியில யாரோ பையனுக்கு நெருப்புக் காயமாயிடிச்சாமே, அவன் விஷயமா உங்க முதலாளியைப் பார்க்கப் போறேன்னு கௌம்பிப் போயிட்டாரு. நந்து, ஃபாக்டரில நீ ஜாக்கிரதையா இருந்துக்கறே, இல்ல?'' என்னவோ நெருப்பிலிருந்து அவனை தப்பி விட்டவன்போல் தடவித் தடவிக் கொடுத்தாள்.

''அம்மா... நான் உனக்காக ஒண்ணு வாங்கிட்டு வந்திருக்கேன்'' மார்புடன் அணைத்த பொட்டலத்தை எடுத்து நீட்டினான்.

இந்திரா அதை வாங்கிக் கொண்டாள். நந்தகுமாரைப் பார்த்துக் கொண்டே, புடைவையை வெளியே எடுத்தாள்.

நந்தகுமார் அவள் கையிலிருந்து அதை வாங்கிப் பிரித்து, அவள் மார்பில் சாத்தினான்.

''பிடிச்சிருக்காம்மா?''

''ரொம்பப் பிடிச்சிருக்குடா...'' இந்திரா கண்களில் சந்தோஷத்தைப் பிரதிபலித்தாள்.

''கட்டிக்கம்மா...''

''இப்பவேவா?''

''ஆமா, இப்பவேதான்...''

''நீ உள்ளே கூட வரமாட்டேங்கறே. நான் கட்டினால் எத்தனை நேரம் பார்த்துக்கிட்டு நிக்கப் போறே?'' இந்திரா அந்தப் புடைவையை எடுத்து மடித்தாள்.

''கட்டிக்க மாட்டியாம்மா?'' நந்தகுமாரின் குரலில் ஏக்கம் இருந்தது.

''கட்டிக்கறேன். நீ இங்கேயே இருந்துடறியா?''

''என்னம்மா நீ, அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நீ ஆசையாய் பொடவை வாங்கிகிட்டு வந்ததில எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா, நந்து? ஆனா நீ என் கையால சாப்பிட்டு, இந்த வீட்டை உன் வீடா நெனைச்சு சந்தோஷமாத் தங்கறப்பதானே, எனக்கு மனசுல நிம்மதி வரும்? விருந்தாளி மாதிரி வாசல்ல நின்னு பேசிட்டுப் போறேங்கறியே, நான் யாருக்காக இந்தப் புடைவையைக் கட்டணும்?''

''என்னம்மா இது, இப்படிச் சொல்றே?''

''தங்கராஜ் அண்ணன்கிட்ட சொல்லிட்டு, இன்னிக்கே இங்கே வந்துடறேன்னு சொல்லு, நான் இன்னிக்கே இந்தப் புடைவையைக் கட்டிக்கறேன்.''

நந்தகுமார் பார்வையைத் தழைத்துக் கொண்டான். ''அதுக்கு இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்மா.''

''நீ என்னிக்கு இந்த வீட்டுக்கு மூட்டை முடிச்சோட வந்து எறங்கறியோ, இனிமேல் அம்மாவை விட்டு எங்கேயும் போகமாட்டேன்னு சொல்றியோ, அன்னிக்குத்தான் நான் ஆசையா இந்தப் புடைவையைக் கட்டப் போறேன், நந்து...'' இந்திராவின் குரலில் அன்பு இருந்த அதே அளவு உறுதியும் இருந்தது.

நந்தகுமார் தீராத தாகத்துடன் அந்தப் புடைவையைப் பார்த்தான். தான் அடம் பிடிக்கும்போது, அம்மாவும் அடம் பிடிப்பதில் ஆச்சரியமில்லை என்று தோன்றியது.

''தங்கராஜ் அண்ணன்கிட்டே நான் சீக்கிரமே வரேன்னு சொல்லிட்டேன்மா. வரட்டுமா?'' நந்தகுமார் சடாரென்று அவள் பிடியிலிருந்து உதறிக் கொண்டான். படிகளில் வேகமாய் இறங்கினான். விளக்கை அணைத்ததுபோல் ஓடிவிட்டான். உதடுகள் துடிக்கத் துடிக்க அழுகையை அடக்கிக் கொண்டு இந்திரா அங்கேயே வெகு நேரம் நின்றிருந்தாள்.

''ஜெயம்மாவா?'' பாண்டியனின்

லக்ஷ்மி சிறப்பு மலர்...

"சுவருமோ ஏறாட்டமா? இரு, இரு உங்கம்மா கிட்ட சொல்றேன்."
ஆன்ட்டி! என் அம்மாவிடம் சொல்லிடுவீங்களா ஆன்ட்டி?

— ராஜேந்திரகுமார்.

பல அழகான கற்பனைகளைக் கோட்டையாக்கிய பாசமும் அன்பும் பொங்கிய நெஞ்சின் மீது, அவரது மகன் திரு. மகேஷ் நெருப்பு வைத்த சமயத்தில்..

— அனுராதா ரமணன்.

லக்ஷ்மியின் படைப்புக்கு அடிப்படை உள்ள தாய்மையை அன்னார் புரிந்து கொள்ள மறந்தது.

— பாலகுமாரன்.

பல லட்சம் சொத்துக்கு அதிபதியாக இருந்த லக்ஷ்மி, ஏன் பணத்தில் அவ்வளவு கவனமாக இருந்தார்?

— உஷா சுப்ரமணியம்.

மற்றும் ராஜேஷ்குமார், விக்கிரமன், கோவி. மணிசேகரன், சுபா, பாக்கெட் நாவலாசிரியர் அசோகன் ஆகியோர் அவரைப் பற்றிக் கூறியுள்ளார்கள்...



உங்கள் லக்ஷ்மி எழுதிய

'தோட்டத்து வீடு'

கடைசி முழு நாவல்

விலை ரூ 2.

பாக்கெட் நாவல்

வாங்கி பத்திரப்படுத்தி விட்டீர்களா?

விவரங்களுக்கு :- ஜியே பப்ளிகேஷன்ஸ்,
352, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005.

குரலில் ஆச்சரியமும், சந்தோஷமும் கலந்திருந்தது.

''ஆமாங்க. இதோ பாருங்க புடைவை...''

இந்திரா அந்தக் கருநீலப் புடைவையை மார்பில் விரித்துப் போட்டுக் காட்டினாள்.

''கட்டிக்க இந்திரா, எவ்வளவு நல்லா இருக்கு!''

''இப்பக் கட்டப் போறதில்லீங்க...''

''ஏன், நான் நல்லால்லியா?''

''அது இல்லீங்க. நந்து இந்த வீட்டுக்கு வந்து என்னிக்கு நம்ம கூடச் சேர்றேனு அன்னிக்குத்தான் இந்தப் புடைவையைக் கட்டுவேன்னு அவன்கிட்ட சொல்லியிருக்கேன். அவன் வாங்கிக் கொடுத்த புடைவையை நான் கட்டணுங்கற ஆசைலயாவது நந்து இங்கே வந்துடமாட்டானான்னு ஒரு நப்பாசைதாங்க...

''வந்துடுவான் இந்திரா. நாளைக்கே வந்துடுவான் பாரு. உன்னை வந்து பார்த்திட்டுப் போயிட்டான் இல்லே, இனிமே அவனால தூங்க முடியாது. கன்னுக்குட்டி மாதிரி ஓடி வரப் போறான், பாரு...''

''எதுக்கும் நீங்க நாளைக்கு ஒரு வாட்டி பார்த்துக் கூப்பிடுங்களேன்'' இந்திரா பாண்டியனின் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தாள்.

''எனக்கும் மேட்ச் ஃபாக்டரில கொஞ்சம் வேலே இருக்கு, இந்திரா. இன்னிக்கு முதலாளி சரியா பிடி கொடுத்துப் பேசலே. மனசு சரியில்லாதவரு போல இருந்தாரு. நாளைக்குக் காலேல வரச் சொல்லியிருக்காரு. அந்தப் பையனுக்கு ஏதாவது காம்பன்சேஷன் வாங்கித் தரணும்... ஃபாக்டரிக்குப் போறப்ப, நந்துவையும் பார்த்துப் பேசறேன். தங்கராஜ் கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிடறேன். நந்துவை சாயங்காலம் வர்றப்ப கையோட கூட்டிட்டே வந்துடறேன்.''

''நெஜம்மாவா?'' — இந்த முறை இந்திரா கேட்டாள்.

''நாளைக்கு வேலேயிலேருந்து திரும்பறப்ப நந்து இல்லாம இந்த வீட்டுக்குள்ள அடியெடுத்து வைக்க மாட்டேன். கவலேப் படாதே!''

மாயகிருஷ்ணன், வெந்நீர் ஷவருக்குக் கீழே நின்றிருந்தபோது அந்த போன் வந்தது. அவருடைய பிரத்யேக லேன்.


''மாயகிருஷ்ணனுங்களா?'' பரபரப்பாய் எதிர்முனே கேட்டது.

அவர் பேரைச் சொல்லிக் கூப்பிடும் ஒரே ஆசாமி உள்ளூர் இன்ஸ்பெக்டர்தான்.

''என்ன இன்ஸ்பெக்டரு? உறவுப் பையனுக்கு வேலேயா?'' என்றார் ஈரத் துண்டோடு.

''ஆபத்துங்க ஐயா. நீங்க ஃபாக்டரில ரகசியமா வெடிகுண்டு தயார் பண்றதைப் பத்தி எந்த புத்தி கெட்டப் பயலோ கவர்மெண்ட்டுக்கு மொட்டைக் கடுதாசி எழுதிப் போட்டுட்டான். மெட்ராஸ்லேர்ந்து ஸ்பெஷல் போலீஸ் தடால்னு வந்து எறங்கியிருக்கு. என்னால் ஒண்ணும் பண்ண முடியாது. இன்னும் அரை மணில ஃபாக்டரிக்கு அவங்க எல்லாம் வராங்க....''

(தொடரும்)



சட்டசபையா என்று சந்தேகம் வந்துவிட்டது!

* நெல்லை மாவட்ட ஆட்சியாளரின் பேட்டியைப் படித்தேன். மாவட்டம் முழுவதும் சென்று அலசி ஆராய்ந்து ஏற்பட்டுள்ள குறைகளை ரத்னச் சுருக்கமாக கலெக்டரிடம் கொட்டித் தீர்த்துவிட்டார்கள். 'கல்கி' வாரம் தோறும் படிக்கும்போது அது ஒரு வார இதழா, அல்லது சட்டசபையில் எம்.எல்.ஏ. ஆற்றும் உரையா என்பது தெரியவில்லை.

திருப்புவனம், வெ.க. கிருட்டிணமூர்த்தி.

* வீட்டுக்காரச் சொர்ணத்தாச்சியைத் தாமிர வருணித் தமிழ்க் கேமிராவில் 'கிளிக்' செய்த வண்ண நிலவன், வீட்டுக்காரர்களிடம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடும் குடித்தனக்காரர்களின் அட்டி, ஆவலாதி களை அருமையாய் விளக்கிவிட்டார். என்ன சொல்லுதிய!

ஸ்ரீரங்கம், ஆர். கோபாலன்.

* தமிழ்நாட்டுடன் இணைவோம் எனப் போராடி யோர் இப்போது பிரிவோம் என மனம் வெதும்பி வருத்தமுறுகின்ற அளவிற்குப் பிரச்னைகள் முற்றி விட்டதென்றால் அது நமது அரசின் மெத்தனத்தை யே காட்டுகிறது.

மேட்டுப்பாளையம், பி.ஏ. வஹாத்.

* அடடே, தராக எங்கே மறைந்து வைத்திருந்தார் தன் கவித்துவத்தை!

'வந்தே மாதரம் என்போம்' சிறுகதை சிறப்பாக இருந்தது. வேதாவின் ஓவியம் மிகப் பொருத்தமாக இருந்தது. பட்டாளக்காரனின் முகத்தில் இறுகிப் போன உணர்ச்சிகளை என்ன அழகாகத் தெரியப் படுத்தியிருந்தார்!

திருத்துறைப்பூண்டி, டி. டேவிட் ஜான் பிரிட்டோ.

* சபாநாயகரைப் பற்றித் தொகுதி மக்கள் கூறு வதைப் பார்க்கும்போது அவர் ஒரு சபாநாயகராக அங்கு செல்லாமல் அத்தொகுதியின் எம்.எல்.ஏ. வாக இருந்து பல பணிகளைப் புரிந்துள்ளார் என்பது புரி கிறது. தி.மு.க. நகர் மன்றத் தலைவரே பாராட்டும்படி நடந்து கொண்டுள்ளதைப் பார்த்தபோது உண்மையி லேயே உள்ளம் நெகிழ்ந்து போனேன்.

சீர்காழி, எஸ். சண்முகம்.

* பச்சையாறு அணை பற்றிய கட்டுரையில் அரசியல் வாதிகளை நம்பிக்கிட்டு இருந்தோம்னு வேலையாவா துன்னு புட்டுப் புட்டுச் சொல்லிப்புட்டீயளே! திரு நெல்வேலி மக்களை உசுப்பி விட்டிருக்கும் உமது கட்டுரை என்பது நிச்சயம்.

சிறுவாலக்காடு, எஸ். சுப்பிரமணியன்.

* பசுமையான இயற்கைச் சூழலுடன் சலசலத்து ஓடும் பச்சையாறு வண்ண அட்டைப் படம், நெஞ்சை இதமாகத் தாலாட்டிய ஒரு சுகமான புதுக் கவிதை.

சென்னை—15, வி. முரளி.

* கல்கி 22.2.1987 இதழில் 'பச்சையாறு அணையை எதிர்க்கும் வனத்துறை' என்னும் கட்டுரையில் 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்று வள்ளுவர் சொன்னது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாட்டு வள்ளுவர் இயற்றியது அல்ல. ஔவையார் இயற்றியுள்ள 'மூதுரை' என்னும் நூலில் இப்பாடல் வருகிறது. பாடல் வருமாறு:

''நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை''

சென்னை—21, த. சிவகோபாலசுவாமி.

(தவறு திருத்திய சிவகோபாலசுவாமிக்கு நன்றி — ஆ.ர்.)

* கல்கி புதுக்கோட்டை மாவட்ட சிறப்பித ழில் (25.1.87) ''ஆயிரக்கணக்கான ரூபாய் களை அபேஸ் செய்த ஏஜென்ஸி'' என்ற தலைப்பின்கீழ் என் புகைப்படம் வெளியிட் டுள்ளீர்கள். இது என்னை அறிந்தவர்கள் தெரிந்தவர்களுக்கு ஐயப்பாடு மற்றும் அவ நம்பிக்கை ஏற்படுத்தும்படியாக உள்ளது.

வே. சிங்காரம் செட்டியார்
கொப்பனும்பட்டி

(மேற்படி கட்டுரைக்குத் தகவல்கள் கொடுத்து உதவிய வர் என்ற முறையிலேதான் சிங்காரம் செட்டியார் படம் வெளியிடப்பட்டதேயொழிய வேறு தவறான நோக்கம் ஏதும் கிடையாது. ஏஜென்ஸிக்கும் சிங்காரம் செட்டியாருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பது கட்டுரையைப் படிக்கும் எவருக்கும் தெளிவாகும் — ஆ.ர்.)

* 16.3.86 மதுரை மாவட்டத்தில் கல்கி இதழில் ''ஏமாற்றங்களேதான் என் வாழ்க்கையா?'' என்ற தலைப்பில் வெளியான உமாதேவி என்பவர் பற்றிய கட்டுரை தொடர்பாக...

கடன் கொடுத்த திருமதி டி. உமாதேவி யும், பணம் கடன் வாங்கியவரும், காவல் துறை அலுவலர்கள் முன்பாகத் தாங்கள் இருவரும் சமாதான முறையில் இப்பிரச்னை யைத் தீர்த்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டு எழுதிக் கொடுத்துள்ளனர். ஆகவே, இப்பிரச்னை மறுமுறை எழ வாய்ப் பில்லை. மேலும் திருமதி டி. உமாதேவி, மதுரை மாநகராட்சி மஞ்சணக்கார ஆரம்பப் பள்ளி சத்துணவு மையத்தில் அமைப்பாளராக நிய மனம் செய்யப்பட்டு, அப்பணியிடத்தில் 29.12.86 முதல் சேர்ந்து பணியாற்றி வரு கிறார்.

ஆக, திருமதி டி. உமாதேவி என்பவரின் இரு கோரிக்கைகளும் தக்க முறையில் நிறை வேற்றப்பட்டன என்பதை அன்புடன் தெரி வித்துக் கொள்கிறேன்.

இரா. வரதராஜுலு.
மதுரை—20, மாவட்ட ஆட்சித் தலைவர்.



21

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III

ராஜ்மோகன் காந்தி



அறை எண் 13:

அறை எண் 65!

கவர்னர் ஜெனரலின் பத்திரிகைத் தொடர்பு அதிகாரி காம்ப்பெல் ஜான்ஸன், 'மவுண்ட்பேட்டன் கல்கத்தா வந்திருந்த போது, அவருக்குக் கவர்னர் மாளிகையில் நடந்த விருந்துபசாரத்தில், அரச குடும்பத்தினருக்குக் காண்பிக்கப்பட வேண்டிய சம்பிரதாய மரியாதைகள்; குறை காண முடியாதபடி முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டன' என்கிறார். இரவு விருந்து முடிந்த பிறகு, மவுண்ட்பேட்டன் மரபுப்படி பேச எழுந்தார். சொற்பொழிவின் இடையில், தமக்கும் தமது மனைவிக்கும் திருமணம் நிச்சயமானது 1922 இல், ஸிம்லாவில் உள்ள வைஸ்ராய் மாளிகையில் பதின்மூன்றும் நெம்பர் அறையில்தான் என்று நினைவுகூர்ந்தார். இதையொட்டி வைஸ்ராயின் உரைக்கு நன்றி நவின்ற ஸி. ஆர். கூறினார்: "அதே காலகட்டத்தில் நான் எங்கே இருந்தேன் என்று யோசித்தேன்! வேலூர் சிறை; அறை எண் அறுபத்தைந்து!"

"ஸி. ஆருக்கு இருந்த தார்மீக பலம் மலை போன்றது" என்று காம்ப்பெல் ஜான்ஸன் தமது டயரியில் குறிப்பிடுகிறார். "குரலை உயர்த்தாமலும் நடத்தையில் தடபுடலின்றியும் அதனைப் பயன்படுத்தினார். அடக்கமான உள்ளத்தின் மெய்யான பலத்தை ஸி. ஆர். பெற்றிருந்தார்."

ஸி. ஆரின் உவமைகளும் பொன்மொழிகளும் வங்க மக்களைக் கவர்ந்தன. அவர்களை அதிசயத்தில் ஆழ்த்தின. பெண்கள் பள்ளியில் மாணவிகளிடம் சொன்னார்: "முடிந்த போதெல்லாம் சிரியுங்கள். முகப்பூச்சுக்களை நம்புவதைவிடப் புன்னகையை நம்புங்கள். அது உங்கள் அழகை மட்டுமின்றி குணத்தையும் வளர்க்கும்."

சுதந்திரம் பெற்று ஆறு மாதங்களுக்குப் பிறகு அவர் கூறினார்: "ஐம்பதாண்டுகள் போராடிப் பெற்ற இந்திய சுதந்திரம் என்பது, வெறும் லஞ்ச ஊழலாக முடிந்து போகுமானால் அ... ச் சோகம் வேறென்ன?"

"வந்தேமா...? ஜன கண மன வா?" ஸி. ஆர். இலை... க இருந்தபோது, சுதந்திர வேட்கையை ஊட்டியது வந்தேமாதரம் பாடல்தான். எனவே, அதுதான் தேசியகீதமாக ஒலிக்க வேண்டும் என்று ஸி. ஆர். விரும்பினார். ஆனால் அதற்காகச் சண்டை போடுவது அர்த்தமற்றது என்றும் அவருக்குத் தோன்றியது: "ரவீந்திரநாத் தாகூரும் பங்கிம் சந்திர சட்டர்ஜியும் இன்று இங்கு இருந்தால் ஒருவரோடொருவர் நட்புரிமையுடன் கைகுலுக்கி மகிழ்வார்கள். ஆனால் குருவை விடச் சீடர்கள் பிடிவாதக்காரர்களாக இருக்கிறார்கள்!"

ஜனநாயகம் பற்றிய அவர் கருத்து: "வோட்டு என்பது சலுகை பெற, பேரம் பேசி அளிக்கப்படும் விஷயம் அல்ல. வெற்றி பெற்ற ஒருவருக்கு வோட்டளித்த மக்கள், அவரை, அவருக்கு வோட்டுப் போடாத மக்களுக்குச் சேவை புரியுமாறு வற்புறுத்துவதைப் பெருமிதத்துக்குரிய கடமையாகக் கொள்ள வேண்டும்."

மகாத்மாவின் பெயரைச் சாலைகளுக்கும் கட்டடங்களுக்கும் புதிய குடியிருப்புப் பகுதிகளுக்கும் சூட்டுவது பற்றி ஸி. ஆர். கூறியது: "இது செலவில்லாமலும் சிரமமில்லாமலும் திருப்தி அடைய ஒரு வழி, அவ்வளவே! இச்செயல் பொருத்தமற்றது என்பதுடன் எந்தவிதத்திலும் மறைந்த தலைவரின் பெருமையை உயர்த்தாது."

சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்தவர்கள் விசேஷ உரிமைகளைக் கோருவது எப்படி இருக்கிறது? "சமையல்காரன், 'நான்தானே அடுப்படியில் நின்று புழுங்கியபடி சமைத்தேன். அதனால் நான்தான் எல்லாவற்றையும் சாப்பிடுவேன்' என்று கூறுவது போலிருக்கிறது! சுதந்திரத்தின் பிரசாதங்கள் அனைவரும் அனுபவிப்பதற்கு ஏற்பட்டவை."

அமெரிக்க சோவியத் உறவு எவ்வாறு இருக்க வேண்டும்? அமெரிக்கத் தூதரை எதிரில் வைத்துக் கொண்டே பேசினார்

அரசியல்வாதி அல்ல; ராஜதந்திரி!

ஸி. ஆர்: ''எண்ணெயைத் தொட்டால் பிசுக்கு ஒட்டுகிறது. காஸ்டிக் சோடா பட்டால் எரிகிறது; புண் உண்டாகிறது. ஆனால் இரண்டும் சரியான அளவிலும் முறையிலும் கலந்தால், சுத்தப்படுத்துகிற நல்ல சோப்பு கிடைக்கிறது. அதேபோல ருஷ்ய காஸ்டிக் சோடாவும் அமெரிக்க எண்ணெயும் என்றேனும் ஒருநாள் இணைந்து உலகுக்குத் தேவைப்படுகிற நல்ல சோப்பை அளிக்கும் என்று நம்புவோம்!''

டாக்டர் ராஜகோபாலாச்சாரி என்று தாம் அழைக்கப்படுவது குறித்தும் அறிவுரை வழங்கினார் ஸி. ஆர்: ''சில பல்கலைக்கழகங்கள் எனக்கு மனமுவந்து டாக்டர் பட்டங்கள் வழங்கியுள்ளன. ஒரு தாய்க்குத் தன் மகனைச் 'சமர்த்து' என்று கூறி, தட்டிக் கொடுக்க எவ்வளவு சுதந்திரம் உண்டோ, அப்படி இந்தப் பல்கலைக்கழகங்களுக்கும் டாக்டர் பட்டம் வழங்கும் அதிகாரம் உண்டு. தாய் மகனை, 'சமர்த்து' என்று கூறிவிட்டதால் எல்லாரும் அவனைச் 'சமர்த்து கோபாலா' என்றோ, 'சமர்த்துக் கோவிந்தா' என்றோ அழைக்கத் தேவையில்லை! அதுபோல நீங்களும் என்னை 'டாக்டர் ராஜகோபாலாச்சாரி' என்று அழைக்க அவசியம் இல்லை. 'திரு ராஜகோபாலாச்சாரி' என்று சொன்னாலே போதும்.''

இப்படி பல அரிய கருத்துக்களை உதிர்த்த ராஜாஜி, குறை கண்டு குற்றம் சாட்டிய போது கூட நெஞ்சில் தைப்பது போல் பேசினார். கல்கத்தாவில் பிரசித்தி பெற்ற காளி கோயில் வாசலில் இருந்த குப்பைக் குவியலைத் தமது கைத்தடியால் சுட்டிக் காட்டியபடி அவர் ஆலய நிர்வாகிகளிடம் சொன்னார்: ''இந்தக் கோயிலில் உள்ள தெய்வம் நிர்மலா. அதாவது அப்பழுக்கற்றவள்; சுத்தத்தின் உருவம். அப்படிப்பட்டவளின் ஆலயத்தைக் கவர்னர் மாளிகையை விடச் சுத்தமானதாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

''ராஜ தந்திரம் என்பது பொய் முகம் காட்டுவது அல்ல; அது தங்கம் போன்றது'' என்றார் ஸி. ஆர்., ஒரு சந்தர்ப்பத்தில். கவர்னரின் ராணுவக் காரியதரிசியும் மருத்துவருமான சட்டர்ஜி கேட்டார்: ''அப்படியென்றால்....?'' ஸி. ஆர். விளக்கினார்:

''தங்கத்துக்குப் பலமளிக்கவும் அது நீடித்து உழைக்கவும் சிறிதளவு செம்பு சேர்ப்போம். அதுபோல்தான் ராஜதந்திரத்தில் சிறிதளவு நாடகம் கலந்து இருக்கும். அதனால் அது கெட்டுப் போகாது; உறுதிப்படும். ஆனால் செம்பு அதிகம் சேர்த்தால் தங்கத்தின் தரம் குறைவது போல ராஜ தந்திரமும் பொய் நடத்தையாகி விடுகிற ஆபத்து உண்டு!''

இவ்வாறு ராஜ தந்திர நுணுக்கங்களை உணர்ந்திருந்த ராஜாஜி, பல சந்தர்ப்பங்களில் பொறுமையின்றி அப்பட்டமான உண்மைகளைக் கூறியிருக்கிறார். சிறிதும் நாசூக்குக் கலக்காத அந்தக் கடும் மொழிகள் பலர் மனத்தைப் புண்படுத்தியிருக்கின்றன. அவர் எல்லாருடைய அன்பையும் வேண்டினார். அதற்காக ஏங்கவே செய்தார். அடிக்கடி அந்த அன்பைப் பெறவும் செய்தார். ஆனால், வேறு சில தருணங்களில், அவரது நாக்கு அவருடைய ஆசையை அழித்தது. அவரைப் பின்பற்றியவர்களும் அவரை வியந்து போற்றியவர்களும் கனத்த தோல் உடையவர்களாக, அவருடைய கடுமையான மொழிகளைக் கேட்க நேர்ந்தாலும் அதன் பின் உள்ள பரிவுள்ளத்தைப் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டியிருந்தது. இந்த மனப் பக்குவத்தை எல்லாராலும் பெற முடியாத நிலையில் அவர் பல நண்பர்களை இழக்கவே செய்தார்.

ஒருசமயம், மாலை நேர தேநீர் விருந்துபசாரத்துக்கு ஒரு பிரபலஸ்தர் கவர்னர் மாளிகைக்கு வந்திருந்தார். கையைப் பலமாக அசைத்துப் பேசும்போது, தமது கரத்திலிருந்த கோப்பையை நழுவவிட்டுவிட்டார். கவர்னர் அருகிலேயே இருந்ததால், உடனே அவர் வருத்தம் தெரிவித்துக் ''கை தவறிவிட்டது'' என்றார். அடுத்தகணம், ''தவிர்த்திருக்கக் கூடிய தவறு'' என்று ஸி. ஆர். முகத்திலடித்தாற் போல் கூற, விருந்தினர் முகம் கன்றிவிட்டது.

இன்னொரு சமயம் ஓர் அதிகாரி கழுத்தில் 'டை'யின் முடிச்சை இறுக்கமாகப் போடாமலும் கோட்டுப் பையில் செருகிய கர்ச்சீப்பின் அழுக்கு வெளியே தெரிவது போலவும் வந்து சேர்ந்தார். ''சுதந்திரம், நாம் விரும்பியபடி உடை அணிய நமக்கு உரிமை அளித்திருப்பது உண்மையே. ஆனால் தரத்தைத் தளர்த்தும் உரிமையை சுதந்திரம் நமக்குத் தரவில்லை'' என்றார் ஸி. ஆர்.

ஓர் அரசியல்வாதி தன்னைச் சூழ்ந்துள்ள ஆதரவாளர்களின் மனம் புண்படும்படி பேச மாட்டான் என்றால் ஸி. ஆர். ஓர் அரசியல்வாதியே அல்ல!

(தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

** மக்களை எடை போட ஆரம்பித்தால் அவர்களிடம் அன்பு செலுத்த நமக்கு நேரமில்லாது போகும்.

சொல்வதெல்லாம் உண்மை

பத்து வருஷங்களாக உண்மையைச் சொல்லி வரும் பத்திரிகையின் பெயரைக் காப்பாற்றுவதற்காக ஓர் உயிரையே பலி வாங்குகிறார் பத்திரிகை ஆசிரியர்.

விஷயம் என்னவோ புதுமையானதுதான். ஆனால் நம்புவதுதான் கொஞ்சம் சிரமம்.

வில்லனாய் ராதாரவி — அட்டகாசம்! முகத்தை ஒரு திருப்புத் திருப்பித் தோள் பட்டையை வளைத்து, கையைச் சொடுக்கும் மானரிஸத்திற்காகத் தியேட்டரில் விசில் பறக்கிறது.

செந்திலை வைத்துக் காமெடி பண்ண நினைத்து, ஃபிலிமை வீணாக்கி இருக்கிறார்கள். பைத்திய செந்திலும், பைத்தியமில்லாத செந்திலும், பைத்தியமில்லாத செந்திலும், பைத்திய செந்திலும்—அடவிடுங்கப்பா, கொஞ்சம் ஏமாந்தால் நம் மூளையே குழம்பிப் போகும்.

ரேகா என்றால் இந்தப் பட அகராதிப்படி ஷோகேஸ் பொம்மை என்று அர்த்தம் போல இருக்கிறது. விஜயகாந்துடன் டூயட். அண்ணன் இறந்த நேரத்தில் கிளிசரின் உபயத்தால் அழுகை. தட்ஸ் ஆல்!

'கண்ணுக்குள்' பாட்டு நன்றாக இருக்கிறது.

காமிரா சில இடங்களில் பளிச்.

ராதாரவியை விஜய்காந்த் கொல்லும் ஸீனைப் படம் பண்ணியிருப்பது அருமை.

நம்பமுடியாத கதை என்றாலும் ஆரம்பம் முதல் கடைசி வரை விறுவிறுப்புக்குப் பஞ்சமின்றிக் கதையைக் கொண்டு சென்றிருப்பதற்காக டைரக்டர் நேதாஜியைப் பாராட்டியே ஆக வேண்டும்.





இரும்பு மனிதன்

அ்டேங்கப்பா எவ்வளவு நீளக் கதை! நீளமாயிருந்து என்ன பிரயோஜனம்? விவஸ்தையேயில்லாமல் கண்டபடி திரும்புகிறது.

அந்தமான் ஜெயிலில் சிரஞ்சீவி கஷ்டப்படும்போது பார்க்கிறவர்களையும் சேர்த்தே கஷ்டப்படுத்தி விடுகிறார்கள்! (யோவ் டைரக்டர், எட்டு வருஷம் ஹீரோ கஷ்டப்பட்டா, எட்டு வருஷத்தையும் ஸ்க்ரீன்ல காட்டணுமா? ஸீனை மாத்துய்யா — பக்கத்து ஸீட் ரசிகர்.)

அது எப்படித்தான் அந்த மாதிரி டான்ஸ் மூவ்மென்ட்டுகளைக் கொடுக்கிறார்களோ? சில சமயம் குழந்தைத்தனம், சில சமயம் கோமாளித்தனம். தெலுங்குப் படவுலக டான்ஸ் மாஸ்டர்களையெல்லாம் முதலில் அந்தமானுக்குக் கப்பல் ஏற்றியாக வேண்டும்.

ஜெயப்ரதா ஹீரோயின் என்று பெயர். நான்கு டூயட் ஸீன்கள். விதவிதமான உடைகள். கொஞ்சம் சிரிப்பு. கொஞ்சம் கண்ணீர் என்று வேலையைச் சுலபமாக முடித்துக் கொண்டிருக்கிறார்.

சிரஞ்சீவி ஆரம்பம் முதல் இறுதிவரை வருகிறார். நல்ல நடிகர் என்று மற்ற படங்கள் மூலம் பெயர் பெற்றிருக்கிறார். இந்தப் படத்தில் அது கொஞ்சம் இடிக்கிறது. போட்டுக் கொண்ட மேக்கப்கூட ஒரு காரணம்.

ஏகப்பட்ட பணத்தை இறைத்துப் படம் எடுத்திருக்கிறார்கள். அதை மட்டும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம்.

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: பி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)

கைபடாத சேவரிட் சேமியா
மணக்குமே உங்கள் கைபட்டதும்!



சேவரிட் சேமியா மிக நவீனமான அயல் நாட்டு இயந்திரங்களால் மிகச் சுகாதாரமான முறையில் கைபடாமல் தயாரிக்கப்படுகிறது.

உயர்தர சம்பா கோதுமை ரவையில் தயாரிக்கப்படும் சேவரிட் சேமியா சத்து நிறைந்தது. குழைந்து போகாதது. சீக்கிரமாகச் சமைக்கக் கூடியது. மேலும், சேவரிட் சேமியாவை வறுக்க வேண்டிய அவசியமில்லை. இது சமைத்த பின்பும் பால்போல் வெண்மையாக இருக்கும்!

சிற்றுண்டிகளானாலும், பாயசம் போன்ற விசேஷ உணவு வகைகளானாலும் சேவரிட் சேமியா உங்கள் சமையலுக்கு ஊட்டமும் சுவையும் கூட்டுகிறது!

ஆகையினால்தான் குடும்பநலன் கருதும் குடும்பத் தலைவிகள் விரும்பி வாங்குவது சேவரிட் சேமியாவே!



முத்தான அம்மா சமைப்பது
சத்தான சேவரிட் சேமியா!

Savorit
சேமியா

Sista's - UIM.482.85.TM.A


இயற்கையான சந்தனத்
தைலத்தின் செழுமை
மைசூர் சாண்டல் சோப்பில் பரிமளிக்கிறது
மைசூர் சாண்டல் சோப்
. ஒரு மோகன ஸ்பரிசம்
Mysore Sandal Soap
தயாரிப்போர்: கர்நாடகா சோப்ஸ் & டிடர்ஜெண்ட்ஸ் லிமிடெட்
விற்பனை ஏற்பாடு: மைசூர் சேல்ஸ் இன்டர்நேஷனல் லிமிடெட்